கல்கி


KALKI - 5-7-81

ரூ. 1.20



"நான் செக்ரெட்டரி
ஆகையால் ஸ்மார்ட்டாக இருக்கத்தக்க உடை அணிய வேண்டுமல்லவா."





உங்கள் அந்தஸ்தே தனி
அதற்கேற்ற துணி

ம∴பத்லால்
∴பேப்ரிக்ஸ்

ம∴பத்லால் இண்டஸ்ட்ரீஸ் ம∴பத்லால் ∴பைன்

MF-4-TAM

ஆயிரம் விளக்கு தர்க்காவுக்கு எட்டு லட்சம்!

சென்னை ஆயிரம்விளக்குப் பகுதியிலிருந்த பழைய தர்க்காவுக்குப் பதில் புதிய தர்க்கா கட்டப்பட்டு ஜூன் 16ம் தேதி மாலை தொழுகைக்குத் திறந்து விடப்பட்டது. ஒரே சமயத்தில் இங்கு சுமார் ஆயிரம் பேர் தொழுகை செய்யலாம். இது ஐந்து கலசங்களை (டூம்)க் கொண்ட தர்க்கா. இது போன்று ஒருசில தர்க்காக்களே உள்ளனவாம். பொதுவாகத் தர்க்காக்களில் பெண்கள் தொழுகை செய்ய முடியாது. ஆனால் அவர்களும் தொழுகை செய்ய வசதி செய்து கொடுத்திருப்பது இந்தத்தர்க்காவின் ஸ்பெஷாலிட்டி. இதன் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் புனித குரான் வாசகங்கள் செராமிக் கற்களில் செதுக்கப்பட்டுள்ளன. விரைவில் இங்கு பல மொழிகளிலுமுள்ள இஸ்லாமிய இலக்கிய நூல்களைச் சேகரித்து ஒரு நூல் நிலையம் அமைக்கவிருக்கிறார்களாம். இதைக் கட்டி முடிக்க ஆன மொத்தச் செலவு எட்டு இலட்சம் ரூபாய். இந்தத் தொகை முழுவதையும் தந்தவர் ஒரே நபர். பெயர் அலி முகம்மது. அபுதாபியில் வியாபாரம் செய்கிறார் இவர்.

65 வயதான தர்க்காவின் தலைமை காஜி ('சர்ச்சுக்குப் பாதிரியார் போல)யான ஜனாப் குலாம் முகம்மது தலிகான் அவர்களைச் சந்தித்துத் தர்க்கா பற்றியும், இஸ்லாம் பற்றியும் கேட்டபோது சொன்னார்:


1810ல் குலாம் அஸாதுல்லா என்பவரால் முதன் முதலில் ஒரு தர்க்கா இங்கு கட்டப்பட்டது. 1936ல் அது புதுப்பிக்கப்பட்டது. ஒரு அஷிர்க்கானா என்ற கான்பிரன்ஸ் ஹாலும் கட்டப்பட்டது. தர்க்காவினை மொகரம் மாதத்தில் ஆயிரம் விளக்குகள் கொண்டு பிரகாசிக்கச் செய்வது வழக்கம். அதனால் ஆயிரம் விளக்கு தர்க்கா என்று பெயர் பெற்றது. இந்தப் பகுதிக்கும் 'ஆயிரம் விளக்கு' என்ற பெயரே நிலைத்து விட்டது.

கத்தோலிக்க கிறிஸ்தவப் பாதிரியார்கள் போல இன்றி முஸ்லிம் காஜிகள் திருமணம் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபடலாம். தம் மத சம்பந்த விஷயங்களுக்கு இடையூறு விளைவிக்காத வரையில் தொழில் செய்யவும் அனுமதிக்கப்படுவர்.

ஒவ்வொரு முஸ்லிமும் காலை நாலரை மணிக்கு 'நமஸ்சப்' என்று ஒரு முறை, பகல் ஒரு மணிக்கு நமஸ் லோகர், நமஸ் அஸார் என்று இரண்டு முறைகளும், மாலை ஆறே முக்காலுக்கு மக்ரிப், இஷா என்று இரண்டு முறைகளும் என மொத்தம் ஐந்து தொழுகைகள் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு தொழுகைக்கு முன்னரும் 'அல்லாஹு அக்பர்' என்று நான்கு முறை விளித்து விட்டு, ''இந்த உலகைப் படைத்தவனைத் தவிர வேறு கடவுள் ஒருவருமில்லை'' முகமது





1. தலைமை காஜி தலிகான்

2. புதிய தர்க்கா

ஆண்டவனின் தூதுவர்'' என்று உருது மொழியில் உரக்கச் சொல்லப்படும்.

தொழுகைக்கு முன் ஒவ்வொருவரும் கை கால், முகங்களைக் கழுவித் தம்மைச் சுத்தப் படுத்திக்கொண்டுதான் தர்க்காவினுள் நுழைய வேண்டும். அங்கு குர்ரான் பகுதிகள் படிக்கப்படும். முதலில் நேராய் நிற்க வேண்டும். பின் குனிய வேண்டும். பின் இரு கரங்களையும், விரல்களையும் சேர்த்தபடி முன் வைத்து முட்டி போட்டு அமர்ந்து, நெற்றி, உள்ளங்கைகள், முட்டிகள், முன் பாதங்கள் ஆகிய ஏழு பாகங்களும் தரையில் நன்கு படும்படி வணங்க வேண்டும். இது தான் வழிபாட்டு முறை.

தர்க்காவில் முஸ்லிம்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். காரணம் அது முஸ்லிம் ஆண்டவனைத் தொழுதற்குரிய இடம். அவர்கள் மட்டுமே நுழையலாம். வேறு மதத்தினர் உள்ளே நுழைந்தால் 'தயவு செய்து வெளியே செல்லுங்கள்' என்று அனுப்பி விடுவோம். தர்க்காவினுள் புகைப் படங்கள் எடுக்கலாம். (ஆனால் இந்தப் படங்கள் வெளியிலிருந்துதான் எடுக்கப் பட்டன.)

பெண்கள் பொதுவாக அனுமதிக்கப்படுவதில்லை. இன்று மற்ற இஸ்லாமிய நாடுகளிலெல்லாம் பெண்கள் தர்க்காவுக்கு வந்து தொழுகை நடத்துகின்றனர். நம் நாட்டுப் பெண்கள் தர்க்காவுக்கு வருவதில்லை. தொழுகைகளின்போது 'ஆண்களும், பெண்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளக் கூடாது. இருபாலாரும் பங்கேற்கும் தொழுகைகளில் இரு பகுதிகளாகத் தொழுகைக் கூடம் பிரிக்கப்பட்டு இடையே சுவரோ, திரையோ இருக்கும். அல்லது கூடத்தின் முன்புறம் ஆண்களும், பின்புறம் பெண்களும் தொழுகை செய்வர்.

தொழுகையின்போது தலையில் குல்லாய் அணிவது வழக்கம். குல்லாய் மிகவும் முக்கியமானது என்று சொல்ல முடியாது. ஆனாலும் அது பழக்கமாகி விட்டது. சிலர் கைக்குட்டையைக் கூடத் தலையில் கட்டிக் கொண்டு தொழுவார்கள்.

உண்மையான முஸ்லிம் தம் தாடியை அகற்றக்கூடாது. இது விதிகளுக்குப் புறம்பானது.

''தற்போது ஜனத் தொகை அதிகரித்தாலும், இந்துக் கோவில்கள், கிறிஸ்துவ சர்ச்சுகள், முஸ்லிம் தர்க்காக்கள் என்று எல்லாவற்றுக்கும் பக்தியுடன் செல்பவர்கள் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது என்று ஒரு கருத்து நிலவி வருகிறது. இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''

''இந்தக் காலத்து மக்களிடையே குறிப்பாக இளைய தலைமுறையினரிடையே ஆண்டவனை வணங்குதல் அவசியம் இல்லை என்று ஒரு கருத்து நிலவுகிறது என்பதை ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது. தர்க்காக்களைப் பொருத்தும் கூட இது ஓரளவு உண்மைதான். முதியவர்கள் தர்க்காவுக்கு வர முடியாது போய் விட்டால்கூட, தாம் இருக்கும் இடங்களிலேயே தொழுகை நடத்தி விடுவார்கள்.''

இரான், இராக் போன்ற நாடுகளிலும், இந்தியாவில் பனாரஸ், லக்னோ போன்ற இடங்களிலும், மற்றும் சில இடங்களிலும் உள்ள நிலையங்களில் எட்டாண்டுகள் மத சம்பந்தப்பட்ட படிப்புக்களை முடித்துவிட்டு எந்த ஒரு முஸ்லிமும் தர்க்காக்களில் தொழுகை நடத்தும் 'காஸி'யாக வரலாம். தர்க்காக்களில் தொழுகை நடத்துவதற்காக காஸிகளுக்குச் சம்பளம் உண்டு.

பேட்டி: எஸ்.சந்திரமௌலி

புகைப்படங்கள்: இமேஜ் போட்டோ கிராபிக்ஸ்

எப்படி இழந்தேன் என் நகையை...

சென்னையில் ஜூன் மாதம் முதல்வாரத்தில் மட்டும் ஐந்து வழிப்பறிச்சம்பவங்கள் நடந்தன! ஐந்து பெண்கள் 25000 ரூபாய் மதிப்புள்ள தங்கச் சங்கிலிகளை வழிப்பறித் திருடர்களிடம் பறிகொடுத்தார்கள்! மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்குமே இவர்கள் அனுபவங்கள் என்பதால் பாதிக்கப்பட்ட ஐந்து பெண்களையும் சந்திக்க முயற்சி செய்தபோது, இருவர் கோடை விடுமுறைக்காகச் சென்னை வந்தவர்கள் எனத் தெரிய வந்தது. அவர்கள் ஊருக்குச் சென்று விட்டார்கள். மற்றொரு பெண் எந்த விவரங்களையும் சொல்ல மறுத்துவிட்டார். ஆக மீதி இருக்கும் இருபெண்களும், எப்படிநகைகளைப் பறிகொடுத்தனர் என்பதைச் சொல்கிறார்கள்.

சென்னை பிராவிடண்ட் பண்ட் அலுவலகத்தில் பணிபுரியும் குமாரி ஆர். சீதா, மந்தவெளியில் வசிப்பவர்:

ஜூன்முதல் தேதி இரவு சுமார் மணி எட்டு இருக்கும். நான் இன்ஸ்டிடியூட்டி லிருந்து திரும்பிக் கொண்டிருந்தேன். மறு நாள் எனக்குச் சுருக்கெழுத்துப் பரீட்சை. அதை நினைத்தபடியே ராமகிருஷ்ண மடம் சாலை வழியாக வீட்டுக்குத் திரும்பிக் கொண் டிருந்தேன். லேசாக மழை பெய்துகொண் டிருந்தது. பி. எஸ். உயர்நிலைப் பள்ளி அருகே வரும்போது தெருக்களில் விளக்குகள் இல்லை. புடவையில் சேறு ஒட்டிக் கொண் டிருந்ததை உதறுவதற்காக நான் குனிந்த போது, போர்த்திக் கொண்டிருந்த முந்தானை விலகியது. அப்போது கழுத்தில் யாரோ தொடுவது போல் இருந்தது. சடக்கென நிமிர்ந்து திரும்பிப் பார்த்தேன். குள்ளமாக லுங்கி அணிந்த ஒருவன் என் கழுத்தி லிருந்த மூன்று பவுன் சங்கிலியைப் பறித்துக் கையில் வைத்துக் கொண்டு, திரும்பி ஓட ஆரம்பித்தான். நான் 'திருடன், திருடன்' என்று கூச்சலிட்டுக் கொண்டே அவனைத் துரத்த ஆரம்பித்தேன். சாலையை ஒட்டி யிருந்த காலியான கிரவுண்டில் வேகமாக ஓடினான். சாலையில் நடந்து போய்க்கொண் டிருந்தவர்கள் ஒருவரேனும் என் துணைக்கு வரவில்லை. எனக்கும் திருடனுக்கும் முப்பது அடி தூரம்தான் இருந்தது. பக்கத்திலிருந்த எந்த வீட்டிலிருந்தும் யாரும் கதவுகளைத்





திறந்துகொண்டு வெளியே வரவில்லை. ஆனால் சிறிது தூரம் ஓடிய பிறகு, ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசரின் மகன் (பெயரைச் சொல்ல அவர் விரும்பவில்லை.) என்னுடைய கூச்சலைக் கேட்டதும் ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு திருடனைத் துரத்த முற்படுவதற்குள் அவன் அருகிலிருந்த மயானத்துக்குள் சென்று மறைந்து விட்டான். எப்படி என் கழுத்தி லிருந்த சங்கிலியைப் பிடுங்கினான் என்பது எனக்கே தெரியவில்லை. கழுத்தில் ஒரு சிராய்ப் புக்கூட இல்லை.

நடுத்தர பிராமண குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு நகைதானே திருமணத்துக்கு ஆதாரமான பொருள். கல்யாணமாகாத பெண்கள் கழுத்தில் எதுவும் இல்லாமல் போகக் கூடாது என்று சொல்லுவார்கள். அதனால், நான் எப்போதாவது நகைகளை அணிந்து கொள்வதுண்டு. ஆனால் இப்போது நான் முடிவு செய்து விட்டேன், 'இனி நகைகளை அணியக் கூடாது' என்று. அந்தச் சங்கிலியில் குருவாயூரப்பன் டாலரை இணைத்து வைத்திருந்தேன். குருவாயூரப்பன் அருளில், திருடு போன சங்கிலி விரைவில் கிடைக்க வேண்டும் என்று தினமும் வேண் டிக்கொண்டு இருக்கிறேன்.

கார்ப்பரேஷன் பள்ளி ஒன்றில் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றும் திருமதி சரோஜினி, புரசைவாக்கத்தைச் சேர்ந்தவர், கூறுகிறார்:

இந்த வாரம் இடம் பெறும் நான்கு சிறு கதைகளின் பிரதான பாவத்தை அபிநயித்துக் காட்டுகிறவர் :

குமாரி சௌம்யா நாராயணன்

குரு: தஞ்சை திரு வாசகதேவன்

புகைப்படங்கள் : உத்ரா

ஜூன்மாதம் 2ந்தேதிஇரவு நான் தூங்கிக்கொண்டிருந்தபோது இந்தத் திருட்டு நடந்தது. நாங்கள் இருப்பது மாடி போர்ஷன். தெருவிலிருந்து தாழ்வாரத்தின் மேல் இருக்கும், ஓடு போட்டிருக்கும் கூரை வழியாக மாடிக்கு ஏறி வந்துவிடலாம். வெய்யில் காலமானதால் ஒரு கதவைச் சற்றே திறந்து வைத்துப் படுத்துக் கொண்டிருந்தேன். என் அருகில், கணவரும், குழந்தைகளும்படுத்துக் கொண்டிருந்தார்கள். நான் எப்போதுமே கழுத்தில் இருந்த சங்கிலியின் அடிப் பாகத்தையும், தாலியையும் ஒரு பின்னில் கோத்து ரவிக்கையுடன் இணைத்து வைத்திருப்பேன். எல்லாப் பெண்களுமே இதே மாதிரியாகச் செய்து கொண்டால் திருடர்கள் எளிதில் நகைகளைப் பறிக்க முடியாது. மாடியில் ஏறி வந்த திருடன் சற்றுத் திறந்திருந்த கதவின் வழியாக முதலில் என்னைத்தான் பார்த்திருக்க வேண்டும். இரவு விளக்கின் ஒளியில் பளபளத்துக் கொண்டிருந்த என் சங்கிலி அவனைக் கவர்ந்திருக்க வேண்டும். சங்கிலியைக் கையால் இழுத்திருக்கிறான். ஆனால் பின் கோத்து ரவிக்கையுடன் இணைத்து வைத்திருந்ததால் பாதி சங்கிலி தான் அவன் கைக்குச் சென்றது. நல்லவேளை என் தாலியை அவன் பறிக்கவில்லை. அந்தச் சங்கிலி இரண்டு பவுன் இருக்கும். நான் 'ஓ'வென்று அலறித் துடித்துக்கொண்டு எழுந்தேன். என் கூச்சலைக் கேட்டு என் கணவரும் எழுந்து திருடனைத் துரத்த முற்பட்டார். ஆனால் கண்ணிமைக்கும் நேரத்துக்குள் ஓட்டின் மேல் குதித்து அங்கிருந்து ஏழடி கீழ் உள்ள சாலையில் குதித்து மின்னலெனப் பறந்து விட்டான் திருடன். முகத்தைப் பார்க்கவே முடியவில்லை. இரவு இரண்டரை மணிக்கு இது நடந்தது. எனக்குக் கழுத்தில் அழுத்தமான காயம் ஏற்பட்டது. அது குணமாகப் பத்து நாள் ஆகியது.

நான் சொல்வதெல்லாம் பெண்கள் நகை போடும் பழக்கத்தை விட்டொழிக்க வேண்டும். அப்படியே போட்டுக் கொண்டுதான் ஆகவேண்டும் என்றால் ஏதாவது வீட்டில் விசேஷம் வரும்போது போட்டுக் கொண்டு இருக்கலாம். மற்றபடி நகைகளை பாங்கில் பாதுகாப்புப் பெட்டிகளில் வைத்துவிடுவது நல்லது.

பேட்டி. ப்ரியன்



ஜானகி சுப்பிரமணியம்



மைலாட்டூர் கைலாசம்



எஸ். வைத்தியசுவாமி



ஞாநி

பள்ளிகள் செய்திகள்

பம்பாயிலும்புதுதில்லியிலும் இந்த மாதத் துவக்கத்தில் ஆதிசங்கரர் இயற்றிய ஸ்தோத்திரங்கள் ஒருபெண்மணியின் இனிமையான குரலில் ஒலிப்பதிவாகி 'டேப்'பாக வெளியாகியிருக்கிறது. குரலுக்குரியவர்: ஸ்ரீமதி ஜானகி சுப்பிரமணியம். தேச பக்தியிலும், சமூக சேவையிலும் ஊறிய குடும்பத்தில் வந்த ஸ்ரீமதி ஜானகி, தெய்வ பக்தியில் மட்டும் குறை வைப்பானேன்' என்று நினைத்திருப்பார் போலும்.'

'டேப்'பின் ஒரு பக்கம் ஸ்வஸ்தி ஸ்லோகம், சம்பநடன் ஸ்தோத்திரம், சுமார் பதினெட்டு நிமிடத்துக்குப் புதுப் பெரியவர்கள் வழங்கியுள்ள அருள்வாக்கு. தோடகாஷ்டகம் - சங்கர ராகத்திலேயே!

மறு பக்கம் ஷண்மத ஸ்தாபனு, அச்சுத அஷ்டகம், பவானி அஷ்டகம், பஜகோவிந்தம்.

இல்லங்களில் பக்திச் சூழ்நிலையுடன் காலை புலர, நல்லதொரு திருப்பணி செய்திருக்கிற ஸ்ரீமதி ஜானகி, இன்னொரு தகவலையும் வெளியிட்டார்:

இந்த டேப்பின் விற்பனை மூலம் திரட்டப்படும் நிதியில் பெரும் பங்கு காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயத்துக்குச் செலுத்தப்படுகிறதாம். டேப்பைத் தயாரிக்கும் பம்பாய் மோவாக் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் சென்னையிலும் இந்த 'கேஸட் டேப்'பை வெகு விரைவில் விழா ஒன்றில் வெளியிடும்.

● கச்சேரி 'ஸெட்'டில் புதுமையான மாறுதல்களைச் செய்து வெற்றி காண்பவர் — கிருஷ்ண கான சபா செயலாளர் திரு யக்ஞராமன். இந்த வருஷம் கோகுலாஷ்டமி சங்கீத வரிசையில் புதுமை ஏதேனும்....?

உண்டாம். திரு செம்மங்குடி அவர்களின் பாட்டுக்கு லால்குடியின் புதல்வர் திரு ஜி. ஜே. ஆர். கிருஷ்ணன் வயலின் வாசிக்கப் போகிறார் என்று தெரிவித்தார், சபாவின் இணைச் செயலாளர் திரு வெங்கடேசுவரன்.

இளைஞரை ஊக்குவிக்க முன்வந்ததாய்ப் பெரியவருக்குப் பெருமை. எடுத்த எடுப்பிலேயே செம்மங்குடிக்கு வாசிக்கக் கிடைத்ததில் இளைஞருக்கும் பெருமை. ரசிகர்கள் இப்போதே போஷ் போடுகிறார்களாம்!

● இந்திரா பார்த்தசாரதியையும் பாதல் சர்க்காரையும் தமிழ் நாடக மேடைக்கு அறிமுகப்படுத்திய 'பரீக்ஷா'வின் ஞாநிக்கு, இந்த ஆண்டு மத்திய கல்வி அமைச்சகத்தின் கலாசாரப் பிரிவு, நாடகத் துறைக்கான இரண்டாண்டு கால ஸ்காலர்ஷிப் (மாதம் 350 ரூபாய்) வழங்கியிருக்கிறது. ஞாநி என்ன செய்யப் போவதாக உத்தேசம்?

''கோழிக்கோடு பல்கலைக் கழக ஸ்கூல் ஆஃப் டிராமாவின் உதவி இயக்குனரும் என் வழிகாட்டியுமான திருச்சூர் திரு எஸ். ராமானுஜன் கீழ், நாடகத் துறை பற்றி மேற்கொண்டு ஆராய்வது என் நோக்கம்'' என்றார்.


● இரண்டு வயதிலேயே போலியோவினால் கால்கள் இரண்டும் பாதிக்கப்பட்ட பிரபலமான நபர் ஒருவருக்கு, நீச்சல் கற்றுக் கொடுக்கிறார் நீச்சல் பயிற்சியாளர் திரு எஸ். வைத்தியசுவாமி. கற்றுக்கொண்டவர்: திரு ராமகிருஷ்ணன் (இந்தியன் வங்கியின் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி — டி.வி. செய்தி வாசிப்பாளர்). பெண்ணை நீச்சல் கற்றுக் கொள்ள அழைத்து வந்தவரை நோக்கி ''ஏன் நீங்களும் கற்றுக் கொள்ளக் கூடாது?'' என்றார் திரு வைத்தியசுவாமி.

ஒரு வாரமாகக் கற்றுக் கொள்ளும் திரு ராமகிருஷ்ணன், கால்களின் உதவியின்றியே நீச்சல் பயிற்சியில் வெகுவாக முன்னேறி விட்டதாகப் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

● ஊனம் உற்றாலும் உற்சாகம் இழக்காத இன்னொரு இளைஞர் — பார்வை இழந்த மைலாட்டூர் வி. கைலாசம். ஏற்கனவே பல கச்சேரிகள் நிகழ்த்தியுள்ள இவர், சமீபத்தில் 'யுவசங்கீத்' என்ற கர்நாடக இசைக் குழுவின் அமைப்பில் பாடினார். (குரு: திரு பி. ராஜம் அய்யர்.)

இந்தத் தமிழ்ப் புத்தாண்டு தினம் உதயமான 'யுவசங்கீத்' முழுக்க முழுக்க இளைஞர்களால் இளைஞர்களுக்காக நடத்தப்படும் கர்நாடக இசைக் குழு. இது உருவாகக் காரணமானவர்களில் முக்கியமானவர், வீணை கலைஞர் திரு பிச்சுமணியின் புதல்வர் சந்திரசேகர்.

—சாருகேசி



சும்மா புடிச்சுகிட்டு இருக்கேன் அவ்வளவு தான்!.. வாரி உடறது என் நோக்கம் இல்லே!
உங்க புகைச்சல்லே என் மூச்சு திணறுதே!
ஜனநாயகம்
இப்ராகிம் ராஜிநாமா கோரி தர்ணா
எதிர்க் கட்சி எம்.எல்.ஏ.க் களுக்குத் தற்காலிகத் தடை
எதிர்க் கட்சிகள்
அர்ஸ்
குண்டு ராவ்
கருத்து வேறுபாடுகள்
Zuma.

வழியில் பயமில்லை; மடியில் கனமில்லையா?

தமிழக அரசும் கேரள அரசும் எரிசாராய ஊழல் குற்றச் சாட்டுக்களை ஆராயத் தனித்தனியே இரு சதாசிவம் கமிஷன்களை நியமித்த பின்னர், மத்திய அரசு மேலும் ஒரு ரே கமிஷன் அமைத்திருப்பதிலிருந்து இரண்டு விஷயங்கள் தெளிவாகின்றன.

1. மாற்றுக் கட்சிகள் பிறமாநிலங்களில் பதவியில் இருப்பதை இந்திரா காங்கிரஸால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

2. நீதித்துறைக்கும் மேலான நீதிபதியாகத் தன்னைப் பாவித்துக் கொண்டு நீதித்துறை மீதே தீர்ப்பு வழங்கும் போக்கை இந்திரா காங்கிரஸ் மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை.

மாற்றுக் கட்சி ஆட்சியினை எப்படிக் கவிழ்ப்பது என்பதே யோசனையாக உள்ள இந்திரா காங்கிரஸ் அரசு, எரிசாராய ஊழல் என்ற ஒரே கல்லில் தமிழ் நாடு, கேரளம் ஆகிய இரு மாங்காய்களை வீழ்த்தி விடப் பார்க்கிறது.

இரு சதாசிவம் களிடமும் தனக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்லாமல் சொன்னதன் மூலம் இந்திரா காங்கிரஸ் அரசு, நீதித்துறையை மீண்டும் ஒரு முறை அவமதித்திருக்கிறது.

மூன்று நீதிபதிகளும் மூன்று வித தீர்ப்புக்களை வழங்கினால் மத்திய அரசு என்ன செய்யும்? அப்போது கிளர்ந்தெழக் கூடிய நேரடி மோதலை எப்படி சமாளிக்கும்? சிறிதும் முன் யோசனையற்ற காரியம்.

ரே கமிஷனை நியமிக்கத்தான் செய்ததே மத்திய அரசு. அதைச்சற்று புத்திசாலித்தனமாகச் செய்ததா என்றால் அதுவும் இல்லை. கருணாநிதி ஆட்சிக் காலத்தையும் சேர்த்துக் கொண்டிருந்தால் இங்குள்ள சதாசிவம் கமிஷன் தனியே இயங்க அவசியமில்லாது போயிருக்கும். ஆனால் கருணாநிதியைத் திருப்திப்படுத்துவதற்கென்றே நியமிக்கப் பட்ட ரே கமிஷனை கருணாநிதி ஆட்சிக் காலத்தையே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளச் செய்வதில் மத்திய அரசுக்கு உள்ள தர்ம சங்கடம் நமக்குப் புரிகிறது. இதுவே சதாசிவம் கமிஷனைக் கலைக்காதிருக்க எம்.ஜி. ஆருக்கு ஒரு வாய்ப்பாகவும் அமைந்து விட்டது.

சதாசிவம் கமிஷன்கள் கேரளத்திலும் தமிழகத்திலும் செயலாற்ற, ரே கமிஷன் புதுதில்லியிலிருந்தவாறே இயங்குமாம்! இதை விட அபத்தம் இருக்க முடியுமா? நாட்டின் வட கோடியில் இருந்துகொண்டு தென் கோடியில் நடந்தவற்றை ஆராயப் போகிறாரா ரே? மாநில அரசுகள் ஒத்துழைப்புத் தருவதென்றாலும் அதிகாரிகளும் சாட்சிகளும் தில்லிக்கும் சென்னைக்குமாக - தில்லிக்கும் திருவனந்த புரத்துக்குமாக எத்தனை காலம் எத்தனை முறை அல்லாடுவது?

ஊழல் அல்லது முறைகேடு என்பது வேறு, அந்த ஊழலை யொட்டி அதிகாரத்திலிருப்போர் பெற்ற லஞ்சம் அல்லது ஆதாயம் என்பது வேறு. இரண்டில் ஏதேனும் ஒன்று நிரூபணமானால் கூட எம். ஜி. ஆருக்குத் தலைகுனிவு தான். அவரது ராஜினாமாவைக் கோரலாம்தான்.

ஆனால் ஊழலை விசாரிக்க நியமிக்கப்பட்ட சர்க்காரியா கமிஷனுடன் ஒத்துழைக்கவே மாட்டேன் என்று கூறி பகிஷ்கரித்தவரை விட, ஊழல் குற்றச் சாட்டை யொட்டித் தாமே கமிஷன் நியமிக்க முன் வருவதுடன் மத்திய அரசு அமைத்த கமிஷனுக்கும் ஒத்துழைப்புத் தருகிறேன் என்று கூறுகிறவர் பல படி உயர்ந்தவராகிறார் நம் மதிப்பில்.

வழியில் பயமில்லை என்று கூறியுள்ளார் எம். ஜி. ஆர். அவர் மடியில் கனமில்லையா என்பதைக் கமிஷன் தீர்ப்பு விளக்கும்.

1981 ஜூலை 5
துன்மதி ஆனி 21
மலர்: 39 இதழ்: 49



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

நியூஸ் ஜூஸ்



சஞ்சய் தபால் தலைகளைக் கேரளத்தில் சில இளைஞர்கள் கொளுத்தி யிருக்கிறார்கள். தேவையற்ற ஆர்ப்பாட்டம்.

தபால் தலைகள் ஒருசிலரைக் கௌரவிப்ப தற்காக மட்டும் வெளியிடப்படுவதில்லை. அவை மக்களுடைய கலாசாரத்தைப் பிரதி பலிக்கின்றன; நாட்டின் இயற்கை வளர் களைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. தேசத் தின் சரித்திரத்தையும் பேசுகின்றன.

நமக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, பாரத நாட்டின் சரித்திரத்தில் சஞ்சய் ஓர் அத்தி யாயம்தான்.

இன்று இழித்துரைக்கப்படும் பலருக்கு நேற்று தபால் தலை வெளியிட்ட நாடுகள் உலகில் பல உண்டு.

காளிமுத்து Vs – மக்வானு ரோஷமான குத்துச் சண்டையினைத் தமிழகம் கண்டது.

''மத்திய அரசு மாநில மாற்றுக் கட்சி ஆட்சிகளைக் கவிழ்க்கப் பார்க்கிறது'' என்று காளிமுத்து கொடுத்த 'பஞ்ச்'சில் போதைல் என்று விழுந்தார் மக்வானு:

''ஒன்....டூ....த்ரீ...விசில்....''

தட்டுத் தடுமாறி எழுந்த மக்வானு, ''ஆட் சியைக் கவிழ்க்கும் எண்ணம் ஏதும் எமக் கில்லை; நடிகர் கட்சி இங்கு ஆள்கிறது எனவே அமைச்சர்களும் நாடகமாடுவதில் வியப் பில்லை'' என்று ஒரு அப்பர் கட் தந்தார். காளிமுத்து தடுமாற, அத்தருணத்தை நழுவ விடாமல், ''நாங்கள் ஆட்சியைக் கவிழ்க்கப் போவதில்லை; ஆனால் தமிழக அரசு தன்னைத் தானே கவிழ்த்துக் கொண்டால் நாங்கள் என்ன செய்ய முடியும்?'' என்று ஒரு 'ஜம்' குத்து விட்டார். அது, 'பெல்ட்டு'க்குக் கீழே தாக்குவதாக அமையவே பார்வையாளரிட மிருந்து ''ஃபௌல்! ஃபௌல்!'' என்று ஏகக் கூச்சல்!

பிறகு, காளிமுத்துவுக்குப் பதில் ப. உ. சண்முகம் கோதாவில் இறங்கினார். ''மத்திய அரசு விசாரணைக் கமிஷன் அமைத்தால் ராஜிநாமா செய்வதாக எம். ஜி. ஆர். எப் போது சொன்னார்? அவர் கருத்தைக் கூறிய தாக மக்வானு கதை விடலாமா?'' என்றும் ''மீனாட்சிபுரம் சம்பவம் குறித்து மக்வானு இரு இடங்களில் இரு விதமாகப் பேசலாமா? எதை நம்புவது?'' என்றும் 'பாராஜ்' குத் துக்கள் வழங்கி மக்வானுவை 'நாக் அவுட்' செய்துவிட்டார்!

எம். ஓ. மத்தாய், தமது எஜமானர் நேரு பற்றிப் புத்தகம் எழுதியபோது பலர் மத் தாயை ஏசினார்கள், தூற்றினார்கள். ஆனால் இப்போதோ நேருஜி பற்றிமேலும் ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. அவர் பத்மஜா நாயுடுவுக்கு எழுதிய 51 கடிதங்கள் பிரசுர மாகியுள்ளன. பக்கம் பக்கமாகக் காதலைக் கொட்டி, அன்பைச் சொரிந்து எழுதியுள்ள இலக்கியத் தரம் வாய்ந்த கடிதங்கள்! இக் கடிதங்களுக்கும் சரோஜினி நாயுடுவின் மகள் பத் மஜா, அழகியல்ல. அவரை அழகற்றவள் என்றேசொல்லிவிடலாம். இருவருக்கும்இடை யில் வயது வித்தியாசமோ முப்பதுஆண்டுகள். இருப்பினும் என்ன, நேருஜிக்கு அவள் மீது மோகம்! 'வெளி உலகுக்குத் தெரியவாராமல் இந்தக் காதலை மறைத்து வைக்க நேருஜி எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்; எவ்வளவு விரகதாபம் அனுபவித்திருப்பார்' என்று எண் ணும்போது அவர்மீது அனுதாபமே ஏற் படுகிறது.

ரே கமிஷன் நியமிக்கப்பட்டதுமே அ.இ. அ.தி.மு.க. அமைச்சரவை ராஜினாமா செய்ய வேண்டும் என்று கூறும் மக்வானு,

கர்நாடக அமைச்சரவையில் இப்ராஹிம் நீடிப்பது பற்றி வாய் திறவாதது நமக்கு வியப்பளிக்கவில்லை.

டில்லி மாமியாருக்கு எம். ஜி. ஆர். அரசு மருமகள் எனில், குண்டு ராவ் அரசு சொந்த மகளல்லவா?

ஒரு ஊழல் குற்றச்சாட்டில் ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா என்று ஆராய நிய மிக்கப்பட்டது ரே கமிஷன்.

ஆனால் இப்ராஹிம் மீதோ கர்நாடக அரசே வழக்குப் பதிவு செய்துள்ளது; கேஸ் நடத்தப் போகிறது. ஒரு பெண்மணியைப் பலவந்தமாகக் கடத்திச் சென்றதாக வழக்கு!

இப்ராஹிம் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற எதிர்க் கட்சிகளின் அறிக்கை, சத்தியாக் கிரகம், கிளர்ச்சி, தந்தி போன்ற எதையும் கண்டுக்காமல் இருக்கிறாள் செல்லப் பெண் ணின் டில்லி தாயார்.

குண்டு ராவ் குண்டு தைரியத்துடன் தாம் நடந்துகொள்வதாக எண்ணலாம்; ஆனால் அது அசட்டுத் தைரியம் என்பது சீக்கிரமே தெளிவாகும்.

காதலர்கள்!

நேரு



பத்மஜா



இடைத்தேர்தலில் முறைகேடுகள்

கேள்வி: கார்வால் (உ.பி.) தொகுதியில் இடைத் தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாகக் கூறி, மறு தேர்தல் நடத்த தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளதே, இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

காமராஜ் காங்கிரஸ் கட்சித் தலைவர் நெடுமாறன் பதில்:

'நமது தேர்தல் கமிஷன் நியாயமான தீர்ப்புக் கூறி, சுதந்திரமாகச் செயல்பட்டிருப்பது மிகவும் பாராட்டத் தக்கது. தேர்தல் கமிஷன் ஒரே ஒரு புகாரை மட்டும் எடுத்துக் கொண்டு தேர்தலை மறுபடியும் நடத்த உத்தரவிட்டுள்ளது. அதாவது கமிஷனின் அனுமதி இல்லாமல் வெளி மாநில போலீஸாரைத் தொகுதிக்கு அனுப்பியது தவறாகும் என்பது தேர்தல் கமிஷனின் கருத்து. ஆனால், இதைத் தவிர வேறு பல முறைகேடுகளும் நடந்துள்ளன.

கார்வால் பாராளுமன்றத் தொகுதி ஐந்து சட்ட மன்றத் தொகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு சட்ட மன்றத் தொகுதிக்கும் ஒரு முதல்வர் பொறுப்பாக இருந்தார்.

இவர்கள் உத்தரப் பிரதேசம், பஞ்சாப், ஹிமாசல் பிரதேசம், ஹரியானா, பீகார் மாநில இந்திரா காங்கிரஸ் முதல்வர்கள். இந்த மாநிலங்களைச் சேர்ந்த ஐம்பது மந்திரிகள் பிரசாரத்தில் ஈடுபட்டனர். நேரு முதல், மொரார்ஜி வரை, எந்தப் பிரதமரும் இடைத் தேர்தலில் பிரசாரம் செய்ததில்லை. சம்பிரதாயத்துக்கு மாறாக இந்திரா காந்தி இந்த இடைத் தேர்தலில் பிரசாரம் செய்தார். மொத்தம் நான்கு நாட்கள் கார்வால் தொகுதியில் மட்டும் பிரசாரம் செய்தார். ''இந்தத் தொகுதிக்கு பகுகுணாவைத் தேர்ந்தெடுத்தால், எந்த வளர்ச்சிப் பணியுமே இங்கு நடக்காது'' என்று வேறு கூறினார். இது மிகவும் கண்டிக்கத்தக்கது. ஜனநாயக விதிமுறைகளை மீறியது. ஒரு பிரதம மந்திரி இவ்வாறு பேசியது மிகவும் வருந்தத் தக்கது.

ஹரியானாவைச் சேர்ந்த போலீஸார் கார்வால் பகுதிக்கு அனுப்பப்பட்டனர். அதுவும் எவ்வளவு பேர்? சொன்னால் நம்ப மாட்டீர்கள். 24000 போலீஸார் அனுப்பப்பட்டனர்! இது தவிர உத்தரப் பிரதேசப் போலீஸ். வன்முறைக்குப் பெயர் போன பிரதேச ஆயுதப் படை வேறு. எனக்கு வந்த தகவலின்படி ஒரு வாக்குச் சாவடிக்கு 500 போலீஸார் அனுப்பப்பட்டார்கள். இவர்கள் அமைதியான வாக்குப் பதிவு நடத்த உதவவில்லை. மாறாக வாக்குப் போடும் மக்களை மிரட்டி வாக்குகளைப் போடாமல் செய்யும் வழியையே கையாண்டார்கள். 12 ஹெலிகாப்டர்கள் உபயோகிக்கப்பட்டன. ஆனால் தேர்தல் கமிஷன் தனது வேலைக்கு ஒரு ஹெலிகாப்டர் கேட்டபோது ஏதோ சாக்குப் போக்குக் கூறி, தர மறுத்து விட்டது உ.பி. அரசு. இவ்வளவும் எதற்காக? பகுகுணா என்ற தனி மனிதரைத் தோற்கடிப்பதற்காக. ''இந்திரா காந்தி அலையில் நான் சென்ற தேர்தலில் வெற்றி பெறவில்லை. என் தனிப்பட்ட செல்வாக்கிலேயே வெற்றி பெற்றேன்'' என்று கூறித் தேர்தல் களத்தில் பகுகுணா குதித்ததன் விளைவு. இதை ஒரு கௌரவப் பிரச்னையாக இந்திரா எடுத்துக் கொண்டதால்தான் இவ்வளவு முறைகேடுகள் நடந்துள்ளன.

அதிகார பலத்துடன் கூடிய பிரதமர், முதல்வர்கள், அமைச்சர்கள், ஆகியோர், இடைத் தேர்தலில் பிரசாரம் செய்வதற்குத் தடை விதிக்க வேண்டும்.



இடைத் தேர்தல்களில் கட்சித் தலைவர்கள் தான் பிரசாரம் செய்ய வேண்டும். பொதுத் தேர்தல் என்றால், எல்லா அரசுகளும் ராஜினாமா செய்துவிட்டு, ''காபந்து அரசு'' நடக்கும்போதுதான் பொதுத் தேர்தல் நடத்த வேண்டும். அப்போது முறைகேடுகள் நடக்காது. அரசின் அதிகார வர்க்கம் அச்சமின்றி நியாய உணர்வுடன் நடந்து கொள்ளும்.

ஹிட்லர், முஸோலினி போன்றவர்கள் தனக்கு வேண்டிய அடியாட்களை வைத்துக் கொண்டு பாசிச முறையில் தேர்தல் நடத்தியதைப் போல், இந்திரா அரசும் கார்வால் தொகுதியில் இந்த இடைத் தேர்தலை நடத்தியது. இந்த இடைத் தேர்தலில் பிரசாரம் செய்ததன் மூலம், அதில் நடந்த முறைகேடுகளுக்குத் தார்மீக ரீதியாகப் பொறுப்பாகி விட்டார் இந்திரா காந்தி. எனவே, அவர் ராஜினாமா செய்ய வேண்டும் என்பது தார்மீக ரீதியான விதி. குறைந்த பட்சம், உ. பி. அரசாவது ராஜினாமாச் செய்ய வேண்டும். ஆனால் ஆணவம் தலைக்கேறியிருக்கும்போது தார்மீகக் குரல் காதில் ஏறவா போகிறது? பேட்டி: ப்ரியன்

ஒரு கேள்வி - ஒரு பதில்

சுவர்ணமுகி

ஸ்ரீவேணுகோபாலன்

முன்கதை

சுவர்ணமுகி திருப்பதி போய்விட்டு வரும்போது அவளது வளர்ப்புத் தந்தை ரங்கப்பா போரில் இறந்தார் என்ற செய்தி வருகிறது.

செய்தியைக் கொண்டுவந்த அர்ச்சுனன் அவளை எச்சரித்துவிட்டு, மீளா மரண அவஸ்தையில் விழுகிறான். போர்க்களத்தில் நிறையக் காயம் பட்டிருந்தான் அவன்.

சுவர்ணமுகி நேராக நாராயண வனத்து வீட்டுக்குப் போக, அங்கே ரங்கப்பாவின் மனைவியும் மக்களும் கொலை செய்யப்பட்டுக் கிடப்பதைப் பார்க்கிறாள்.

வீட்டில் ஒளிந்திருந்த நரசய்யா என்கிற பிரதானி சுவர்ணமுகியைப் பிடித்து 'விஜயநகரப் பொக்கிஷம் எங்கே?' என்று கேட்கிறான். அவளை உள்ளே அழைத்துப்போகும் சுவர்ணமுகி, ஒரு தந்திரத்தில் அவனை விட்டுத் தப்பிவிடுகிறாள்.

இரவெல்லாம் நடந்து நாகலாபுரத்தை அடைகிறாள். தனது சிநேகிதி திருமலாம்பாவின் கணவன் நாராயணராஜு சுவர்ணமுகியையும் தனது ஒரு மகனையும் வான் கோயன் என்ற ஒலாந்திய னுக்கு (டச்சுக்காரன்) விற்றுவிடுகிறான். நாடெங்கும் பஞ்சம். ஜனங்களுக்கு உணவு இல்லை. அவர்கள் தங்கள் குழந்தைகளை வெள்ளைக்காரர்களுக்கு அடிமைகளாக விற்கிறார்கள். இந்த விவரமெல்லாம் சுவர்ணமுகிக்குத் தெரிய ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைகிறாள்.

வான் கோயன் அவளை ஸாந்தோமே (ஸாந்தோம்) கடற்கரை நகருக்குக் கொண்டு போய் கப்பலில் ஏற்ற முயலும் போது ஃபிரான்ஸிஸ் டே என்னும் வெள்ளைக்காரன் அவளைப் பார்க்கிறான். இங்கிலாந்து திரும்பிக் கொண்டிருந்த டிரேக் ராஜர் என்ற இன்னொருவனும் பார்க்கிறான். இருவரும் சுவர்ணமுகியை வாங்கு வதற்குப் போட்டி போடுகிறார்கள். இதற்காக ட்யூயல் நடத்த ராஜர் காயமடைகிறான். சுவர்ணமுகி அவன் பாதுகாப்புக்கு வருகிறாள்.

ராஜர் குணமாகி அவளை வெங்கடகிரிக்கு அழைத்துச் செல்லும் பாதையில் இருவரும் பஞ்சக் காட்சிகளைப் பார்க்கிறார்கள்.



இதற்கிடையில் அர்ச்சனன் என்ற வீரன் சிலர் உதவியால் குணமாகி எழுந்ததும் அவனது நண்பன் தோதா என்பவன் அவனுக்குத் துரோகம் செய்து விட்டு எதிரிகளோடு உறவாடிவிட்டதை அறிந்து வெகுவாகத் துடிக்கிறான்.

சுவர்ணமுகியைத் தோதாவின் வஞ்சகத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று அவளைத் தேடிப் புறப்படுகிறான்.

தோதா என்பவன் எதிரிகளின் பிரதானி நரசய்யாவைச் சந்திக்கிறான்.

ரங்கப்பா குழுவினரிடம் நண்பன் போல் நடித்து அவர்கள் ரகசியங்களை அறிந்து வந்திருப்பதாகக் கூறுகிறான். பழைய ராஜா ஸ்ரீரங்கனின் மகள்தான் சுவர்ணமுகி. அவளுக்கு 'விஜயநகர பொக்கிஷம்' இருக்கும் இடம் தெரியும் என்று அவன் தெரிவிக்கிறான். மேலும் அவளை எப்படியாவது பிடித்துக் கொண்டு வருகிறேன் என்று சொல்லிப் புறப்படுகிறான்.

அவள் பிரயாணித்தும் போகும் வழியில் ட்ரேக் ராஜா் சுவர்ணமுகியுடன் வந்துகொண்டிருக்கிறான்.

ராஜா் ஏற்கனவே தோதாவுக்கு அறிமுகமானவன். ஆனால் எதிரிக்கு வேலை செய்கிறான் என்று தெரியாது. ஆகவே சுவர்ணமுகியை அவனிடம் ஒப்படைக்க, தோதாவும் மனத்துள் மகிழ்ச்சியடைந்து அவளை வஞ்சகமாக அழைத்துக் கொண்டுபோய் ஒரு மாளிகையில் வைக்கிறான்.

இதற்கிடையில் அர்ச்சனதேவன் சாந்தோமேயில் சுவர்ணமுகியைத் தேடி அலைகிறான்.

இனி மேலே படிக்கலாம்.

14

''ஏன் எங்கள் மீது குறை காண்கிறார்கள்? அவர்களும் எங்களைப் போல் பெண்கள்தானே? தங்கள் கணவன்களைத் தங்கள் மீது காதலோடு இருக்க வைப்பதற்கு இவர்களிடம் சாமர்த்தியம் இல்லையா? நாங்களா இவர்கள் கணவர்களை இவர்கள் வீட்டிலிருந்து தூக்கி வந்தோம்? இவர்களுக்குத் தங்கள் கணவர்களை வசியப்படுத்தத் தெரியவில்லை.''

ஒரு ராஜாவைக் கவர்ந்ததற்காக ராணி குறை கூற அதற்கு பகபுலேட்டி ரங்காஜம்மா கூறிய பதில்.
(தெலுங்குக் கவிதையின் மொழி பெயர்ப்பு)

• • •

அர்ச்சனன் விழித்தபோது, பரந்த மணல் வெளியில் கிடந்தான்.

மேலே இரக்கமில்லா வானம்.

கீழே வாணலியாக மணல்.

திடுக்கிட்டு எழுந்து பார்க்க கிழக்கே கடல் கிவெள்ளியாகத் திகழ்ந்தது.

மேற்கே, ஒரு சின்னக் குன்று போன்ற மேட்டின் மேல் சாந்தோமேயின் மண் கோட்டை, சூலைக்கொத்தளங்களுடன். சில மாடிக் கட்டிடங்கள் மேலே தலை நீட்டின.

போர்த்துக்கீசியக் கொடி மதியவெய்யிலில் வெறும் கருணையாகச் சோர்ந்திருந்தது.

என்ன கோபம் வந்தது அர்ச்சனனுக்கு!

மீசை பொத்துக் கொண்டு துடித்தது.

எங்கே அவனது ஆட்கள்? எங்கே பல்லக்கு? எங்கே பணப் பை? எங்கே மோதிரம்?



ஆ! அந்தப் போர்த்துக்கீசிய வஞ்சமிகள்! அவர்கள்தானே இப்படிச் செய்தது!

மயக்க மருந்து கொடுத்து எல்லாவற்றையும் பிடுங்கி, இந்த மணல் மீது கடாசி விட்டது அவர்கள்தானே?

அவர்கள் மட்டும் கிடைத்தால்... கடைவாய் நறநறத்தது.

எழுந்தான்.

காலில் இன்னும் பூரண குணம் ஏற்படவில்லை. நொண்டித்தான் நடக்க முடிந்தது. மணல் ஒரு பாலை வெள்ளையாகத் தெரிய மெல்ல மெல்ல அடிவைத்து, ஸாந்தோமே குன்றின் அடிவாரத்தை அடைந்தான்.

அந்த நாளில் கடல் வெகு தூரம். கீழே இருந்தது. ஸாந்தோமே ஒரு மேட்டின் மேல் தொத்தியிருந்தது.

வெறுப்புடன்கோட்டையைப்பார்த்தான்.

ஆகா! விஜயநகரம் மட்டும் இப்போது மகோன்னத நிலையில் இருந்தால்...

இந்தப் போர்த்துக்கீசியர்கள் இங்கே அட்டகாசமாய் இருப்பார்களா? என்ன அநியாயங்களை வேண்டுமானாலும் செய்வார்களா?

கோட்டைக்கு இடது பாரிசம் வழியாகச் சின்னப் பாதை. அதில் தாங்கலாக அடி வைத்து நடந்து, மாலையில் மயிலாப்பூர் மாட வீதியை அடைந்தான். தெருவில் வரும்போது திடீரென்று விருது வாத்தியங்கள் முழங்கியது கேட்டு, நாலைந்து வீடு தள்ளி வாசலில் பரிவாரம் கூடியிருப்பதை அறிந்தான்.

பக்கத்தில் போய்ப் பார்த்ததும் மனம் பந்து போல் துள்ளி எகிறியது.

பிரசித்தி பெற்ற நாட்டியக்காரி சந்திரரேகா அவள்! நாட்டிலே அவள்தான் பேரழகி. அவள் நாட்டியம் மிகவும் கீர்த்தி பெற்றது. அந்த யௌவன அழகி அங்கே தென்பட அவள் அருகில்,

சிந்தாமணி நாட்டியத்தில் தேர்ந்த சம்பகவல்லி, ஜக்கிணி நாட்டியத்தில் தேர்ந்த மூர்த்தியம்மா, குரவையில் தேர்ந்த கோமளவல்லி, தேசியில் தேர்ந்த சசிரேகா

ஆகிய நால்வரும் நான்கு தேவதைகள் போல் நின்றார்கள்.

பரிவாரத்தை விலக்கி உள்ளே போய், ''சந்திரரேகா! இதுஎன்ன? இங்கே எப்படி வந்தீர்கள்?'' என்று ஆச்சரியமுடன் கேட்க

''ஆ, நம்ப சுவாமி!'' என்று தெலுங்கு தொனி சிந்தக் கூறிய சந்திரரேகா, அருகில் வந்து,

''சுவாமி! சண்டை நடந்ததே! நம்ப ராஜா பக்கம் உள்ள எல்லோரும் இறந்தார்கள் என்றார்களே! தாங்கள் எப்படித் தப்பினீர்கள்? வேங்கட மகாராஜா எங்கே? அவருடைய பிரதானிகள் எங்கே? எல்லோரும் எங்கே போய் மறைந்து விட்டார்கள்?''

என்று நிருத்திய நாடகத்தில் ஒரு பாத்திரம் வினவுவது போல் சுவரம் போட்டுக் கேட்டாள்.

இதற்குள் சம்பகவல்லி முன்னால் குதித்து, ''பிரதானி ரங்கப்பா குடும்பம் அழிந்து விட்டதாமே! அந்தப் பெண் சுவர்ணமுகி எங்கே?.... எங்கே? நாடு இவ்வளவு மோசமாகப் போய்விட்டதே, சுவாமி!'' என்றாள்.

உடனே அர்ச்சுனன், ''நீங்களெல்லாம் சந்திரகிரியை விட்டு ஏன் புறப்பட்டீர்கள்? எவ்வளவு தூரம் போகிறீர்கள்?'' என்று கேட்டான்.

''நன்றாகக் கேட்டீர்கள்! சுவாமி! சந்திரகிரியை விட்டு ராஜ்ய லக்ஷ்மியே போன பிறகு நாட்டிய லக்ஷ்மிகள் ஏன் இருக்கப் போகிறோம்?'' என்றாள் சந்திரரேகா.


''ராஜாதான் பாதி நாளும் சண்டையிலே இருக்கிறார். எங்கள் நாட்டியத்தை யார் கவனிக்கப் போகிறார்கள்?'' என்றாள் சம்பகவல்லி.

''சுவாமி! நாட்டில் பஞ்சம் கூறையாடுகிறதே! உணவு இருந்தால் அல்லவா ஜனங்கள் நாட்டியத்தை ரசிப்பார்கள்!'' என்றாள் கோமளவல்லி.

''வழியில் ஜனங்கள் எங்களைக் கொல்லாத குறை. சிறிது ஏமாந்திருந்தால் எங்களையே அடித்துச் சாப்பிட்டிருப்பார்கள். என்றைக்கும் இல்லாத கொடூரம் நாட்டில் வந்து விட்டதே!'' என்று அங்கலாய்த்தாள் மூர்த்தியம்மா.

''இனியும் இந்த ராஜ்யம் பிழைக்குமா?'' என்று ஆருடம் கேட்டாள் சசிரேகா.

அர்ச்சுனனுக்குத் தாபம் கிளர்ந்தது. எவ்வளவு மகோன்னத ராஜ்யம் அந்த விஜயநகர ராஜ்யம்! இப்போது அது எப்படிக் கிடக்கிறது! பிறந்த மண்ணிலே வாழ முடியாமல் சந்திரகிரியில் புகுந்து இருக்கிறதே! இங்கே யாவது ஒழுங்காக வாழ்ந்து பழைய மகோன்னதங்களை எட்டிப் பிடிக்கும் என்று நினைத்தால் அதன் அன்றாட வாழ்க்கைக்கே இப்படி தகிடுதத்தோம் போடுகிறதே! அவனைப் போன்றவர்களால் அதை மீண்டும் தூக்கி நிலை நிறுத்த முடியுமா?



கோவையில் உள்ள அருள்மிகு சோனி அம்மன் கோவிலில் கீழ்க்கண்ட பூஜைகள் நடைபெறுகின்றன.

கார் பூஜை கட்டணம்	ரூ.	10-25
ஸ்கூட்டர் பூஜை கட்டணம்	ரூ.	1-25
ஆட்டோ பூஜை கட்டணம்	ரூ.	1-25

கோவையிள்ள ஒரு கடையின் பெயர் "கெட்டிக்காரன் &கோ." – எல்.ஜி. சங்கர்

சிறிது நேரம் கலக்கமாக இருந்து, பிறகு திரும்பி, ''சரி! எவ்வளவு தூரம் போகி றீர்களோ?'' என்று கேட்டான்.

''ஏன் சுவாமி! எங்களுக்குப் புகலிடம் இப்போது தஞ்சாவூர் தவிர வேறு ஏது? நாட்டில் வேறு எங்கும் போக எங்களுக்கு வகை இல்லையே!'' என்றாள் சந்திரரேகா.

அர்ச்சுனன் எல்லோரையும் ஒரு கணம் நிமிர்ந்து பார்த்தான். ''நாட்டிய ராணிகளே இது உங்களுக்கு அடுக்குமா? பரம்பரை பரம்பரையாகவாழ்ந்த மாமன்னர்களை விட்டு விட்டு இப்படிச் சிற்றரசர்களைத் தேடிப்போக லாமா? இருந்தால் மாமன்னரோடு வாழ் வோம் இல்லாவிட்டால் அவரோடேயே சாவோம் என்று நினைக்க வேண்டாமா? அவ்வளவு உன்னதமாக நினைப்பவர்கள் நீங்கள் ஆயிற்றே'' என்று வெதும்பிச் சொன் னான்.

அப்போது''ஏமி அக்கட?''என்று வெளியே வந்த ஒரு மத்திய வயதுப் பெண்மணி அர்ச்சுனனைப் பார்த்த பிறகு, ''ஓஹ்ஹோ ஹோ! நம்ம சுவாமுலவாரு'' என்று பாதி ஆச்சரியத்துடன் கூறினாள்.

அர்ச்சுனன் திரும்பிப் பார்க்க, அங்கே நின்றது பசுபுலேட்டி ரங்காஜம்மா! பிர சித்தமான தேவதாசி! மகா பண்டிதை அவள். மாபெரும் கவி, வடமொழி, தெலுங்கு தவிர எட்டு பிராகிருத மொழி களிலும் பாண்டித்தியமும், கவி எழுதும் திறனும் பெற்றவள். நாடகம், பிரபந்தம் தவிர, வசன நடைக் காவியங்களும் சிருங் கார கீதங்களும் எழுதக் கூடியவள். பிரேம லீலைகளை மறைவு ஏதுமின்றித் தத்ரூபமாக வர்ணிக்கும் அவளது சிருங்கார பதங்களுக்கு அவளே அபிநயிப்பதை ராஜ சபையில் பார்க்க வேண்டும்! ஆயுசு முழுதும் பார்த் துக் கொண்டே இருக்கலாம். நாட்டைப் பற்றியோ, அதை ஆள்வதைப் பற்றியோ கவலைப்பட வேண்டாம்!

ரங்காஜம்மா முன்னால் வர அவள் பின்னால் மற்றொரு மகா கவி கிருஷ்ணமாம்பா தலைப் பைப் போர்த்திக் கொண்டு வந்தாள்.

''நல்லா சொன்னேப்பா, அர்ச்சுனா! நகரத்திலே ராஜா இருந்தாத்தானே நாங்கள் இருப்பதற்கு? ராஜாவே காட்டிலே வாழும் போது அவரை அண்டியிருக்கும் நாங்கள் எங்கே வாழ்வது?'' என்றாள் ரங்காஜம்மா.

''எத்தனை வருஷமாய்ச் சண்டைகளைப் பார்த்துவிட்டோம்? இன்னும் அவை முடிவ தாய்க்காணவில்லையே! அதாவது போகட்டும் இந்தப் பஞ்சம் வந்து நாட்டை வாட்டி எடுக்கிறதே! ஜனங்கள் கூட்டம் கூட்டமாய்ச் சாகிறார்களே! இந்த நிலையில் சந்திரகிரியே எத்தனை நாள் பிழைக்கும்? அதுவும் சுடு காடாகி விட்டால் நாங்கள் எப்படி வாழ முடியும்?'' என்று கேட்டாள் கிருஷ்ண மாம்பா.

தொடர்ந்த ரங்காஜம்மா—''இங்கே இந்த மயிலாப்பூரிலாவது வாழலாம் என்று பார்த் தால் இந்தப் பரங்கிகள் ஆண்களையும் பெண்களையும் பிடித்து அடிமைகளாக்கி கப்பலில் ஏற்றுகிறார்களாமே! அதைத்தடுத்து நிறுத்தக் கூட அதிகாரிகள் இல்லையே!'' என்று ஆவலாதியாகக் கூறினாள்.

''பிடிச்சுட்டுப் போறது இருக்கட்டும்டி! பெத்த தாய்களே சோறு போட முடியாம குழந்தைகளை விக்கிறாங்களாமே! அதுக்கு என்ன செய்ய முடியும்?'' என்று வினவினாள் கோமளவல்லி.

அர்ச்சுனன் கலங்கி நின்றான்.

அந்தப் பெண்களின் உருவத்தில் கலையும் படிப்பும் அறிவுமே நாடு கடந்து போவதாக நினைத்தான். எல்லா லக்ஷ்மிகளும் நாட்டை விட்டுப் போகிறார்கள். இதை இனி தடுத்து நிறுத்த முடியுமா?

மேலே பேச முடியாமல் அர்ச்சுனன் மௌனமிடுவதைப் பார்த்து,

''சுவாமி, எங்கே இப்படி?'' என்று கேட்டாள் ரங்காஜம்மா.

''சுவர்ணமுகியைத்தேடிவந்திருக்கிறேன்'' என்றான் அர்ச்சுனன்.

''சுவர்ணமுகியா? அவள் இறந்துவிட்டாள் என்று அல்லவா கேள்விப்பட்டோம்?'' என்றாள் சம்பகவல்லி.

''இல்லை, தப்பித்துவிட்டாள். ஒரு ஒலாந்தியனிடம் அடிமையாக அகப்பட்டு இங்கே வந்தாள் என்று கேள்விப்பட்டேன். அவளைத் தேடித்தான் இங்கே வந்தேன்.''

என்று சொல்லி அவன் வந்த விருத்தாந்தத்தைச் சுருக்கமாகக் கூறி முடித்தான்.

''ஏன் சுவாமி! எல்லாவற்றையுமா இழந்தீர்?'' என்று கேட்டாள் ரங்காஜம்மா.

''ஆமாம். அதுதான் எனக்கு ஆத்திரம்'' என்றான் அர்ச்சுனன்.

''பணமில்லாமல் எப்படித் தேடுவீர்கள்?'' என்றாள் அவள்.

அர்ச்சுனன் விழிக்க, ரங்காஜம்மா உள்ளே போய், ஒரு துணிப் பையில் பொன்னையும் பணங்களையும் போட்டுக் கொண்டு வந்து கொடுக்க,

இதர பெண்மணிகளும் ஆளுக்கொரு பொன் நகை கொடுத்து ''சீக்கிரம் சுவர்ணமுகியைத் தேடுங்கள்!'' என்றார்கள்.

''உங்கள் உதவிக்கு நன்றி! நான் சீக்கிரமே உங்களைக் காண்பேன்'' என்று கூறி விடை பெற்றான் அவன். பணம் கிடைத்தது பெரிய பலம் கிடைத்தது போல் ஆ.

ஒரு பல்லக்கையும் பரிவாரத்தையும் வேலைக்கு அமர்த்தி, ஸாந்தோமே நகரத்துக்குள் கோபத்துடன் நுழைந்தான் அவன்.

சுவர்ணமுகி விழித்தபோது புதிய சூழ்நிலையில் இருந்தாள். காலை நேரம் போல் தோன்றியது. இது அரண்மனையா? எந்த ஊர் அரண்மனை?

கட்டிலை விட்டுக் கீழே இறங்கிச் சாளரம் பக்கம் போக, ''இளவரசி!'' என்று குரல் கேட்டுத் திரும்பினாள்.

ஒரு நடு வயதுச் சேடி உணர்ச்சி இல்லாத முகத்துடன் நடந்து வந்தாள். சுவர்ணமுகி அவளை உற்றுப் பார்த்து, ''யார் நீ?'' என்று கேட்டாள்,

அந்தப் பெண்மணி புருவத்தை மட்டும் உயர்த்தினாள். பதில் இல்லை.

பிறகு, ''தங்களுக்குப் பணிவிடை செய்யக் காத்திருக்கிறேன்'' என்றாள் விநயமுடன்.

''தோதா எங்கே?''

''வருவார்.''

''இது என்ன இடம்?''

''காளிங்கராயரின் மாளிகை.''

''எந்த ஊர்?''

''சாந்தம்பள்ளி.''

''அப்படி ஒரு ஊர் இருக்கிறதா?''

''இருக்கிறது.''

''எங்கே இருக்கிறது?''

''கானஹஸ்தி பக்கம்.''

''ஓ! அங்கே அப்படி ஒரு ஊர் இருக்கிறதா?'' என்று யோசித்தாள் அவள்.

''இங்கே எப்படி வந்தேன்?''

''தோதா உங்களை அழைத்து வந்தார்.''

''எப்படி அழைத்து வந்தார்?''

''பல்லக்கில்.''

சுவர்ணமுகி தனது மூளையைக் குடைந்து பார்த்தாள்.

தோதாவின் பரிவாரங்களுடன் தனிப் பல்லக்கில் பல நாழிகைப் பிரயாணம் செய்தது நினைவு இருக்கிறது.

ஒரு சின்ன ஊரை நெருங்கினதும் நினைவு இருந்தது.

பிறகு நடந்தது எல்லாம் மறந்து விட்டது. அவ்வளவு மறதியா என்ன?

மறதி இருக்காது.

அசதியில் தூங்கியிருப்போம். எழுப்ப வேண்டாம் என்ற நினைப்பில் தோதா இங்கே கொண்டு வந்து படுக்க வைத்திருப்பான்.

இருந்தாலும் அவ்வளவு நினைவு இல்லாமலா உறங்கினேம்? கேவலமாக இருக்கிறதே!

''வேறு யாராவது இருக்கிறார்களா இங்கே?''

''யாருமில்லை.''

''நீங்கள் மட்டும்தான் இருக்கிறீர்களா?''

''ஆமாம்.''

சுவர்ணமுகி சற்றுத் திகைக்க,

''நீங்கள் குளிக்கலாம், சாப்பிடலாம்!'' என்றாள் சேடி.

''ஆகட்டும்'' என்று மெல்லிய குரலில் சொன்ன சுவர்ணமுகியின் கண்கள் மீண்டும் சாளரம் பக்கம் ஓட,

சில அவசர அடிகள் வைத்து அதன் அருகே நின்றாள்.

வெளியே பார்த்ததும் திகில் வந்தது.

கண்ணுக்கு எட்டிய தூரம்வரை காடு. அதற்கு அப்பால் நீல சியாமளமாய் மலை.

பரபரப்பு அடைந்து எதிர்ப்புற சாளரத்துக்கு ஓடினாள். அங்கேயும் காடுதான் நெடுந்தூரம் விரவி இருந்தது.

தோதா ஏன் இங்கே நம்மைக் கொண்டு வந்தான்?

இப்போது எங்கே போனான்?


இருப்புக் கொள்ளாமல் தவித்து, மற்றொரு முனையில் உள்ள சாளரத்துக்கு ஓடிப் போய்ப் பார்க்க,

கண்கள் அப்படியே நிலையாக நின்றன.

விளிம்பைப் பிடித்துக் கொண்டு பிரமை பிடித்தவள் போல் நின்றாள். (தொடரும்)

'பல் டாக்டர் இருக்கிறாரா?'
'இல்லையே, இப்பத்தான் கண் வலின்னு கண் டாக்டரைப் பார்க்கப் போனார்.'
'அப்படியா அவர் வந்ததும் கண் டாக்டர் பல்வலின்னு வந்துட்டுப் போனார்னு சொல்லு!' -பிரியா பாலு

ரசிகமணி ரசித்த மணிகள்



இரேகையும் ஜாதகமும்

மீ.ப.சோமு

டி.கே.சி.க்கும் ராஜாஜிக்கும் சோதிடத்தில் நம்பிக்கை இருந்ததா என்று பல நண்பர்கள் அடிக்கடி கேட்கிறார்கள். சொல்லுகிறேன்.

இராயப்பேட்டை லாயிட் சாலையில் நான் குடியிருந்தபோது கவேதாரண்யம் என்ற நண்பர், ஹிந்து பத்திரிகையின் உதவி ஆசிரியரில் ஒருவர், எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவார். ஆங்கில நாட்டு ஜாதக கணிதத்தில் பெரிய புலி அவர்! உலகத் தலைவர்கள் பலரின் சிக்கலான ஜாதகங்களை நாங்கள் இருவரும்ஒன்றாக இருந்து கணித்துப் பார்ப்பதுண்டு.

ஒரு ஞாயிற்றுக் கிழமை காலை எங்கள் கணக்குகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தபோது, திமர் என்று ராஜாஜியின் கார் எங்கள் வீட்டு வாசலில் வந்து நின்றது!

''பரவாயில்லை. பெரியவரிடம் நான் சொல்லிக்கொள்கிறேன் நீங்கள் இருங்கள்!'' என்று நான் எத்தனையோ சொல்லியும், கவேதாரண்யம் பதறியடித்துக் கொண்டு காகிதம் பென்சில் எல்லாவற்றையும் சுருட்டி எடுத்து அவசரம் அவசரமாக இன்னொரு வாசல் வழியாக ராஜாஜியின் கண்ணில் படாமல் நழுவினார்! பாவம், பதற்றத்தில் ரபேல் கையேடு மேஜைக்குக் கீழே விழுந்து விட்டதை அவர் கவனிக்கவில்லை!

ராஜாஜி என் அறையில் நுழைந்ததும் சுற்றும் முற்றும் பார்த்தவர், கீழே விழுந்து கிடந்த ஆங்கிலப் பஞ்சாங்கத்தை (ரபேல்) பார்த்து விட்டார்! நாற்காலியில் உட்கார்ந்தவர் அப்படியே எழுந்து ஜன்னல் வழியாக வெளியே பார்த்தார்.

''சோமு, அது ஹிந்து கவேதாரண்யம் போல் இருக்கிறதே!''

''ஆமாம்; அவரேதான்! மேஜைக்குக் கீழே கிடப்பது ரபேல் கையேடுதான்! ஆனால் நாங்கள் பார்த்தது குதிரைகளின் ஜாதகம் இல்லை!'' என்றேன்.

அன்று ஞாயிற்றுக் கிழமையானதால், இப்படி நான் சந்தேகத்தைத் தெளிவுபடுத்தியதும், ராஜாஜி பலமாகச் சிரித்துவிட்டார்! ரசம் என்னவென்றால் இந்தச் சிரிப்புக்குப் பிறகு நான் ராஜாஜியுடன் அதே ரஷ்யத் தலைவரின் ஜாதகத்தை, கவேதாரண்யமும் நானும் ஆராய்ந்து கொண்டிருந்த அதே ஜாதகத்தை, நீண்ட நேரம் சர்ச்சை செய்தேன்!

ஆம்; ராஜாஜிக்கு ஜாதக கணிதம் ஓரளவு தெரியும். கைரேகையோ என்றால் மிக நன்றாக மிக நுட்பமாகப் பார்ப்பார்! 1943ல் என் தங்கையும் அவள் கணவரும் புனாவுக்குக் குடி போவதற்கான நாளையும் பயணத் தேதியையும் பஞ்சாங்கம் பார்த்துத் நிர்மானித்தவர் ராஜாஜிதான்! 1969ல் ஒரு சிக்கலான முடிவு எடுக்க நேர்ந்தபோது ராஜாஜி என் உள்ளங்கை ரேகைகளை நீண்ட நேரம் ஆராய்ந்த அந்த நிகழ்ச்சியை என்னால் மறக்கவே முடியாது. இதைக் கேட்பவர்களுக்கோ நம்பவே முடியாது!

சோதிடத்திலும் ரேகைக் கலையிலும் ராஜாஜிக்கு இத்தனை பழக்கம் இருந்தபோதிலும் சோதிடர்களையும் ரேகைக்காரர்களையும் நம்ப மாட்டார்! பதவியில் இருந்ததால் பல மோசடிகளுக்கு இடமாகும் என்று, சோதிடர்களையே தமது பக்கத்தில் அண்ட விட மாட்டார். சந்தர்ப்பம் கிடைக்கும் போது கண்டித்தும் பேசுவார். பேசியும் இருக்கிறார்!

டி.கே.சி. முற்றிலும் வேறு விதம். இந்த இரண்டு கலைகளிலும் அவருக்கு எவ்விதப் பழக்கமும் கிடையாது. நம்பிக்கை வைத்துக்கொள்ளவும் இல்லை அவர்! மெய்யா பொய்யா என்ற ஆராய்ச்சிக்கே போக மாட்டார். இலக்கியம், கவின்கலை, பண்பாடுதவிர இதுபோன்ற விஷயங்களைப் பற்றி என்னிடம் அவர் பேசவே மாட்ட ர்! அக்கறை கிடையாது!

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு குற்றாலத்தில் ஒரு வேடிக்கை நடந்தது! 'சிண்டு முடிகிற' நண்பர்கள் சிலர் உண்டு அல்லவா, அப்படி ஒருவர் ஒரு நாள் என்னை வைத்துக் கொண்டு டிகேசியிடம் கேட்கிறார்:

இந்த வார டீ.வி. சினிமா

சென்னை டீ. வி. நிலையத்தினர் முறையான ஒத்துழைப்பு தராததாலும் தவறான தகவல்கள் தருவதாலும் "இந்த வார டீவி சினிமா" பகுதியை நிறுத்திவிட்டோம்.

— ஆசிரியர்

"ஐயா, நீங்கள் நாள் நட்சத்திரம் ஜோசியம் எல்லாம் பார்ப்பதில்லையே, ஆனால் உங்கள் சோமு..."

பளீர் என்று பதில் வந்தது:

"நான் செய்யாத காரியங்கள் பல அவன் செய்கிறான்! நான் 'பாண்ட்' போட்டுக்கொள்வதில்லை. டை கட்டிக் கொள்வதில்லை. அவன் செய்கிறான்! நான் ஹல்வா சாப்பிடுவதில்லை. லாலா ராம்சிங்கோடு சேர்ந்து அவன் ஹல்வாவே கிண்டுகிறான்! நான் பள்ளிப்படிப்பை முடிக்கவில்லை. அவன் யூனிவர்ஸிடியில் புலவர் பட்டமே வாங்கிவிட்டான்! ஜாதிப் பிரஷ்டமே செய்ய வேண்டும் அவனை! செய்துவிடுவோமா?"

அந்த 'நண்பர்' வெலவெலத்துப்போனார். அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே நகன்றுவிட்டார்!

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், தமக்குப் பழக்கமில்லாத விஷயங்களில் பிரவேசிக்கவே மாட்டார் டி.கே.சி.! தம்மைச் சேர்ந்தவர்களின் நம்பிக்கைகளையும் அவர் புண்படுத்த மாட்டார். ஆனால் ஓர் அரிய உபதேசம் கூறுவார். என்னிடமே பல முறை கூறியிருக்கிறார்.

"எந்த நம்பிக்கையிலும் நான்கு "எப்"கள் உண்டு (Four F's) அதாவது Fact (பாக்ட்), Fancy (பான்ஸி), Fiction (பிக்ஷன்), Fraud (ப்ராட்) என்பதாக! உண்மை என்று ஒன்று இருக்கிறது ஆரம்பத்தில்! அது பாக்ட்! நாலு பேரிடம் பரவும்போது, அந்த 'பாக்டி'ல் 'பான்ஸி' என்கிற கற்பனை சேருகிறது. பிறகு நாற்பது பேரிடம் பரவும்போது 'பான்ஸி'யிலிருந்து 'பிக்ஷன்' கட்டுக்கதை உண்டாகிறது. பின்னர் அது நாற்பதாயிரம் பேருக்குப் பரவி 'ப்ராட்' ஏமாற்றுத்தனமாக மாறுகிறது! இப்படி எந்த நம்பிக்கைக்கும் நாலு பரிணாம நிலைகள் — பாக்ட், பான்ஸி, பிக்ஷன், ப்ராட்!"

இது டி.கே.சி.யின் மணி மொழி!



அருள்வாக்கு

இளைஞர் கடமை

பிறருக்கு உபகாரம் செய்வதற்கே நமது சரீரம் ஏற்பட்டிருக்கிறது என்பது ஆன்றோர் மொழி. 'பரோபகாரார்த்தம் இதம் சரீரம்' என்பார்கள். தேகத்தில் நல்ல தெம்பு இருக்கிறபோதே பிறருக்காக நன்றாக உழைக்க உடலில் சக்தி இருக்கிறபோதே, யுவர்கள் சேவை நெறியில் ஈடுபட வேண்டும். பிறருக்குச் சேவை செய்வதற்காகவே தேக பலத்தை நன்கு காத்துக் கொள்ள வேண்டும். தேக பலத்தை விட ஒழுக்க பலம் முக்கியம். நமது மதம் கூறுகிற சாசுவத தர்ம நெறியின்படி சுத்தமான வாழ்வு வாழ வேண்டும். இப்படியெல்லாம் இருந்தால்தான் பிறருக்கு நல்ல முறையில் சேவை செய்ய முடியும்.

சமூக சேவை உண்மையாக இருக்கவேண்டுமாகில் சேவை செய்கிறவர்களுக்குத் தர்மத்திலும் சத்தியத்திலும் தளராத பிடிப்பு இருக்க வேண்டும். அவர்களுக்குப் பயம் என்பதே கூடாது. பயமற்ற நிலை வேறு. ஹிம்சை வழியில் நடப்பது வேறு. இரண்டையும் குழப்பிக் கொள்ளக் கூடாது. யுவர்களுக்கெல்லாம் உதாரணமாக இருப்பவர் ஆஞ்சநேய ஸ்வாமி. அவருக்கு இருந்த பலம் மிகப் பெரியது. இருந்தாலும் சாந்தமாக இருந்தார். அவருடைய புத்தி பலமும் பெரிது. ஆயினும் பக்தியில் தோய்ந்து அடக்கத்துடன் விநயமே ஸ்வரூபமாகச் சேவை செய்து கொண்டிருந்தார். பயமென்பதே அவருக்கு இல்லை. ஆனாலும் ஹிம்சை வழியில் அவர் சென்றதில்லை. சொந்த நலனுக்காகப் பலத்தைப் பிரயோசனப்படுத்தவில்லை. துர்பலருக்குக் கொடியவரால் கஷ்டம் ஏற்பட்டால் தம் நலனையும் பொருட்படுத்தாமல் பலவீனரை ரட்சிப்பதில் அஞ்சா நெஞ்சராகச் சேவை செய்தார். சிவாஜியும் இப்படிப்பட்ட ஓர் உதாரண புருஷர். தேக பலம், அஹிம்சை பயமற்ற நிலை இவற்றோடு சொந்தக் கஷ்டங்களைப் பாராட்டாமல் பிறருக்கு உதவும் பான்மையும் சேர்ந்தால் அது மிகப் பெரிய சீலமாகும். இதற்கே 'க்ஷத்ர தர்மம்' என்று முன்னாளில் பெயர் சொல்லப்பட்டது. பிறரைத் தீமையினின்று காப்பதே 'க்ஷத்ரம்.' க்ஷத்திரியர் என்ற பெயர் இதிலிருந்துதான் பிறந்தது. இப்போது நம் நாட்டு யுவர்கள் இந்த க்ஷத்ர தர்மத்தை மேற்கொள்ள நிரம்ப அவசியமிருக்கிறது. பலிஷ்டர்களைக் கண்டு பயப்படக் கூடாது. பலவீனர்களைப் பயமுறுத்தவும்கூடாது. பலவீனர்களைப் பலவான் கொடுமைப்படுத்தாதபடி காப்பாற்ற வேண்டும். இதுவே சேவையில் ஈடுபட்ட யுவர்களின் தர்மம்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

புத்துணர்ச்சிதரும் தூய சுவாசம்...
உறுதியிக்க, ஆரோக்கியமான பற்கள்



அளித்திடுதே கோல்கேட் டென்டல் க்ரீம்


ஒவ்வொரு சாப்பாட்டிற்குப் பிறகும் கோல்கேட் கொண்டு உங்கள் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். உலகெங்கும் பல் டாக்டர்கள் சிபாரிசு செய்வதைப் போலவே அது உங்களைப் பாதுகாக்கிறது.

உங்கள் பற்களுக்கிடையே தங்கியுள்ள உணவுத் துணுக்குகளில் பாக்டீரியாக்கள் வளர்கின்றன. இவை வாய் துர்நாற்றத்தையும், பிறகு பலவீனிக்க பற்சிதைவையும் உண்டாக்கும்.

எனவே சாப்பிட்டு முடித்தவுடனேயே கோல்கேட் முறையில் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். அது புத்துணர்ச்சியுடன் இனிய சுவாசத்தைத் தருவதற்கும், பற்களுக்கு வெண்மையளிப்பதற்கும், பற்சிதைவை எதிர்ப்பதற்கும் மிகவும் சக்தி வாய்ந்தது என்று நிரூபணமாகியுள்ளது.

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும், பெப்பர்மின்ட் சுவை பல்துலக்குவதை ஒரு இன்ப அனுபவமாக்குகிறது.

நம்பகமான, கோல்கேட்டின் செயல் புரியும் முறை




உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் வளருகின்றன.

கோல்கேட்டின் ஒப்பற்ற, செயல்புரியும் நுரை ஆழ ஊடுருவிச் சென்று உபாதை தரும் உணவுத் துணுக்குகளையும் பாக்டீரியாக்களையும் அகற்றி விடுகிறது.

பயன்: கவர்ச்சிமிக்க வெண்மையான பற்கள், தன்னம்பிக்கை தரும் இனிய சுவாசம், பற்சிதைவுக்கெதிராகப் பாதுகாப்பு.

கோல்கேட் டென்டல் க்ரீம்
உபயோகித்து வாய்துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்



DC-G-74 TM

1

ட்ராஃபிக் ஸிக்னலைப் பார்த்து ஹரிக்கு எரிச்சல் ஏற்பட்டது. இன்னும் பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்கு நகர முடியாது. வலது பக்கத்தில் ரோடில் நின்றிருந்த வாகனங்கள் எண்ண முடியாத சங்கிலிகளாகத் தெரிந்தன. ஸிக்னல் மாறினவுடன் விழித்துக் கொண்டு சங்கிலிகள் நகர்ந்தன.

தினமும் காலையில் 9.20க்கு இங்கு வந்து மாட்டிக் கொண்டால் தொலைந்தோம். இன்றைக்குக் காலையில் கண் விழிக்கும்போதே நேரமாகி விட்டது. நேற்று இரவு இரண்டு மணிவரை மனு பண்டாரியின் 'தி பிக் ஃபீஸ்ட்'டைப் படித்ததன் விளைவு. ஒரு பத்து நிமிஷங்கள் என்பது எத்தனை பெரிய பரிமாணத்தைக் கொண்டது காலை வேளையில்? இல்லாவிட்டால் இந்த நேரத்துக்குத் தினமும் போல் ஆஃபீஸ் லிஃப்டில் நின்றிருப்போம். 9.25க்கு மாயாவின் ஃபோனுக்காகத் தயாராகியிருப்போம்.

அவன் பொறுமை இல்லாமல் அந்த நகரும் வாகனங்களைப் பார்த்தான். முடிவில்லாத தொடர்கள். உடலின்





ஒவ்வொரு அணுவும் பொறுமை இல்லாமல் தவித்தது. பெட்ரோல் விலை ஏற ஏற இந்த வாகனங்களின் எண்ணிக்கையும் எப்படி இப்படி அதிகரிக்கிறது!

ஒரு வழியாக ஸிக்னல் மாறி அவன் தன் மோட்டார் சைக்கிளைக் கிளப்பித் தன் ஆபீஸ் இருக்கும் அந்தப் பத்து மாடிக் கட்டிடத்தின் முன் நிற்கையில் மணி 9.35.

அவன் அவசரமாகப் படிகளைக் கடந்து கண்ணாடிக் கதவுகளைத் தாண்டி, வாயை மூட யத்தனித்துக் கொண்டிருந்த லிஃப்டினுள் ஆசுவாசமாய்ப் புகுந்து கொண்டான். லிஃப்டின் நெருக்கடிக்குப் பின்னால் இருந்த கண்ணாடியைப் பார்த்துக் கலைந்த கேசத்தைச் சரி செய்தபடி எல்லாரையும் பார்த்துப் பொதுவாகப் புன்னகைத்தான். தினமும் பார்க்கிற முகங்கள். அந்தக் கட்டடத்தில் குடியிருக்கும் பல்வேறு அலுவலகங்களில் வேலை பார்க்கும் முகங்கள். அவன் வேறு யாரையோ பார்த்துச் சிரிக்கிறான் என்று ஒவ்வொரு முகமும் முகத்தைத் திருப்பிக் கொண்டது.

அவனுக்குச் சிரிப்பு வந்தது. என்ன ப்ரகிருதிகள் இவர்கள்? ஏதோ பாரத்தைச் சுமக்கிறவர்கள் மாதிரி? அதுவும் தங்களுக்கு மட்டும் தான்பாரம் தலைக்குமேல் இருந்தமாதிரி?

மூன்றாவது மாடியில் 'தம்'மென்று லிஃப்ட் நின்றதும் அவன் வெளியில் வந்து வலது பக்கம் திரும்பித் தன் அலுவலகத்துக்குள் நுழைந்தான். பிடிப்பான கண்ணாடிக் கதவுக்கப்பால் குளிர்ச்சியான பிரதேசம். அதைவிடக் குளிர்ச்சியாக ரிஸப்ஷனிஸ்ட் ரூபா சிங். வெயில் காலம் ஆரம்பித்து விட்டால் இவளுக்குக் கொண்டாட்டம். உடம்பை அளவுக்கு அதிகமாகப் போர்த்திக் கொண்டு நிற்க வேண்டியதில்லை. வெகு சிக்கனமான ஆறு அங்குல ரவிக்கை. இத்தனை அழகிய உடம்பை வைத்துக் கொண்டு அதை ரொம்பவும் மூடுவதும் மடத்தனம்தான் என்கிற நினைப்பில் புன்னகைத்து,

''ஹல்லோ!'' என்றாள். ''லுக்கிங் க்ரேட்!''

''தாங்க்யூ!''

சிரிப்பில் செயற்கை நாணம். வரவழைத்துக்கொண்ட மையல். எம்.டி. யஷ்பாலின் ஸெலக்ஷன், என்றைக்கு சோடை போயிற்று?

''எனக்காக ஏதாவது ஃபோன் கால் வந்ததா?''

''மூன்று முறை!''

''யார்?''

''இந்த நேரத்துக்குத் தினமும் வரும் அதே போன் கால்தான். உங்களை மாதிரியே பொறுமையில்லாத பேர்வழி. அது எப்படி அப்படி ஒரு ஜோடி சேர்ந்தீர்கள்?''

அவன் புன்னகைத்தான்.

''சொல்கிறேன். உன் ஜோடியிடம் கேட்டுவிட்டுச் சொல்கிறேன்.''

அவள் மாக்ஸ் ஃபாக்டர் சாய உதடுகளைக் கொஞ்சலுடன் குவித்தாள்.

''எனக்கு ஜோடியே கிடையாது.''

''ஐ டோன்ட் பிலீவ் இட்!''

அவன் புன்னகையுடன் தன்னுடைய அறைக்குள் நுழைந்தான்.

நாற்காலியில் உட்காரும்போது ஃபோன் அடித்தது.

''ஹரி ஹியர்!''

''உங்கள் ஜோடி!'' என்றாள் ரூபா.

''உம்! காத்திருக்கிறேன்!''

''என்ன இன்னிக்கு லேட்?''

மாயாவின் குரல் வழுக்கிக் கொண்டு வந்தது.

''கார்த்தாலே ஆபீஸுக்குக் கிளம்பிலதே லேட்!''

''ஏன்?''

''முழிச்சண்டது லேட். ஏன்னு கேட்காதே. உதைப்பேன். நீதான் என் நினைவிலே வந்துவந்து தூக்கத்தைக் கெடுக்கறே!''

கிண்கிணிச் சிரிப்பு சில விநாடிகள் ரம்யமாய் ஒலித்தது.

''அளக்காதே ஹரி! ஏதாவது புத்தகத்தைப் படிச்சிண்டிருந்திருப்பே விடிய விடிய!''

''நீ நம்ப மாட்டியே? நம்பற குணம் பெண்களுக்கு இருந்தா எங்களுக்கெல்லாம் ஹார்ட் அட்டாக் வராது!''

''நா பத்துத் தடவை இதுவரை ஃபோன் பண்ணினேங்கறதை நீ நம்பறியா?''

''நீ ஃபோன் பண்ணினேங்கறதை நம்பறேன்.''

''ஓ.கே. இது நாலாவது தடவை.''

''நா இப்பத்தான் நுழையறேன். தலை போற விஷயத்தை முதல்லே சொல்லு!''

''இன்னிக்குச் சாயந்திரம் கமானி ஆடிடோரியம்லே ஒரு நாடகம் இருக்கு. கேம்பிரிட்ஜ் ட்ரூப் போடற நாடகம். மெக்-பெத். வறியா?''

''ஷேக்ஸ்பியரெல்லாம் உனக்கு இன்னும் ஞாபகமிருக்கா?''

''ஞாபகப்படுத்திக்கலாம்.''

''வரேன். டிக்கெட்?''

''பாஸ் இருக்கு ரெண்டு!''

''அப்ப கண்டிப்பா வரேன்.''

மறுபடியும் கிண்கிணிச் சிரிப்பு. ''நீ செலவழிக்க மாட்டேன்னு தெரிஞ்சுதான் ஐ.ஸி.ஸி. ஆர்லே இருக்கிற ஒரு அண்டர் செகரட்டரியை மஸ்காப் போட்டு ரெண்டு பாஸ் வாங்கிண்டேன்!''



ஏழை சுஜாதாவை (ராஜலட்சுமி, கோடீஸ்வரன் (தேங்காய்) மகளென ஏமாந்து, காதல் செய்யும் நாயகன் கதை. மெலிசான கதையை முழுநீள நகைச்சுவைச் சித்திரம் ஆக்கியிருக்கிறார்கள்.

சிவகுமார் – ராஜலட்சுமி, தேங்காய் – சௌகார், தங்கவேலு – மஞேரமா என்று மூன்று ஜோடிகள். கிழட்டு ஜோடிகளுக்கிடையே சரியான ஜமாபந்தி. கோடீஸ்வரருக்கும் அவர் மனைவிக்கும் இடையில் விழும் சந்தேக முடிச்சே அதிர்வேட்டுச் சிரிப்புக்கு ஆதாரம். செவிடர் தங்கவேலு தன் வாதத் திறமையால் பலரை லட்சாதிபதியாக்கியவர் – அதாவது கோடீஸ்வரர்களை. மனைவி 'காரே புரே' என்று கத்த மனிதர் தன்பாட்டிற்கு ஹியரிங் எய்டைக் கழற்றிவிட்டு நமட்டுச் சிரிப்புடன் ஜமாய்க்கிறார். சிவகுமாரிடம் இருந்து பிரமாதமாய் அசடு வழிகிறது.

ராஜலட்சுமி சங்கராபரணத்தில் (நன்றாக) நடித்ததாக ஞாபகம். சோகத்துடன் சால்வை போர்த்தி சிவாஜியும் சத்யநாராயணாவும் கலந்த மேக்கப்பில் செந்தமிழ் பேசி வருவது யார்? ஓஹோ! வி. கே. ராமசாமியா? ஐயோ பாவம் – ரசிகர்கள்!

வசனங்களில் பத்திரிகை ஜோக்ஸ்களால் தோரணம் கட்டியிருப்பவர் வெங்கட். அவுட்டோரில் வெளுத்து வாங்குகிறது கோபால் ரெட்டியின் ஏரிபிளெக்ஸ். சக்கரவர்த்தியின் இசையில் தெலுங்கு மெட்டில் தமிழ்ப் பாடல்கள். நடன அசைவுகளில், கோணங்கி சேஷ்டைகளில், பாடல்களில், குரூப் போட்டோ பாணியில் முடிப்பது வரை எங்கும் ஒரே தெலுங்கு வாடை.

ஆபாசம் கலக்காத தமிழ்ப் படம் ஒன்றைப் பார்க்கும் போது சந்தோஷமாயிருக்கிறது. — சிந்து - ஜீவா



எழுத்தாளர்: நான் எழுதறதுக்குக் காரணமே நீங்கதான்! உங்களை எழுத்துலக "துரோணரா" நினைச்சி நான் மானசீகமா இன்ஸ்பிரேஷன் எடுத்து எழுதறேன்!

பத்திரிகை ஆசிரியர்: அப்போ பேசாம உங்க வலது கை கட்டைவிரலை குரு காணிக்கையா கொடுத்துடுங்க! எழுத்துலகம் ரொம்பக் கடமைப்பட்டிருக்கும்!

-வெ. சீதாராமன்

''ரொம்பப் போடாதே!''

''என்ன?''

''ஒண்ணுமில்லே. எத்தனை மணிக்கு?''

''ஆறு மணிக்கு.''

''வரேன். சாயந்திரம் ஒரு மீட்டிங் இருக்கு. அஞ்சரைக்கு முடிஞ்சுடும்னு நினைக்கிறேன். முடிஞ்சதும் நேரே ஆடிட்டோரியத்துக்கு வந்துடறேன்.''

''மறக்க மாட்டியே?''

''ஓ.சி.யிலே போக வேண்டியதை மறக்கவாவது?''

''அது மட்டும்தானா?''

''இன்னும் வேறே என்னங்கறதை நேரச் சொல்றேன்!''

''சொல்லாட்டா விடமாட்டேன்!''

பஸ்ஸர் ஒலித்தது.

அவன் புன்னகையுடன்—

''ஓ.கே. மாயா. ஆறு மணிக்கு!'' என்று ரிஸீவரைக் கீழே வைத்தான்.

ப்யூன் ஒரு கட்டுக் காகிதங்களை மேஜை மேல் வைத்தான். மேல் குறிப்பு — மோஸ்ட் இம்மீடியட்.....

மோஸ்ட் இம்மீடியட் — எல்லாமே அவசரம் இங்கு... ஏதோ அடுத்த நிமிஷம் சாவு வந்து நிற்கப் போகிற மாதிரி. இதில் வேடிக்கை என்னவென்றால் அவன் இந்த வார்த்தைகளை நம்பி அவசரமாக நகர்த்தும் பைல்கள் எங்கே போய் மாட்டிக் கொள்கின்றன என்று புரிவதில்லை. ஒரு ப்ராஜெக்ட்டும் சரியான நேரத்துக்கு முடிவடைவதில்லை. ப்ராஜக்ட் உருவாவதற்குள் அது வேறு ரூபத்தில். கனமான சில பாக்கெட்டுகளில் உட்காருவதாகப் பலமான வதந்தி.

அவன் தோளைக் குலுக்கிக் கொண்டான். 'நமக்கென்ன வந்தது' என்று சொல்லியபடி 'மோஸ்ட் இம்மீடியட்'டைப் பிரித்தான். சில விநாடிகளில் அதில் அமிழ்ந்துபோனான்.

லஞ்ச் வேளைக்குச் சற்று முன்னால் அக்கௌன்டென்ட் மோகன் அகர்வால் எட்டிப் பார்த்தான்.

''க்யா யார்! பிஸி?''

''வெரி பிஸி!'' என்று அவன் சிரித்தான். ''மோஸ்ட் இம்மீடியட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''

அகர்வால் சௌகரியமாக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

''அரே, சோடோ யார்! இதெல்லாம் எத்தனை இம்மீடியட் என்று நமக்குத் தெரியாதா?''

ஹரி பதில் சொல்லாமல் புன்னகையுடன் ஃபைலில் பார்வையை ஓட்டியபடி கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந்தான்.

''இம்மீடியட்டாக மேலிருப்பவர்கள் பணம் பண்ணத்தான் நீ போடற கையெழுத்து. மார்ஜின்லே எழுதற உன்னுடைய குறிப்பெல்லாம் தண்டம்.''

அகர்வால் குரலைத்தாழ்த்திக் கொண்டான்.

''உன் பாஸ் சேத்தியைப் பற்றி என்னைக் கேளு சொல்றேன். பத்து வருஷத்துக்கு முன்னால் அவன் வீட்டில் ஃப்ரிட்ஜ் கிடையாது. ஃபர்னிச்சர் ஹையருக்கு வாங்கிப் போட்டிருந்தான். இப்பப் பார். ஐந்து வீடுகள், மனைவிக்கு ஒரு கார், அவனுக்கு ஒரு கார். எங்கேயிருந்து வந்தது இத்தனையும்? கவர்ன்மெண்டுக்கு பில்டிங் கட்டறதா பாவ்லா காண்பிச்சுத் தங்கள் வீட்டைக் கட்டிக்கிற பெருச்சாளிங்க எல்லாரும்!''

ஹரி எல்லா ஃபைல்களையும் ஒழுங்காகக் கட்டி வைத்து அழைப்பு மணியை அடித்தான்.

உள்ளே வந்த ப்யூன் ராம்சிங்கிடம் ''இதை எடுத்துக்கொண்டு போ'' என்றான்.

ராம்சிங் அந்தண்டை சென்றதும் ''இ பாஸ்டர்ட்ஸ்'' என்றான் அகர்வால்.

ஹரி பெரிதாகச் சிரித்தான்.

''உனக்கு என்ன இத்தனை கோபம் மோகன்?''

''பின்னே என்ன? மேல் மட்டத்தை நீ ரொம்பக் கூர்ந்து பார்த்தியானா வெறும் சாக்கடை, வேலையைப் பத்திக் கேளு. ஒரு மண்ணும் தெரியாது. எம்.டி.க்கு ஒரு ஸ்டாட்டிஸ்டிக் தெரியாது — ரூபா சிங்குடைய வைட்டல் ஸ்டாட்டிஸ்டிக்கைத் தவிர''

''ஓ நீ ரொம்ப மோசம்! அவர்கள் எப்படியோ இருந்துவிட்டுப் போகட்டும். உனக்கும் எனக்கும் என்ன வந்தது?''

''ஒன்றுமில்லையே! அப்ஸொல்யூட்லி நத்திங். அதனால்தான் அவர்களது பாங்க் பாலன்ஸ் அதிகரித்துக் கொண்டு போகிறது. நமக்கு ப்ரமோஷன் என்று வரும்போது. அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் பார்! சோப்ராவுக்கு இப்பொழுது ப்ரமோஷன் ஆகவேண்டும். அவனுக்குப் பதிலா நரேஷ்குமாரை ப்ரோமோட் பண்ணப் போகிறார்களாம்!''

''அவன் ஜூனியர் இல்லையோ?''

''ஜூனியர்தான். ஆனால் எம்.டி.க்கு உறவு.''

''ஓ காட்!''

இருவரும் சிறிது நேரம் மௌனக் கோபத்துடன் அமர்ந்திருந்தார்கள்.

''எப்படி இவர்களால் தைரியமாக இப்படி செய்ய முடிகிறது? மனச்சாட்சி என்று ஒன்று இருக்காதா?''

''மனச்சாட்சி முட்டாள்களுக்குத்தான் இருக்கும்.''

ஹரி எழுந்திருந்தான்.

''ஒரு முட்டாளுக்குப் பசிக்கிறது.''

அகர்வால் சிரித்துக் கொண்டு எழுந்தான்.

''முட்டாள்களுக்கு நல்லவேளை இன்னும் பஞ்சமேற்படவில்லை. வா, எங்கேபோகலாம்?''

''ஐ. ஈ. என். எஸ். கான்டீனுக்குப்போகலாம்.''

லிஃப்டில் இறங்கிக் கீழே போகையில் போர்ச்சில் எம். டி. யின் கார் நின்றிருந்தது. எம். டி. இந்தண்டை அந்தண்டை பாராமல் நேராகச் சென்று பின் ஸீட்டில் உட்கார வண்டி கிளம்பிற்று.

''தி பாஸ்டர்ட்!'' என்றான் அகர்வால்.

ஹரிக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனுடைய கோபம்.

''ஓ கமான் ஹனி! எம். டி. யும் ஒரு அகர்வால்!''

''அதனால்தான் எனக்கு அவரைப் பத்தி நன்றாகத் தெரியும்!''

''உறவா?''

''இப்ப இல்லே!''

''எனக்குப் புரியல்லே.''

''என்னுடைய அக்காவின் புருஷனாய் இருந்தான். இரண்டு பிள்ளைகள் பிறந்ததும் அக்காவுடைய உறவு அலுத்துப் போயிற்று அவனுக்கு. விவாகரத்து பண்ணிட்டான்.''

ஹரி மௌனமானான். இந்த விஷயத்தை இதுவரை யாரும் சொன்னதில்லை.

''ஓ. அது நடந்து பன்னிரண்டு வருஷங்கள் ஆகிறது. ஒரு வேடிக்கை என்ன தெரியுமோ? என்னுடைய அக்கா இன்னும் வருஷா வருஷம் புருஷனுக்காக 'கர்வா சௌத்' விரதம் இருக்கிறாள்!''

ஐ.ஈ.என்.எஸ். கான்டீனில் நிறைய கும்பலிருந்தது. கையில் பஜ்ஜியும் ஊத்தப்பமும் தயிர் சாதமுமாக.

அவர்களிருவரும் பஜ்ஜி பொட்டலங்களை வாங்கிக் கொண்டு ஒதுக்குப்புறமாக நின்றார்கள்.

காலையில் இருந்த உற்சாகம் இந்த மோகன் அகர்வாலைப் பார்த்த பிறகு சப்பென்று வற்றிவிட்ட மாதிரி ஹரிக்கு பிரமை. இந்த மோகனும் ஒரு பாரம் தூக்கி. சுமை தாங்கி எங்கேஇருக்கிறது என்று அலைபவன்...

''சாயந்திரம் மீட்டிங்குக்குப் போகப் போறியா?''

''ஆமாம்.''

''அது ஒரு போர்! அதற்குப் பிறகு என் வீட்டுக்கு வாயேன்! மின்டோ ரோட் ஃப்ளாட்ஸ்லே இருக்கேன். டீ. சாப்பிட்டுப் போகலாம்.''

''இன்றைக்கு முடியாது மோகன். சாயந்திரம் கமானி ஆடிட்டோரியம் போகிறேன். மக்பெத் டிராமா. மாயாவோடு பார்க்கப் போகிறேன்.''

''அரே யார்! நான் மறந்தே போனேன். எப்படி இருக்கிறாள் உன் கர்ல் ஃப்ரண்ட்?''

''ஃபைன்!''

''அன்றைக்கு நீ அவளை அறிமுகம் செய்தபோது அவள் ஒரு மதராஸி என்று என்னால் நம்ப முடியவில்லை. சரியான டில்லி பெண்!''

''அவள் பிறந்து வளர்ந்ததெல்லாம் வடக்கில். அவள் அப்பா முப்பது வருஷங்களாக டில்லியில் இருக்கிறார்.''

''எப்பக் கல்யாணம்?''

''ஜனவரி மாசம்!''

''அடேயப்பா! அத்தனை தள்ளி ஏன்?''

''நிதானமா நடந்துட்டுப் போகட்டுமே என்ன அவசரம்?''

''அரே யார், இதெல்லாம் தான் 'மோஸ்ட் இம்மீடியட்' விஷயங்கள்!''

ஹரி சிரித்தான்.

''அவளுடைய அண்ணா அமெரிக்காவில் இருக்கிறான். அவனுக்கு ஜனவரியில்தான் இந்தியாவுக்கு வர முடியுமாம். அவன் வந்ததும் கல்யாணம்.''

''நீ ரொம்ப அவசரக்காரன் என்று நினைத்தேன்'' என்றான் மோகன் அகர்வால்.

''சிலவிஷயங்களில் ரொம்பப்பொறுமை!''

அன்று மாலை மீட்டிங் முடியும்போது 5.50. நேரமாயிற்று என்கிற பரபரப்போடு அவன் மோட்டார் சைக்கிளைச் செலுத்தினான். மாயா காத்திருக்கப் போகிறாள். நாசமாப் போகிற மீட்டிங். இந்த மீட்டிங் எல்லாம் என்ன சாதிக்கப் போகிறது? பணம் பண்ணுகிறவன் பணம் பண்ணிக்கொண்டு, அனுபவித்துக்கொண்டு இருப்பார்கள். மெத்தனமாக இருப்பவர்களின் மத்தியில் — மனச் சாட்சியோடு உலவும் பிரேதங்கள் என்ன சாதிக்க முடியும்? ஆத்திரப்பட்டுக் கொண்டு கண்ணீர் விட்டுக்கொண்டு... விவாகரத்து செய்த கணவனுக்காக 'கர்வாசௌத்' செய்து கொண்டு.... இதைத் தவிர....?

ட்ராஃபிக் சிக்னல் கலைந்தது. அவன் சட்டென்று விழித்துக் கொண்டு ப்ரேக் போட்டு முடிவதற்குள்...

பின்னாலிருந்து ஏதோ பலமாகத் தாக்கினாற்போலிருந்தது. மோட்டார் சைக்கிள் ஒரு ''ஸமர்ஸால்ட்'' அடித்தது. பிரக்ஞையில் உறைத்தது. பிறகு பிரக்ஞை போயிற்று.

(தொடரும்)



நடிகை: "என் பிறந்த நாள் அடுத்த வாரம் வருகிறது. அன்று பத்திரிகையாளர்கள் ஆச்சர்யப்பட்டுப் பிரசுரிக்குமாறு ஏதாவது சொல்ல வேண்டும். என்ன சொல்லலாம்?"

தோழி: ஏன், உன் சரியான வயதைச் சொல்லேன்!"

- ஏ. வி. தேவன்


மங்கல மதிமுகத்தில் மெருகூட்ட
ஐடெக்ஸ்
டீலக்ஸ் குங்குமம்
matt finish
ஐடெக்ஸ்
38 ஆண்டுகளாக
உங்கள் நம்பிக்கையின்
மகத்தான சின்னம்
அரவிந்த் லாபரடரீஸ் சென்னை 600033.
Imageads-AL-1304 Tam

'போர்த்திப் படு!'



லிப்டில் இறங்கும்போது ரத்தத்தில் அமிர்தம் இருந்தது. மனசு எல்லா இளம் பெண்களையும் வா வா என்றது. லட்ச ரூபாய்க்குக் கரன்ஸி நோட்டுக்களாக எடுத்து வாரி இறைக்கலாம் போலிருந்தது. நாரிமன் பாய்ண்ட் ஏரியா அவசரமாய் இரவுக்குத் தாவிக் கொண்டிருந்தது.

இருபது நாள் பயிற்சி முடிந்தது.

திரும்பிச் சென்னை வந்து அண்ணா சாலையில் ஏழடுக்குக் கட்டடத்தின் நாலாவது தளத்தில் இந்தியாவின் மூன்றாவது பெரிய கம்பெனியின் பர்சேஸ் எக்ஸிக்யூடிவ் என்ற பெயரில் இயங்கும் நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது.

அரவிந்த் மற்ற நண்பர்களிடம் விடைபெற்றுக்



பிரதிபா ராஜகோபாலன்

கொண்டான். தமிழ் பேகம் ரங்கராஜனுடன் வெளியே வந்தான்.

''ரங்கராஜ், நீ ஹைதராபாத் போகிறாய். நான் மெட்ராஸ். இருபது நாள் பயிற்சி நிறைய விஷயங்களைக் கற்றுத் தந்தது. விரைவில் சந்திப்போம். அதற்கு முன் இந்த இரவைச் சிறப்பாகக் கொண்டாடலாம்.''

''தாஜ் போகலாமா?''

''வேண்டாம்.''

''காபரே டான்ஸ் போகலாமா?''

''எங்கே?''

''ஹோட்டல் அல்ல. ஒரு பங்களாவில். மிகப் பெரிய மனிதர்களுக்காக ஸ்பெஷல் காபரே. டிக்கட் வேண்டியதில்லை. பர்மிஷன் வாங்கிவிடுகிறேன். எனக்குத் தெரிந்தவர் நடத்துகிறார்.''

''நான் இதுவரை காபரே பார்த்ததில்லை''





திகைப்பு பாவம் (அற்புதம்)

சொல் குளறும், மெய் சிலிர்க்கும், கண்களில் வியப்பு குடி கொள்ளும், விழிப்பதும் இமைப்பதுமாய் இருக்கும். — சிலப்பதிகாரம் : அடியார்க்கு நல்லார் உரை

''இன்று ஆடுகிறவள் மிக்க அழகான பெண். இரண்டு நாள்தான் இங்கு ஆடுவாள். அப்புறம் டெல்லி, கல்கத்தா, சிம்லா என்று நகரங்களை மாற்றிக் கொண்டிருப்பாள்.''

''பார்த்துவிடலாம்.''

டாக்ஸி பிடித்து மாதுங்கா அறைக்குப் போய்க் குளித்து உடை மாற்றி மார்லிங் குளோரி தெளித்து, பக்கத்து கன்ஸர்னில் சாப்பிட்டுவிட்டு, டாக்ஸி பிடித்து மலபார் ஹில் போனார்கள்.

''அரவிந்த், உனக்குப் பெண்களைப் பிடிக்குமா?''

''எந்த மாதிரிப் பெண்களை?''

''நாம் பார்க்கப் போகும் பெண்கள் மாதிரி.''

''பிடிக்காது.''

''ஏன்?''


''என் மனசில் இருக்கும் பெண்கள் சுத்தமானவர்கள்.''

''இவர்கள் அசுத்தமானவர்களா?''

''காபரே டான்ஸ் ஆடுகிறவள் சுத்தம் என்று நம்புகிறாயா?''

''அசுத்தம் எங்கேயும் இருக்கிறது.''

''ஆகவே?''



''எதையும் தெரியாமல் சொல்ல முடியாது.''

''சோதனையில் ஆயுள் பூராவும் கழிந்து விடும். கல்யாணத்துக்கு இன்ன மாதிரி, காதலிக்க இன்ன மாதிரி, காபரே டான்ஸ் பார்க்க இன்ன மாதிரி என்று பெண்கள் இருக்கிறார்கள்.''

''காதலிக்கிறாயா நீ?''

''இப்போதைக்கு இல்லை. படிக்கிற காலத்தில்.அவள் எதிர்வீட்டில் இருந்தாள்.''

ரங்கராஜன் சிரித்தான். டாக்ஸி பம்பாயின் ஏழரை மணி இரவைக் கிழித்துக் கொண்டு பறந்தது.

''படிக்கிற காலத்தில் வேலைக்காரி கூட லைலா மாதிரி தெரிவாள். வயசு அப்படி.''

''நான் அப்படி இல்லை. மனதாரக் காதலித்தேன். கற்பனை செய்தேன்.''

''இப்போதும் காதலிப்பாயா அவளை?''

''இப்போது கிடைத்தாலும் அவளைப் பண்ணிக் கொள்வேன்'' என்றான் அரவிந்த்.

''ரொம்பப்பேர் அப்படித்தான் சொல்வார்கள்.''

''நான் அந்த குரூப் இல்லை.''

அரவிந்த் பழைய நினைவுகளில் ஆழ்ந்தான்.

தேவராயபுரம் நகரத்தின் கோபத்துக் குப்பயந்து ரொம்பத் தள்ளி இருந்தது.கேரள எல்லையில் நெம்மாரா வனங்களின் அணைப்பில் ஓரத்தில் ஒதுங்கி இருந்தது. நாகரிகத்தின் சின்னமாய் மின்சாரம் கூட வராத காலத்தில் அர்விந்த் எட்டு மைல் சைக்கிளில் போய்ப் படித்து வந்தான். அநேகமாய் அவன்தான் நகரத்துக்கும் கிராமத்துக்கும் நாகரிகத்தின் தூதுவனாய், செய்திகளின் தூதுவனாய் இருந்தான்.

எதிர் வீட்டில் குருநாதன் இருந்தார். அவர் முன்னோர்கள் தலைசிறந்த சிற்பிகளாய் இருந்தார்களாம். தேவராயபுரத்தில் இப்போதும் பழங்காலக் கோயில் இருக்கிறது. அதைக் கட்டி முடித்த அவருடைய முன்னோர் இந்த ஊரில் தங்கிவிட்டார்கள். ஆனால் குருநாதன் தம் சிற்பத் தொழிலை மறந்து ஆட்டுக் கல்லும் அம்மிக் கல்லும் செய்து கொண்டிருந்தார்.

அவருக்கு மூன்று பெண்கள். நான்கு பையன்கள். கமலாதான் மூத்த பெண். அரவிந்த் தன்னைவிட நான்கு வயது சின்னவளான கமலாவைத்தான் எல்லாப் பெண்களுக்கும் முன்னோடியாய், பிரதிநிதியாய் நெஞ்சில் வைத்திருந்தான்.

அரவிந்தின் அப்பா அந்த வட்டாரத்தில் கம்பவுண்டராக இருந்தார்.

கிட்டு: ''பயங்கரமான காய்கறி! எது தெரியுமா?''

பட்டு: ''தெரியலையே''

கிட்டு: ''கத்திரிக்காய்தான்?''

பட்டு: ''எப்படிடா?''

கிட்டு: ''கத்தி, கத்ரி இரண்டும் இருக்கே அதில்!'' -உ. ராஜாஜி



குருநாதன் சாயந்திர வேளைகளில் இவன் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்து. பழைய கதைகள் பேசுவார். மனைவியை முப்பத்து மூன்றாவது வயதில் இழந்தவர். குழந்தைகளின் நன்மையைக் கருதிக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாதவர்.

''இனி நமக்கேதுங்க கண்ணாலம்... நாலு வருஷம் போனாக் கமலா கண்ணாலத்துக்கு வந்து நிப்பா...'' என்பார்.

கமலா இப்போதே குடும்பத்தின் தாய்மைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்.

''டீ சாந்தா... கொளம்பைக் கொஞ்சமா ஊத்தி முழுங்கடி... மத்தவங்களுக்கு வேண்டாமா... இவம் பாரு... டவுசரக் கிளிச்சிட்டு வந்திருக்கான்... கிளியாம இருக்கிறது இது ஒண்ணுதான்.... போன தீவாளிக்கு வாங்கின கடனே திராமத் தள்ளிட்டுப் போகுது. ஊட்டுக்கு ரெவ்வெண்டு கல்லு வச்சிருக்கிற காலம்... நம்மகிட்ட எவ அம்மியும் ஆட்டாங்கல்லும் வாங்கிட்டுப் போறா.. ரெண்டு பேரும் தின்னுபோட்டுக் காட்டுக்குப் போயி ரெண்டு சொமை வெறகு பொறுக்கிட்டு வந்துரோணும்....'' என்பாள்.

''போக்கா... காக்கிச் சட்டை போட்ட இன்சுபெக்டரு பாத்தாப் புடுச்சுக்குவாரு.''

''அவன் கெடக்கறான். அடுப்ப கை கால வெச்சா எரிக்கிறது. அவன் பொண்டாட்டி கரண்ட் வச்சா எரிப்பா?''

''ஏக்கா நம்ம ஊருக்கு கரண்டு எப்ப வருமாம்?''

''சுடுகாட்டுக்குப் போறப்ப வரும். நீ கட்டி வச்சிருக்கியா பங்களா... லைட்டுப் போடறதுக்கு?''

''பக்கத்து ஊர்ல ஒரு வெள்ளைக்காரன் வந்திருக்கான். கூட அவன் பொண்டாட்டியும் வந்திருக்காளாம். காட்டைச் சுத்திப் போட்டோ எடுக்க வந்திருக்கான்னு கம்பவுண்டர் ஊட்டு மாமா சொல்லுச்சு...''

அரவிந்த், கமலா வீட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளையும் பேச்சுக்களையும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் கவனிப்பான்.


''டீ சாந்தி, பொன்மணி போத்திப் படுங்கடி.... படுத்திருக்கிற லச்சணத்தைப் பாரு. பசங்க இருக்கிற ஊட்ல... கொஞ்சமாவது 'இது' இருக்கணும் இல்லே?...''

இந்தப் 'போர்த்திப் படு' வார்த்தைகள் ஒவ்வொரு ராத்திரியும் நாலைந்து முறையாவது கேட்காமல் இருக்காது.

''சின்னப் புள்ளைங்கதானே... எப்படியோ படுத்துட்டுப் போறாங்க உடு'' என்பார் அவள் அப்பா.

''எப்படியோ படுக்கறதுங்கறது என்னப்பா பழக்கம்... இதெல்லாம் பெரிசாகிப் போற எடத்துக்குப் போனாலும் இந்தப் பழக்கம்தானே வரும்?'' கமலாவே சின்னப் பெண். ஆனால் அவள் அந்த வார்த்தைகளைப் பேசும்போது ஒரு தாயாகவும், முதிர்ச்சி உடையவளாகவும், கண்டிப்பு உடையவளாகவும் தோன்றுவாள்.

''என்ன கமலா... இன்னைக்கு என்ன கொழும்பு?'' என்று அரவிந்த் சில சமயம் கேட்பதுண்டு. அவளுடன் பேச வேண்டும் என்ற தாகம் அவனுள்ளே ரொம்ப சமயங்களில் அரிக்கும்.



குழந்தைக்கு 3 மாதமாகும்போது பால் மட்டும் போதாது

உங்கள் குழந்தைக்குத் தேவை ஃபாரெக்ஸ்

3-ஆம் மாதம்—திட உணவு துவங்கும் காலம்

3 மாதம் ஆனபின், குழந்தையின் வளர்ச்சிக்குப் பால் மட்டும் போதாது. குழந்தை சுறுசுறுப்பாயும் விரைந்தும் வளரும் சமயம்—பாலில் கிடைப்பதைவிட அதிக கலோரிகளும் இரும்புச்சத்தும தேவை குழந்தைக்கு திரவ உணவைக் குறைக்கும் வகையிலும் அதிக கலோரிகளை வழங்கவும் மென்றுத்தின்னப் பழகவும் திட உணவு தேவை.

ஏன் டாக்டர்கள் ஃபாரெக்ஸ் சிபாரிசு செய்கிறார்கள்?

குழந்தை திட உணவைத் துவங்குவதற்கு தனிப்படத் தயாரிக்கப் பட்டது—ஃபாரெக்ஸ். இதில் புரதம், கார்போஹைட்ரேட், கொழுப்பு, கால்ஷியம், பாஸ்பரஸ் மற்றும் வைட்டமின்கள் உள்ளன குழந்தையின் வளர்ச்சிக்கு அவசியமான இரும்புச்சத்தும் அதிகமுள்ளது. ஆகவே, குழந்தையின் விரைந்த முழு வளர்ச்சிக்கு உன்னதமான திட உணவாகிறது ஃபாரெக்ஸ்.



டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ்
குழந்தையின் விரைந்த முழுவளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு

CASGLF-10-172 TAM



Yendelux
coconut oil
என்டீலக்ஸ்
தேங்காய் எண்ணெ
15, 4 கிலோ டின்களிலும் 1 கிலோ 500, 200 கிராம்
பாலிதீன் பாட்டில்களிலும் கிடைக்கிறது.
மு. மு. நாகலிங்க நாடார் சன்ஸ்
உரிமையாளர்கள் :
ஸ்ரீ நாகலிங்க விலாஸ் ஆயில் மில்ஸ்
கொல்லம்—கோவா, போன் : ஆபீஸ் : 2244, 4484, மில்ஸ் : 2266, 4611

''எங்க கொழம்பைப் சாப்பிடதாப்ல இருந்தாச் சொல்லேன்.''

''சாப்பிடும்படியா இருந்தாச் சாப்பிடு வேன்.''

''நாங்க சாப்பிடறோமே அப்படின்னு நாங்க என்ன....?''

''சரி, சரி, கோபிச்சுக்காதே...''

''பின்னென்ன நாங்க சோறுக்காமயா ஆம்பளைங்க தின்னுக்கிட்டிருக்கேங்க...?''

''ஆமாமா... நீ ஆக்கினதைத்தான் நான் திங்கணும்னு ஆசை...''

''அப்ப இன்னைக்குத் தின்னுங்க...''

''என்னைக்கும்தான்.''

''அதெல்லாம் முடியாதுப்பா.''

''ஏம்பா'' அவன் சிரித்து விடுவான்.

மனசுக்குள் அந்த வயதின், நிலை புரியாத தன்மையின் ஒரு வெளிப்பாடாக இப்படி நிறைய வார்த்தைகளை வைத்துக் கொண்டு நிறையத் தவித்திருக்கிறான்.

படிக்கவில்லை என்பதைத் தவிர, தான் அவளையும், அவள் தன்னையும் மணம்புரிந்து கொள்ளத் தகுதிகள் கோடானு கோடி இருக்கின்றன என்று மனசைத் தயாராக்கிக் கொண்டிருக்கும்போது கமலா, பக்கத்து ஊரில்தங்கிய வெள்ளைக்காரத் தம்பதிகளுக்கு வேலைக்காரப் பெண்ணாகப் போய்விட்டாள்.

''மூணு வேளையும் சோறு போட்டு, துணி மணி எடுத்துக் குடுத்து மாசம் முப்பது ரூபா தர்றேன்னு சொன்னாங்க... இந்தப் பக்கம் நாலஞ்சு மாசம் இருப்பாங்களாம். அப்புறம் பம்பாய் போயிடுவாங்களாம்... எங்கியோ போய்ட்டு வரட்டும்...'' என்றார் கமலாவின் அப்பா.

அரவிந்துக்கு அந்த வார்த்தைகள் தன் எதிர்காலத்துக்கு நிறைய இருட்டைக் கொண்டு வரும் என்பது புரிந்தது. மனசுக்குள் வளர்த்திக் கொண்ட தோழமையும் அதற்கு மேம்பட்ட காதலும் சரேலென்று விலகியதும், தன் ஆற்றல், உணர்வுகள் என்று எல்லாமும் விலகுவது போல் உணர்ந்து பல நாள் பிரமை பிடித்தவன் போல் நடமாடிக் கொண்டிருந்தான்.

அந்த வருஷம் அவனுடைய அப்பா, நகரத்திலிருந்த ஒரு பிரபல டாக்டரிடம் கம்பவுண்டராகச் சேர்ந்து கொண்டார். அதனால் குடும்பம் நகரத்துக்கு நகர்ந்தது. காலத்தின் வேகத்தில் மனசுக்குள் தேவராயபுரம் மெல்ல மெல்ல மங்கிக்கொண்டது. ஆனால் அதே சமயம், கனவிலிருந்து விலுக்கென்று விழித்துக் கொண்டு ரொம்ப நேரம் பிரமை பிடித்து உட்கார்ந்திருப்பது போல் கமலாவின் ஞாபகம் நெஞ்சுடன் அவனை ஆக்ரோஷத்துடன் தாக்கி ஆக்கிரமிக்கும். ஆனால் அவை பொய்யாய் பழங் கதையாய் மெல்ல மெல்லப் போன பின் எதுவுமே சாத்தியமாய்த் தோன்றவில்லை.

மேல் படிப்புக்காகச் சென்னை வந்து எம். பி. ஏ. படித்து இந்தக் கம்பெனியின் அடித்தள ஆபீசராகித் திறமையாய் முன்னுக்கு வந்து 'இப்போது கம்பெனியின் பர்சேஸ் எக்ஸிக்யூட்டிவ் என்ற முக்கிய நிர்வாகியாய், மூவாயிரம் ரூபாய் சம்பளத்துக்கு முன்னேறிய பின் பழைய கமலா புதிய உத்வேகத்துடன் புதிய ஞாபகப்



''நமக்குக் கல்யாணமாகி இன்றோடு மூன்று வருடங்களாகிறது... நினைவிருக்கிறதா?''

''ஆமாம்....நடந்து போனதை நினைத்து ஏன் கவலைப்படுகிறீர்கள்...!''

பின்னணிகளுடன் மனசில் இளை கொள்ள ஆரம்பித்தான்....

மலபார் ஹாலில். பளபளவென்று மின்னிய பித்தளைக் கேட்டுக்கு இருபுறம் இரு கூர்க்காக்கள் நின்ற அந்தப் பங்களாவின் உள்ளே நுழைய நுழைய காஞ்சிபுரம் பட்டின் மென்மையை உணர்ந்த சுகமே தெரிந்தது.

பெரிய பெரிய அறைகளைக் கடந்து சென்றனர். லஸ்தர் விளக்குகளும் சிவப்பு கம்பளங்களும், ஸ்டீரியோ வசதிகளும், புகை மண்டலமும் நிறைந்த குறிப்பிட்ட அறையில் நுழையும்போது கலர் வட்டங்கள் மாறி மாறிச் சுழலுமியிருந்த முகங்களுக்குப் புதிய நிறங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தன.

அரவிந்தும் ரங்கராஜனும் இடம் பிடித்து காபரே டான்ஸரின் உடம்பை ரசிக்கலாம் என்ற ஆர்வத்தில் மிதந்து கொண்டிருந்த போது கொஞ்சலான பெண்மை நிறைந்த ஆணின் ஆங்கிலக் கட்டியத்துக்குப் பின் நிறைய ஜரிகை வைத்துத் தைத்த உடையின் செக்ஸ் அப்பீல் ஜிமிக்கிகளுடன் டான்ஸர் நுழையும்போது எல்லோர் மூச்சும் பார்வையும் திரண்டு அவளின் ஐந்தடி உடம்பில், முக்கியமாய் அவளுடைய புன்சிரிப்பு மையத்தில் திரண்டது.

விருக்கென்று வாத்தியக் கோஷ்டியில் தாடி மீசை வைத்த ஒருவன் தன் டிரம்மில் முழு வேகத்துடன் டர்ரென்று ஒரு இழுப்பு இழுத்த பின் எல்லோரும் உயிர் பெற்றனர்.

அரவிந்த் அவளை உற்றுப் பார்த்த பின், ''ரங்கராஜ், இவள் பேர் என்ன?'' என்றான் திடுக்கிட்டு, திகைத்து.

''கமலினி, மதராஸி.''

''இவளுடைய சரித்திரத்தைப் பற்றி ஏதாவது தெரியுமா?''

''தெரியாது. சொந்த ஊர் கோயமுத்தூர் டிஸ்ட்ரிக்ட் என்று மட்டும் தெரியும்.''

அரவிந்த் மறுபடியும் உற்றுப் பார்த்தான்.

'போர்த்திப் படு போர்த்திப் படு' 'என்று எல்லோரையும் ஒழுங்குபடுத்திய கமலா என்ற கமலினி பளபளக்கும் தன் அங்கியைக் கழற்றி எறிந்துவிட்டு வெளிச்ச வெள்ளத்தின் மத்தியில் துள்ளி ஆட ஆரம்பித்தாள்.

தேவராயபுரம் எங்கே? மலபார் ஹால் எங்கே?

உற்சாகமெல்லாம் பறக்கத் தன்னைப் பெரிய போர்வையாய்ப் போர்த்திக்கொள்ள வேண்டும் எனத் தவிக்க ஆரம்பித்தான் அரவிந்த்.

உலகத்தின் மூன்றாவது புத்திசாலி யார்?

கடுகு பதில்கள்

✠ ரேவதி, திருச்சிற்றம்பலம்.
கே: பாரதியார் பாடலைப் பரப்புவதற்கு யோசனை தரக்கூடாதா?
ப: இன்றைய புதிய தலைமுறையினர் பாரதி பாடல்களைப் படிக்க வேண்டியது மிக அவசியம். தேசப் பற்று, மொழிப் பற்று, பக்தி, தியாகம் போன்ற பல துறைகளில் நலிவு ஏற்பட்டுள்ள இன்று பாரதி பாடல்களைப் போன்ற பெனிசிலின் எதுவுமே கிடையாது. ஹைதராபாத்தில் உள்ள எழுத்தாளர் சுபஸ்ரீ, பாரதி பக்தர். 'பாஞ்சாலி சபத'த்தை வில்லுப் பாட்டாகக் கதை சொல்கிறார். அதை ஊர் ஊராக நடத்தலாம்.


சுபஸ்ரீ

✠ எஸ். எல். பி. குமார், பெங்களூர்-21.
கே: ஒரு நாளைக்கு எவ்வளவு மணி நேரம் தூங்கலாம்?
ப: தூங்குகிற நேரம் முக்கியமில்லை. விழித்துக்கொண்டிருக்கிற நேரத்தில் என்ன பயனுள்ள பணிகளைச் செய்கிறோம் என்பதே முக்கியம்.

✠ வெ. கிரி ராஜன், கோவை.
கே: திறமை இருந்தும், வாங்க வாடிக்கையாளர்கள் காத்திருந்தும் துவங்கின தொழிலைச் சரிவர நடத்த முடியாமல் துவண்டு நிற்கிறேன். கடுகு துணை நிற்குமா?
ப: திறமை இருக்கிறது; வாடிக்கையாளர்கள் இருக்கின்றனர்; சரிவர நடத்த முடியவில்லை என்றால் உங்கள் திறமையை முழுதாக உபயோகிக்கவில்லை என்று அர்த்தம். வியாபாரத்தில் சில சமயம் இறக்கம் இருக்கலாம். அதைக் கண்டு துவண்டு விடாதீர்கள். எவன் எவனோ பின்னலில் கொடி கட்டிப்பறக்கும் போது நம்மால் முடியாதா என்று சவால் விட்டுக் கொண்டு இறங்குங்கள். முனைப்போடு செயல்படுங்கள். செய்த தவறுகளைப் பற்றியும் தொழில் அபிவிருத்தி பற்றியும் சிந்திக்க அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள்.

✠ ப. மூர்த்தி, பெங்களூர்-21.
கே: விலைகளை ஏற்றி பத்திரிகைக்காரர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். வாங்குபவர்கள் எப்படித் தப்பிப்பது?
ப: வாங்குபவர்கள் 'தப்பித்து'க்கொள்ளவே தான் பல பத்திரிகைகள் மறைந்து கொண்டு வருகின்றன.

✠ ஸ்ரீ ஸ்ரீதரன், ஈரோடு-1.
கே: உலகத்தின் மூன்றாவது புத்திசாலி யார்? (நாம் இருவரும் ரொம்ப தன்னடக்கம் உடையவர்கள் என்பது தெரிந்ததே)
ப: மூன்றாவது நீங்கள்தான். காரணம் நான் இரட்டைப் புத்திசாலி. (உண்மையைச் சொல்ல வேண்டிய சமயத்தில் தன்னடக்கம் கூடாது என்பது என் கொள்கை!)

✠ கே. வி. சுப்பம் பாஸ்கரன், சென்னை-50.
கே: பாராட்டுவது எப்படி?
ப: பாராட்டை விரும்பாதவர்களே கிடையாது. ஆனால் பொய்யான பாராட்டால் யாருக்கும் லாபமில்லை. பாராட்டும்போது உண்மையாக இருங்கள். தாராளமாகப் பாராட்டலாம். மிகையாக வேண்டாம். பாராட்டுவதினால் இரண்டு லாபங்கள் உண்டு. பாராட்டப்படுபவர்கள் ஊக்கம் பெறுகிறார்கள்; உங்கள் மேல் நட்பும் கொள்கிறார்கள். எமர்சன் சொன்னாராம்: ''நான் சந்திக்கும் ஒவ்வொரு மனிதனும் என்னைவிட ஏதோ ஒரு அம்சத்தில் உயர்ந்தவனாக இருக்கிறான்.'' அந்த அம்சத்தைக் கவனித்துப் பாராட்டுங்கள். நீங்களும் பலன் பெறுவீர்கள்.

✠ கலாப்பிரியா, மேட்டுப்பாளையம்.
கே: வரதட்சணைக் கொடுமையை இந்து மதத்தினர் எப்போது வெல்லுவார்கள்?
ப: இந்தக் கொள்கை எல்லா மதத்திலும் பரவியுள்ள கான்சர். சமீபத்தில் இரண்டு அனுபவங்கள் ஏற்பட்டன. ஒரு திரைப் படத் தயாரிப்பாளர் சொன்னார்: ''என் பெண்ணை டாக்டருக்குப் படிக்க வைக்க யோசனையாக இருக்கிறது. அவள் வெறும் பி. ஏ. வாக இருந்தாலே 20 லட்ச ரூபாய் செலவாகும். டாக்டராகி விட்டால் இன்னும் பெரிய இடத்துக்குப் போகவேண்டும்: 50 லட்சம் ஆகும். ''பம்பாய் மின்சார ரயில் டிரைவராக இருக்கும் ஆங்கிலோ இந்திய நண்பர் சொன்னார்: ''என் பெண்ணுக்கு பியானோ, பால் டான்ஸ், பரதநாட்டியம்! டைப்ரைட்டிங், ஷார்ட்ஹாண்ட்எல்லாம் கற்றுத்தந்திருக்கிறேன். இருந்தும் 2 லட்ச ரூபாய் செலவாகும் அவள் கல்யாணத்துக்கு.'' இந்தக் கொடுமையை இன்றுள்ள சமுதாய, பொருளாதார நிலையில் அழிப்பது கடினம். இருந்தாலும் முயற்சியைக் கைவிடக் கூடாது.




பரிசு பெறுபவர்:
வெ. கிரி ராஜன்,
172, தெலுங்கு
(பிராமணாள்) வீதி,
கோவை 641001.








"மூன்று பெரிய ரேடியோ வாங்கினால்
ஒரு சின்ன ரேடியோ இலவசமுன்னு
சொன்னாங்க, வாங்கிட்டு வந்துட்டேன்!"



"மெட்ராஸ்
வெய்யிலுக்கு
இந்த டிரஸ்தான்
பொருத்தமா
இருக்கு!"











ளம்பரஹிம்

— எஸ். சோமசுந்தரம்





அவனுக்குத் தன்மேலேயே கோபம் வந்தது. ஏன் அப்படிக் கோழையாகிவிட்டான்? அந்தத் தடியன் தண்டபாணி கேண்டீனில் அத்தனை பேர் எதிரிலும் அவனை அவ்வளவு உதாசீனப்படுத்தியபோது சூடாக நாலு வார்த்தையாவது பேசியிருக்க வேண்டாமா? வாயே திறவாமல் வாலைக் குழைத்துக் கொண்டு வருவது போல் வந்துவிட்டானே! சே! என்ன கேவலம்!

இப்படித் தணிந்து தளர்ந்து போவதே அவன் வழக்கமாகி விட்டதே! அவனுடைய சுபாவமே இப்படித்தானோ? சுபாவமாவது சுபாவம்! அதை உதறி எறிந்துதானாகவேண்டும். தனக்கும் ஆணவம் உண்டு. மான ரோஷம் உண்டு என்று உலகம் உணரும்படி செய்துதான் ஆக வேண்டும்.

அவனுடைய உலகம் ஆபீசையும் வீட்டையும் விட்டால் என்ன இருக்கிறது? இந்தக் குறுகலான உலகத்தில் கூட அவனுடைய எண்ணங்களுக்கோ உணர்வுகளுக்கோ மதிப்புக் கொடுப்பவர் யாருமே இருந்ததாகத் தெரியவில்லையே! குட்டக் குட்டக் குனிந்து போகும் அப்பாவி என்றுதானே எல்லோரும் அவனைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்! முதுகெலும்பே இல்லாதவன் என்ற இளக்காரம்தான் எல்லோருக்கும் — கேலியாகச் சிரிப்பார்கள். சிலர், 'ஐயோ பாவம்' என்று பரிதாபப்பட்டு அனுதாபம் தெரிவிப்பார்கள். நிரந்தரமான ஒரு சோகம் இழையோடும் வாழ்க்கையாகி விட்டதே தன்னுடையது.

மேஜை எதிரே கூனிக் குறுகிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறோம் என்ற உணர்வு அப்போதுதான் அவனுக்கு ஏற்பட்டது. நெஞ்சை நிமிர்த்தி விட்டுக் கொண்டான். முதுகைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். முதுகெலும்பு முடிச்சு முடிச்சாகத் தட்டுப்பட்டது. இது இவ்வளவு வலுவாக இருக்க எதற்காகக் அவன் கூனிக்குறுகவேண்டும்?

கோடியில் மற்றவரை விட வித்தியாசமானவன் என்று தன்னைக் காட்டிக் கொள்வதற்காக மேஜையைச் சாய்வாகத் திருப்பிப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த தண்டபாணி கூட முதுகை வில்லாக வளைத்துக் கொண்டுதான் மேஜைக்கு முன்னே குனிந்திருந்தான். அந்தக் கூனிய முதுகில் ஒரு குத்து விடுவதற்கு எவ்வளவு நேரமாகும்? குத்து விட்டால்தான் ஆத்திரம் தீரும்போல் இருந்தது. தடிப் பயல்! வேண்டுமென்றே எல்லோரெதிரிலும் அவனை எப்படி அவமானப்படுத்தி விட்டான்!

கேண்டீனுக்குப் போனதே தப்புத்தானோ? அங்கே போகாமலே இருந்திருக்கலாமோ? போக வேண்டிய அவசியம் என்ன இருந்தது? கேண்டீனில் கண்டதையும் சாப்பிடக் கூடாதென்றுதானே ராஜி ஒவ்வொரு நாளும் தலைப் பொறிபோல் அவனுக்கு டிபன்



பரிதாப பாவம் (அவலம்)

கவலையோடு கண்ணீர் பெருக்குதல், முகமும் உடலும் வாடுதல், வார்த்தை குளறுதல்.

— சிலப்பதிகாரம்: அடியார்க்கு நல்லார் உரை



பாக்ஸ் நிறைய ஏதாவது கொடுத்து அனுப்புகிறாள்? லஞ்ச் டயத்தில் ரூமை விட்டு எல்லோரும் எழுந்து போன பிறகு தான் மட்டும் தனியே உட்கார்ந்து சாப்பிடுவது என்னவோ போல் இருக்கிறது என்று ஏன் நினைத்தான்? கேண்டீனின் கலகலப்பான சூழ்நிலையில் உட்கார்ந்து சாப்பிட வேண்டும் என்று நப்பாசை ஏன்? அதற்கு இடம் கொடுத்திரா விட்டால் தண்டபாணியின் நீசத்தனமான கிண்டலுக்கு இடமே இருந்திருக்காதில்லையா?

பெரும்பாலும் ராஜி டிபன்பாக்ஸில் கெட்டியான மோர் சாதமும் தொட்டுக்கொள்ள ஏதாவது ஊறுகாயும் வைத்திருப்பாள். மோர் சாதம் மத்தியானத்துக்குள் நன்றாகப் புளித்துப் போயிருக்கும். எனவே அவன் ஊறுகாயை எடுத்து டிபன் பாக்ஸ் மூடியில் வைத்து விட்டுச்சாதத்தில் கொஞ்சம் தண்ணீரை விட்டு நெகிழ்த்திக்கொண்டு தான் சாப்பிட ஆரம்பிப்பான். அன்றும் அப்படித்தான். டம்ளரில் தண்ணீர் எடுத்துக் கொண்டு டிபன் பாக்ஸுடன் சாப்பாட்டு மேஜை எதிரே உட்கார்ந்து டிபன் பாக்ஸைத் திறந்தான். இதென்ன! ராஜி ஊறுகாயே வைக்கவில்லையே! மறந்து விட்டாளா?

சட்டென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. டிபன் பாக்ஸை மூடாமலே வைத்து விட்டு ஸெல்ஃப் ஸர்வீஸ் கவுண்டருக்கு விரைந்தான். முப்பது பைஸாவைக் கொடுத்து ஒரு வடைக்குச் சீட்டு வாங்கிக் கொண்டான். வடை கிடைத்தது. ஆனால் அவன் ஆவலுடன் எதிர்பார்த்த சாம்பார் கிடைக்கவில்லை. தீர்ந்து விட்டதென்று சொல்லி அதற்குப் பதிலாக ஓட ஓட சட்னி தான் இரண்டு கரண்டி ஊற்றினான் கேண்டீன் சிப்பந்தி. மீண்டும் டிபன் பாக்ஸ் எதிரே வந்து உட்கார்ந்து ,சட்னியைச் சிறிது ருசி பார்த்தான். எப்போது அரைத்த சட்னியோ புளித்துப் போயிருந்தது. அதோடு அழுகல் நெடி மூக்கைத் துளைத்தது. தேங்காய் விற்கும் விலையில் அழுகல் தேங்காயைத் தூக்கி எறியக் கேண்டீன் முதலாளிக்கு மனம் வருமா? சட்னி அபிஷேகம் ஆகியிருந்த தால் வடையும் விரலால் தொடுவதற்கே பிடிக்கவில்லை. டிபன் பாக்ஸையும் வடை பிளேட்டையும் மாறி மாறிப் பார்த்தவாறு அவன் பிரமை பிடித்தாற்போல் உட்கார்ந்திருந்தான்.

அப்போதுதான் தண்டபாணியின் வெண்கலக் குரல் ஒலித்தது. ஆரம்பத்திலிருந்தே தண்டபாணி அவனுடைய தவிப்பைக் கவனித்திருக்க வேண்டும். ''ஏய் ரமணி! ஏண்டா இடிச்ச புளி மாதிரி உட்கார்ந்திட்டே?வழக்கம் போல மோர் சாதம்தானே? சட்டுப் புட்டுன்னு சாப்பிட்டுத் தொலையேன்! புளிப்பு நெடி தாங்க முடியல்லே!''

தண்டபாணியின் இந்தக் கிண்டல் மற்றவர்களின் பார்வையையும் ரமணியின் பக்கம் திருப்பியது.

''டேய்! ரமணி அப்பாவின்னு நினைச்சிண்டிருக்கபே, நாமதான் ஏமா



முதுகெலும்பு

உமாசந்திரன்

ளிங்க. பயலோட சாமர்த்தியத்தைப் பாருங்களேன்! முப்பது பைசா வடைக்கு ஈரணு கரண்டி சட்னி! சம்சாரம் தொட்டுக்க ஒண்ணும் வச்சு அனுப்பலே. அதுக்காக இந்த ஐடியா பண்ணியிருக்கான். கேண்டீன் நஷ்டத்திலே ஓடுதுன்னு ஏன் ஓடாது?'' இவ்வாறு கூறிச் சிரித்துக் கொண்டே தண்டபாணி, தட்டிலிருந்த சட்னியை வடையோடு சேர்த்து டிபன் பாக்ஸில் கொட்டி விட்டான்.

''சும்மா சாப்பிடு ரமணி. சங்கோஜப் படாதே!''

ரமணிக்கு ஒன்றுமே பேசத் தோன்றவில்லை. பேச ஆரம்பித்தால் அழுகை வந்து விடும்போலிருந்தது. சட்டென்று டிபன் பாக்ஸை மூடி எடுத்துக் கொண்டு அங்கிருந்து எழுந்து வேகமாக வெளிநடப்புச் செய்தான். தண்டபாணியும் மற்றவர்களும் சிரித்த சிரிப்பு அவன் நெஞ்சை அறுத்தது.

புளித்த மோர் சாதந்தான் என்றாலும் அதுகூட அவன் வாய்க்கு எட்டாமல் போய் விட்டதே! வயிறு காந்திக் கொண்டிருந்தது. மனமோ தீய்ந்து கருகிக் கொண்டிருந்தது. அந்த இடத்திலேயே அந்த டிபன் பாக்ஸ் சாதத்தைத் தண்டபாணியின் தலையில் கொட்டிக் கவிழ்க்கத் தோன்றவில்லையே அவனுக்கு!

இப்போதுகூடச் செய்யலாம். டிபன் பாக்ஸில் சட்னி அபிஷேகமான சாதம் அப்படியேதான் இருந்தது. மெதுவா தண்டபாணியின் பின்னே சென்று அவன் கவிழ்த்துக் கொட்டி விட்டால்? முகமெல்லாம் புளித்த மோர் சாதமும் அழுகல் தேங்காய் சட்னியும் வழிய, தண்டபாணி நிற்கும் காட்சியைக் கற்பனை செய்யவே ரமணிக்கு இன்பமா யிருந்தது.

அவன் பார்த்த பார்வையின் தீட்சண்யம் தண்டபாணியின் உணர்வைத் தாக்கியிருக்க வேண்டும். சட்டென்று நிமிர்ந்த அவன் ரமணி விரைப்பாக நெஞ்சை நிமிர்த்திக் கொண்டிருந்ததைக்கண்டு சிரித்து விட்டான். ''ஏய் ரமணி! என்ன ஆச்சு உனக்கு? நெஞ்சு வலியா? இல்லே, முதுகு வலியா?'' என்று கேட்டான்.

இந்தக் கேள்வியை ரமணி எதிர்பார்க்கவில்லைதான். எதிர்பார்த்திருந்தால் காரசாரமான பதிலை ஒருவேளை உருவாக்கி வைத்திருந்தாலும் வைத்திருப்பான். ஆனால் இப்போது காரசாரமான பதிலுக்காக அவன் மனத்துக்குள்ளேயே ஒத்திகை பார்க்க வேண்டியிருந்தது. வாயிலிருந்து வார்த்தை கிளம்ப மறுத்தது. சட்டென்று தொய்ந்தாற் போல் மேஜை மீது குனிந்து ஏதோ எழுத ஆரம்பித்தான். தண்டபாணியின் கேலிச் சிரிப்பு அவன் காதில் விழுந்து அவனையே வேதனைப் படுத்தியது.

''சார், உங்களை மானேஜர் ஐயா கூப்பிடறாங்க.''

ரமணி துள்ளி எழுந்தான். ஆனால் கால்கள் தொய்ந்து துவண்டன. நெஞ்சு திக் திக் கென்று அடித்துக் கொண்டது. மானேஜர் எதற்காகக் கூப்பிடுகிறார்? நேற்று ஒரு ஃபைலை அவருடைய கையெழுத்துக்காக அனுப்பி யிருந்தான். அதில் ஏதாவது தப்புக் கண்டு பிடித்து விட்டாரோ?


சில நிமிஷங்கள் பொறுத்து மறுபடியும் அவன் தன் இருக்கையில் வந்து அமர்ந்த போது அவன் முகத்தில் வெற்றிக் களிப்பு அலைமோதிக் கொண்டிருந்தது. அவன் அனுப்பியிருந்த ஃபைலில் மானேஜர்சுட்டிக் காட்டிய தவறு தவறே அல்ல. அவர் சரியாகப் புரிந்து கொள்ளாத முறைதான். சென்ற ஆண்டுத் துவக்கத்தில் இரண்டாயிரம் பேல் பேப்பர் ஸ்டாக் இருந்ததாக ரமணி ஸ்டேட்மெண்டில் குறிப்பிட்டிருந்தான். அதை நடப்பு ஆண்டுத் துவக்கம் என்று நினைத்துக் கொண்டுதான் மானேஜர் அவன் மீது எரிந்து விழுந்தார். இந்த ஆண்டுத் துவக்கத்தில் ஸ்டாக் இருநூறு பேல் கூட இல்லைதான். மானேஜர் ஆண்டு மாறிப் புரிந்து கொண்டதை ரமணி பக்குவமாகச் சுட்டிக் காட்டியதும் அவர் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே! அதை நினைத்து ரமணிக்குச் சிரிப்பு வந்தது.

சட்டென்று அவனுள் ஓர் ஆவேசம் பொங்கி எழுந்தது. சற்று நேரத்துக்கு முன்பு தனக்கும் முதுகெலும்பு இருக்கத்தான் செய்கிறது என்று நெஞ்சை நிமிர்த்திவிட்டுக்-கொண்டானே, அந்த ஆணவம் மேனேஜரின் எதிரே நின்றபோது எங்கே போயிற்று? ஃபைலைச் சரியாகப் பார்க்காமல் அவன் மீது சீறி விழுந்தவர் தன்னுடைய தவறு புரிந்ததும் அவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியது அவசியமில்லையா? ''நீ போகலாம்'' என்று அவர் அமர்த்தலாகக் கூறியதும் தப்பினோம் பிழைத்தோம் என்று வெளியே வந்துவிட்டானே? மான ரோஷம் உள்ளவனாயிருந்தால் என்ன செய்திருக்க வேண்டும்? ''மிஸ்டர் மானேஜர், அவ்வளவு அலட்சியமாக என்னைத் தட்டிக் கழித்து அனுப்பிவிட முடியாது. உங்கள் தவறுக்கு நீங்கள் மன்

அச்சம்!

போர் வெறியில் நியூட்ரான் குண்டு வீசப்பட்டால் கதிரியக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெற 'டிராபூட்' என்ற ஜெர்மானியர் பெரிய கோளம் ஒன்றை உருவாக்கியுள்ளார். இந்தக் கோளத்தைத் தோட்டத்திற்குள் புதைத்து விட வேண்டும். நியூட்ரான் வெடித்ததும் இதற்குள் புகுந்து கொள்ளலாம். இதற்குள் 9 பேர் 14 நாட்கள் வரை வாழலாம். மின்சார உற்பத்திக்கான உபகரணங்களை இயக்குதல், கோளத்தினுள் வரும் காற்றைக் கட்டுப்படுத்துதல், கதிரியக்க அளவை அளந்து கொள்ளுதல் போன்றவற்றை உள்ளிருந்தே செய்யலாம். தற்போது ஜெர்மனியில் இந்தப் பாதுகாப்புக் கோளங்களின் விற்பனை விறுவிறுப்பாக இருக்கிறதாம்!

- ஏ. வி. தேவன்



கால்ஷியம் சத்துக் குறைவான எலும்புகள் பலவீனமானவை எளிதில் வலுவிழந்துவிடும்

கால்ஷியம்-ஸாண்டோஸ் எலும்புகளுக்கு வலுவூட்டுகின்றது.

எலும்புகள் கண்களுக்குத் தெரிவதில்லை. இருப்பினும் அவை உங்கள் குழந்தைகளின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் மிகவும் ஆதாரமானவை. கால்ஷியம் எலும்புகளுக்கும் பற்களுக்கும் இன்றியமையாத பகுதியாகும். கால்ஷியம் சத்துக் குறைவாக இருந்தால் அது பலவீனமான, எளிதில் நொறுங்கக் கூடிய எலும்புகளுக்குக் காரணமாகிறது அதனால் பற்கள் தளர்ச்சி அடைகின்றன. பற்களில் குழி விழுகிறது.

உறுதியான பற்களுக்கும் ஆரோக்கியமான எலும்புகளுக்கும் உங்கள் குழந்தைகளுக்கு 3 லிருந்து 4 வெனிலா சுவையூட்டப் பெற்ற கால்ஷியம் ஸாண்டோஸ் வில்லைகளைக் கொடுங்கள். ஒவ்வொரு வில்லையிலும், கால்ஷியம், வைட்டமின்கள் வி.டி. மற்றும் பி 12ம் அடங்கியுள்ளன.

உங்கள் குழந்தை ஒவ்வொரு நாளும் கால்ஷியத்தை இழக்கிறது. இந்த நஷ்டத்தை ஈடு செய்ய வேண்டும். இல்லையேல் குழந்தையுடைய வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. சாதாரண உணவினால் குழந்தைகளுக்குப் போதுமான கால்ஷியம் கிடைப்பதில்லை.

இன்றே உங்கள் குழந்தைக்கு கால்ஷியம் ஸாண்டோஸ் கொடுக்கத் தொடங்குங்கள். காலதாமதம் செய்யாதீர்கள். பின்னால் எவ்வளவு கால்ஷியம் கொடுத்தாலும் அந்த நஷ்டத்தை ஈடு செய்ய முடியாது.

நினைவிருக்கட்டும், கால்ஷியம் வில்லைகள் எல்லாம் ஒரே மாதிரியானவை அல்ல.

கால்ஷியம் ஸாண்டோஸ்—என்று வற்புறுத்தி வாங்குங்கள். வேறு எதையும் வாங்காதீர்கள்.

கால்ஷியம் ஸாண்டோஸ்—
உலகிலேயே மிகச் சிறந்த
கால்ஷியம்
ஸ்விட்ஸர்லாந்து
நாட்டில்
ஸாண்டோஸால்
உருவாக்கப்பட்டது



கால்ஷியம்-ஸாண்டோஸ்®
வலுவுள்ள பற்களுக்கும்
உறுதியான எலும்புகளுக்கும்

SANDOZ

daCunha/S-25/TMR

னிப்புக் கேட்டாக வேண்டும். அதன் பிறகு தான் நான் இங்கிருந்து நகர்வேன்!'' என்று மண்டையில் அடித்தாற் போல் பேசியிருக்க வேண்டாமா? என்னமோ, தானே தவறு செய்துவிட்டவன் போல், அந்த ஆளிடம் குழைந்து பேசியது எவ்வளவு கேவலம்!

இப்போதுகூட என்ன முழுகிப் போயிற்று? நேரே அதே மானேஜரிடம் போய் ''மன்னிப்புக் கேட்கப் போகிறீங்களா இல்லையா?'' என்று விரைப்பாகக் கேட்டாலென்ன?

அவனுடைய மனத்தில் ஓடிய எண்ணங்களை அவனுடைய உடல் மதித்தால்தானே? அவனது விருப்பங்களை லட்சியம் செய்தால் தானே! இடித்த புளி மாதிரி அசையாமல் உட்கார்ந்திருந்தது. ''விருப்பங்கள் புரவிகளானால் ஆண்டிகளும் உலகை ஆளலாம்'' என்று எப்போதோ படித்த ஆங்கில வாக்கியம்தான் ரமணிக்கு ஞாபகம் வந்தது.

தண்டபாணியின் மேஜைக்கு எதிரே எல்லோருக்கும் பொதுவாக வைக்கப்பட்டிருந்த டெலிபோன் ஒலித்தது. நாலைந்து தரம் மணி அடிக்கும்வரை அதன் பக்கமே திரும்பாமலிருந்த தண்டபாணி, வேண்டா வெறுப்பாக ரிசிவரைக் கையில் எடுத்து, ''ஹலோ'' என்றான். வேண்டுமென்றே குரலைக் கட்டையாக்கிக் கொண்டு. மறுகணம் அவன், ரமணி இருந்த திசையில் திரும்பி, ''ரமணி! போன் உனக்குத்தான்!'' என்றான். ''லேடீஸ் வாய்ஸ்!'' என்று கூறினான் குறும்பாகச் சிரித்துக்கொண்டே.

''ஹலோ, ரமணிதான் பேசறேன். — ஓ. நீயா? என்ன ராஜி?''

ராஜி பேசப் பேச ரமணியின் முகம் தொங்கிக் கொண்டே போயிற்று. 'உம்', 'சரி என்ற வார்த்தைகளைத் தவிர வேறெந்த வார்த்தையும் கிளம்பவில்லை, அவன்வாயிலிருந்து. பேசி முடித்து விட்டுத் தோய்ந்த நடையுடன் அவன் தனது இருக்கையில் சென்று அமர்ந்தான்.

மனத்தில் ஆத்திரம் மூண்டு என்ன பிரயோசனம்? டெலிஃபோனிலேயே அதைக் கொட்டித் தீர்க்க அவனால் முடிந்ததா?

ராஜியின் அண்ணாவும் மன்னியும் கல்பாக்கத்திலிருந்து காரில் வந்து விட்டார்களாம். ராஜி அவர்களோடு ஊர் சுற்றக் கிளம்பி விட்டாள். அவர்களுக்கு ஏதேதோ ஷாப்பிங் செய்ய வேண்டுமென்று இருந்தால் இவளும் அவர்களுடன் ஒட்டிக் கொள்ளத்தான் வேண்டுமா? அண்ணா கல்பாக்கத்தில் சீனியர் என்ஜினியராக ஆயிரக் கணக்கில் சம்பாதித்துக் கொண்டிருக்கிறான் என்ற பெருமை அவளுக்கு.

ஷாப்பிங் முடித்துக் கொண்டு தேவி தியேட்டரில் சினிமாவும் பார்த்துவிட்டுஇரவு பத்து மணி சுமாருக்குத்தான் வீட்டுக்குத் திரும்பி வருவார்கள். அநேகமாக இரவுச் சாப்பாட்டையும் வெளியிலேயே முடித்துக் கொண்டுதான் திரும்புவார்கள். இதையெல்லாம் கூறும்போது ராஜியின் குரலில் தான் எவ்வளவு குதூகலம்! வீட்டுச் சாவியைப் பக்கத்து வீட்டில் கொடுத்துவிட்டுப் போகிறாளாம்! இந்தக் கரிசனமாவது தோன்றியதே!



''இந்தப் புது 'டேப்' போட்டப்புறம்தான் எனக்கு விடுமுறை நாட்களில் தூக்கம் வருகிறது.''

''என்ன இருக்கு அந்த 'டேப்'பிலே?''

''டைப்ரைட்டர், தொலைபேசி சத்தங்கள் சேர்ந்த ஆபீஸ் சூழ்நிலையை 'ரெக்கார்ட்'பண்ணியிருக்கேன்!''

—பி. ஆர். கண்ணன்

அவனுடைய பசிக்குப் பரிகாரமாக வீட்டில் ஏதாவது இருக்குமா? புதிதாகச் சமையல் செய்து வைக்க எங்கே ராஜிக்கு நேரம் இருந்திருக்கப் போகிறது! அதைப் பற்றி நினைத்திருப்பாளா என்பதே சந்தேகம்தான். அநேகமாக மத்தியானத்து மிச்சங்கள்தான் மேடையில் கொலு இருக்கும். கிடைத்ததை விரவி வாயில் போட்டுக் கொண்டு மிச்சமிருந்தால் மோரோ, இல்லாவிட்டால் தண்ணீரோ குடிக்க வேண்டியதுதான். தூங்கிவிட முடியாது. பத்து மணிக்கு மேல் அவர்கள் வந்து கதவை இடிப்பார்களே!

அண்ணன்காரன் ராஜியை வீட்டு வாசலிலேயே இறக்கி விட்டு அப்படியே கல்பாக்கத்துக்குத் திரும்பிப் போனால் எவ்வளவு நன்றாயிருக்கும்! ஆனால் அப்படிப் போய்விடமாட்டானே! உள்ளே வரத்தான் வருவான். தான் ஏதோ உச்சாணிக் கொம்பில் உட்கார்ந்திருப்பதாக நினைத்துக் கொண்டுஅவனை நோக்கி ஓர்அலட்சியப் பார்வையை வீசத்தான் வீசுவான். அவன் கையாலாகாதவன் அப்பாவி என்று ஜாடை மாடையாகச்சொல்லிக் காட்டுவான். அப்பா அவசரப்படாமலிருந்திருந்தால் ராஜியின் அழகுக்கும் படிப்புக்கும் அவளுக்கு ஐ.ஏ.எஸ். மாப்பிள்ளையே கிடைத்திருப்பான் என்று அங்கலாய்ப்பான்.


அவன் அங்கலாய்ப்பது இருக்கட்டும். இந்த ராஜி வேறு 'ஈ' என்று இளித்துக் கொண்டு அண்ணனுடைய அதி சாமர்த்தியப் பேச்சை ரசித்தபடி நிற்பாளே?

எரிமலையாகக் குமுறி வெடிக்கத் தோன்றும் அவனுக்கு. ஆனால் வெடித்த நாள் ஏது?

தாமாகவே ரமணியின் கைகள் முதுகைத் தொட்டுப் பார்த்துக் கொண்டன. முதுகெலும்பு ஒரு முண்டு முடிச்சு குறைவில்லாமல் அப்படியேதான் இருந்தது!

ரயிலில் ஒரு காதலன்

சுந்தரராஜன்



மீண்டும் அந்தப் படத்தை எடுத்துப் பார்த்தேன்.

பெண்ணே, வருந்தேல்!

அவள் அழகாக இருந்தாள். நீண்ட புருவங்கள் கண்களில் நிறைந்திருந்த மயக்கத்தைத் தரும் ஏதோ வஸ்து ஒன்று. அழகான புன்னகை மூன்றில் அளவாக விரிந்திருந்த இதழ்கள். அவைகளின் வழியாக வெளிப்பட்ட முத்துப் பற்களின் பளபளப்பு. வடிவெடுத்து அமைந்திருந்த முகம். அதன் கீழ் அழகுடன் இறங்கிக் கொண்டிருந்த கழுத்து.....

பெண்ணே, உன் அழகுக்கு என் வணக்கங்கள்.

அவள் என்னுடன், என் வாழ்வில் இணைந்தால், எத்தனை இனிமையானதாக இருக்கும்!

பெண்ணே... காத்திரு எனக்காக!

"என்ன இன்னிக்குக்கூட்டமே இல்லே?" நிமிர்ந்து பார்த்தேன்.

ஓர் இளைஞன்... அறிமுகப் புன்னகையுடன் கூட முகத்தில் ஒரு படபடப்பும் இருந்தது.

சித்திரை வெய்யிலின் புழுக்கம் இருவரையும் தாக்கிக் கொண்டிருந்தது.

"ஆச்சரியம்தான்!" என்றேன்.

அன்பு பாவம் (உவகை)
கண்கள் மலரும், இனிய உணர்ச்சி மனத்தில் நிரம்பும், சிறிதும் கோபமற்ற முறுவல் நகை மலரும். - சிலப்பதிகாரம்: அடியார்க்கு நல்லார் உரை



"இந்த வைகை எக்ஸ்பிரஸைக் கோடையில் மட்டும் ராத்திரி விடலாம், இல்லையா?" என்றான் அவன் தொடர்ந்து.

யார் இவன்... அவளுடன் என் கனவுப் பயணத்தைத் தொடங்க நினைக்கையில் என் எதிரில் அமர்ந்து, சிவ பூசையில் கரடியாய்...

எங்கள் இருவர் வரிசைகளிலும் வேறு யாரையும் காணோம். சரி, இவனுடன் பேசித்தானாக வேண்டும். விடமாட்டான்!

அந்த இளைஞனை மீண்டும் கவனித்தேன். அதே சங்கடமான புன்னகையுடன் நெளிந்தான்.

"சார், எங்கே மதுரையா?"

"ஆமாம்!" — எரிச்சலில் வேண்டும் என்றே பொய் சொன்னேன்.

"நானும் மதுரை தான் போறேன். ஆமாம் சார், இது எப்ப திருச்சி போகும்?"

"ஏழேகால்மணியாகும்னு நினைக்கிறேன்."

"சாரிசார்... ரொம்பத் தொணதொணக்கிறேனா?"

"சார், என் பெயர் மோகன். டில்லியில் ஒரு கம்பெனியில் ஸ்டெனோவாக இருக்கேன்."

"ஐ சீ... ஐ ஆம் குமார். மெட்ராஸ்லே பேங்க் ஆபீசரா இருக்கேன்."

"ரொம்ப சந்தோஷம் சார்."

வைகை எக்ஸ்பிரஸ் ஏராளமான புழுதியையும், சூரியன் ஏராளமான உஷ்ணத்தையும் வண்டிக்குள் வாரி இறைத்துக்கொண்டிருந்தன.

விழுப்புரம் ஜங்ஷனில் அவன் என்னிடம் திடீரென்று கேட்டான்:

"சார் தப்பா நினைக்கக் கூடாது! நீங்க யாரையாவது காதலிக்க இருக்கீங்களா?"

அவன் கேள்வி என்னை அசர வைத்தது. அந்த போட்டோவில் இருந்த பெண்ணின் ஞாபகம் வந்துவிட்டுப் போனது.

"இல்லே!" என்றேன்.

அவன் சிறிது நேரம் யோசித்தான்.

"சார் தப்பா நினைக்கலியே?" என்றான் மீண்டும்.

விருத்தாசலம் ஸ்டேஷன் வந்தது. அவன் இறங்கிப் போய் ஒரு சிகரெட் பாக்கெட் வாங்கி வந்தான்.

"சார்... சிகரெட்..."

"நோ தேங்க்ஸ்!"

"சார்...நீங்க பெரிய ஆபீசர். உங்க முன்னால் நான் சிகரெட் குடிக்கிறது தப்பு. ஆனா, எனக்கு இப்ப இது ரொம்பத் தேவை"


"ப்ளீஸ்... கோ அஹெட்!"

"இளைஞனே, உனக்கு என்ன கஷ்டம்? எதையோ மனத்தில் வைத்துக் கொண்டு ஏன் தவிக்கிறாய்?"

"சார், உங்களை என் அண்ணன் மாதிரி நினைச்சுப் பேசறேன். சில விஷயங்கள் சொல்லலாமா?"

நான் தலையை அசைத்தேன்.

"உங்களை ஏன் தெரியுமா காதலிச்சது உண்டான்னு கேட்டேன்? நான் காதலிக்கிறேன் சார்... முதல்ல திருச்சியில் இருந்தோம் சார்



நாங்க... பக்கத்துத் தெருவில் தான் சார் அவ இருந்தா....''

அவன் கொஞ்ச நேரம் மௌனமானான். சின்ன வயசுக் காலங்களை எண்ணுகிறானோ?

''ஏன்தான் சார், வயசாறதோன்னு தோணுது? சின்ன வயசுல குழந்தைகள் விளையாட்டுல என்ன சார் அந்தஸ்தா குறுக்கே நின்னது? ஆனா, பெரியவங்க ஆனப் புறம்... ஆமா சார், குழந்தைகளா இருக்கறச்சே, அவளோட நான் விளையாடின விளையாட்டுக்கள் கொஞ்சம் கொஞ்சமா, நாங்க வளர்றச்சே எங்க காதலா மாறிச்சு...''

நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

''எனக்கும் இங்க ஒண்ணும் சரியா வேலை கிடைக்காம டில்லிக்குப் போற மாதிரி தலையெழுத்து. ஆனா, அவ அப்பப்ப கடிதம் போடுவாள். நானும் அவ ஃப்ரெண்டு ஒருத்தியோட ஆபீஸ் விலாசத்துக்கு அவளுக்கு எழுதுவேன்....''

வெயிலின் புழுக்கம் கொஞ்சம் குறைந்த மாதிரி தோன்றியது.

''என்ன சார், என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''

''நீங்கதான் அண்ணன்னு சொன்னீங்களே! ஆல் த பெஸ்ட்!'' நான் வாஸ்தவமாகவே உணர்ச்சி வசப்பட்டேன்.

திருச்சி வந்து கொண்டிருந்தது. அவன் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். ''அதோ சார்... நான் எழுதின மாதிரியே வந்திருக்கா!''

வண்டி நின்றதும் அவன் வேகமாக இறங்கி நடக்க ஆரம்பித்தான். நானும் என் கைப் பையை எடுத்துக் கொண்டு தொடர்ந்தேன்.

''ஒண்ணும் டிரபிள் இல்லையே, இந்திரா?''

அவள் தலையை அசைத்தாள்.

''வா போகலாம்! இனிமே நம்மை யாராலும் பிரிக்க முடியாது.''

அவன் என்னைப் பற்றி முற்றிலுமே மறந்து போய்விட்டான் எனத் தோன்றியது.



ஸ்கூட்டர்காரன்: (குறுக்கே வந்து விழுந்தவரிடம்) இப்படித் திடீர்னு என் ஸ்கூட்டரில் வந்து விழுந்து அடிபட்டுக்கிறீங்களே! ஞாயமா இருக்கா!

அடிபட்டவர்: என்னைப் பொருத்தவரைக்கும் ஞாயம்தான்! குறுக்கே வராம அங்கேயே நின்று இருந்தா "பல்லவன்"லே இல்லே அடிபட்டிருப்பேன்.

-வெ. சீதாராமன்

''சுருக்கமாச் சொல்றேனே... என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதுல அவங்க வீட்டுல ஆர்வம் கிடையாதாம். தன் பெண்ணை உசத்தியா ஏதாவது டாக்டருக்கோ, என்ஜினியருக்கோ கொடுக்கணு மாம்...''

அவன் குரல் கொஞ்சம் உடைவதுபோல் தோன்றியது.

''நான்கூட எழுதினேன் சார்... 'பேசாம நீ அப்பா அம்மா சொல்றவனையே கல்யாணம் பண்ணிக்கோ'ன்னு ம்ஹூ¨ம்... கேக்க மாட்டாளாம்.''

அவன் குரலில் இப்போது பெருமை குடிகொண்டிருந்தது.

அவன் பின்னர் தன் திட்டத்தை விவரித்தான். கேரளாவில் அவனுக்கு ஒரு வேலை கிடைத்து இருக்கிறதாம். டில்லி வேலையை ராஜிநாமாச்செய்துவிட்டு வருகிறானாம். திருச்சியில் இவன் காதலி காத்திருக்கிறாளாம். இருவருமாக மதுரை போய், அங்கிருந்து கேரளா போவார்களாம்.''

''மிஸ்டர் மோகன்... என் விலாசம் பத்திரம். ஏதாவது என்னால் உதவ முடியும்னு கண்டிப்பா எழுதுங்க....''

அவன் திரும்பினான். என் கையில் பையைப் பார்த்துக் குழம்பினான்.

''சார்... மதுரை போறதாச் சொன்னீங்களே....''

அவள் அன்னியக் குரல் கேட்ட திகைப்பில் தன் முகத் திரையை விலக்கி என்னை ஒரு விநாடி பார்த்தாள்.

''சார் யார்ன்னு சொல்லலியே, இந்திரா?'' — அவன் தொடங்கினான். நான் குறுக்கிட்டேன்.

''நானே சொல்றேன்...'' — நான் அவள் பக்கம் திரும்பி மெதுவாகத் தொடர்ந்தேன். ''நான்தான் நாளைக்கு உங்களைப் பெண் பார்க்க வரதா இருந்தவன்...''

அவர்கள் இருவரும் அப்படியே நிற்க, நான் மெல்ல ஜனக் கூட்டத்தில் கரைந்தேன்!

● இப்போதெல்லாம் ஒரு படம் இரண்டு வாரம் ஓடுவது அபூர்வமாக இருக்கிறது. லண்டனில் ''நோ செக்ஸ் ப்ளீஸ், வி ஆர் பிரிட்டிஷ்'' என்ற நகைச்சுவைப் படம் பத்து வருஷமாக ஓடிக் கொண்டிருக்கிறது!

● இங்கிலாந்தில் உள்ள பீட்டர்பரோ என்ற நகரத்தில் ஒரு 55 வயதுக்காரர் வேலையில்லாமல் ரொம்பக் கஷ்டப்பட்டார். எட்டு மாதம் அவர் அரசாங்க உதவிப் பணத்தில் காலம் தள்ளினார். இப்போது? அந்த நகர மேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார் அவர்! மாதச் சம்பளம்: 3000 பவுன்.

—சண்டே

● பிரபல ஆங்கில நடிகை சோபியா லாரனின் வீட்டில் ஒரு நாள் திடீரென்று சில அரசு அதிகாரிகள் புகுந்து சோதனை போட்டார்கள். அங்கிருந்த சிறந்த ஓவியங்கள், மற்ற அரும் கலைப் பொருட்கள் ஆகியவை களை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள் அவர்கள்! நடிகையும் அவரது கணவரும் கொடுக்க வேண்டிய வருமானவரி பாக்கிக்காகத்தான் அப்படிச் செய்தார்களாம்!

● காரை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கியதும் டிரைவர் சீட்டிலிருந்து ''காரைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டீர்களா?'' என்ற பெண் குரல் இனிமையாக ஒலிக்கிறது! டிரைவர் ஸீட்டின் பின்புறம் உள்ள ஒரு கம்ப்யூட்டரால் இயங்கும் ஒருவிதக் கருவிதான் இப்படிக் கேட்கிறது! அதுமட்டுமல்ல, யாராவது சாலை விதிகளைப் புறக்கணித்துவிட்டுக் கார் ஓட்டினால் அவர்களைத் திட்டுகிறது! இதெல்லாம் எங்கே? ஜப்பானில்!

● டில்லியில் ஒரு அதிகாரியாக இருக்கும் ரிஷி என்பவர் (40 வயது) அண்மையில் தன் 'லூனா'விலேயே டில்லியிலிருந்து பெங்களூருக்கு வந்து சேர்ந்தார். 6800 கிலோ மீட்டரை 26 நாட்களில் கடந்தாராம். டில்லிக்குத் திரும்புவதற்கு முன்பு மொத்தம் 15000 கிலோ மீட்டர் அவர் அந்த லூனாவில் பயணம் செய்வார். 'ஒரு பைத்தியக்காரனின் சுய சரிதை' என்ற புத்தகத்தை எழுதத்தான் அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டாராம்!

-'டெக்கான் ஹெரால்ட்'

-அனிதா ராமச்சந்திரன்

ம்..மாடியோவ்!



லக்ஷ்மிகரமாய்த் திகழ...




லக்ஷ்மி
100% பாலியெஸ்டர்
புடவைகள்
லக்ஷ்மி மில்ஸ்,
கோயம்புத்தூர்
HTM-LMC-2384

சந்திரநாத்



3

''நீலா நானும், கொஞ்சம் ரமணா நர்ஸிங் ஹோம் வரை போயிட்டுவந்துடறேன், மங்களைப் பார்த்துட்டு — அப்புறம் டைம் கிடைக்காது.''

மகேஷ் கிளம்பினான். நீலா சினிமாவில் காதலனை யுத்த களத்துக்கு அனுப்புகிற கதாநாயகி மாதிரி தலையை அசைத்தாள்.

''நடேஷ் என்னிக்கு வரதா தந்தி குடுத்திருக்கான்?''

''இன்னிக்குத்தான்.''

''சரி, கோட்டை எடு.''

எடுத்துப் பின்புறம் நின்று மாட்டிவிட்டாள். முன்புறம் இழுத்துச் சரி செய்து கொண்டு கதவை நோக்கி நடந்தபோது—

கீழே கமலநாத்தின் கார் கிளம்பிச் சென்ற ஓசை கேட்டது. நீலா ஏதோ நினைவு வந்தவள் போல், 'ஒரு நிமிஷம் இருங்க, பாஸ்'' என்று அவசரமாக ஜன்னலடிக்கு ஓடி வெளியே பார்த்தாள்.

அடுத்த நிமிஷம், ''பாஸ்... பாஸ், இங்கே சட்னு வாங்க.'' கூப்பிட்டாள். மகேஷ் விரைந்து சென்று அவளருகில் நின்று தெருவை எட்டிப் பார்த்தான்.

''அதோ அங்கே பாருங்க பாஸ்'' — நீலா சுட்டிக் காட்டிய திசையில் எதிர் பிளாட்பாரத்தில் ஒரு 'பொது' டெலிபோன் பூத் இருந்தது. அதிலிருந்து தலையில் பெரிய முட்டாக்குப் போட்டுக் கொண்டிருந்த ஒரு பெண் வெளியே வந்து, கிழக்கு நோக்கி நடந்து, ஒரு டாக்ஸியின் கதவைத் திறந்து ஏறிக்கொண்டாள். முதுகு ஸ்பஷ்டமாகத் தெரிந்தது.

''யார் அது?''

''ரொம்ப நேரமா டெலிபூத் கிட்டயே நின்னுகிட்டு இங்கேயே பார்த்துக்கிட்டிருந்தா. 'என்ன இங்கே பார்க்கறாளே'ன்னு தோணிச்சு.''

''கமல்நாத்தோட நான் பேச ஆரம்பிச்ச போதும் இவ இங்கே இருந்தாளா?''

''அப்பப் பார்க்கலே. ஆனால் பேசிக்கிட்டிருந்தபோது ஒருவாட்டி டெலிபோன் அடிச்சதே, அப்பப் பார்த்தேன். 'பூத்'லே நின்னு யார்கிட்டயோ போன்லே பேசிக்கிட்டிருந்தா.''

மகேஷுக்குப் புரிந்து விட்டது. இவள் தான் அப்போது தன்னிடம் பேசியவள் இவள்தான் திருமதி உண்மை விளம்பி.

''இதோ வந்துட்டேன், நீலா'' — அவள் முகத்தைப் பார்க்க நினைத்து, கீழே போக இரண்டடி அவசரமாக எடுத்து வைத்தான்.

''பிரயோசனமில்லே பாஸ். அதோ அவ டாக்ஸி கிளம்பிடுச்சி'' என்ற நீலாவின் குரல் பின்னுக்கு இழுத்தது. திரும்பி வந்தான்.

''நீ இவள் முகத்தைப் பார்த்தாயா நீலா, எப்படி இருந்தாள்?''

''முகத்தைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. பெரிய முக்காட்டுடன் கறுப்புக் கண்ணாடியும் போட்டிருந்தாள். பெரும்பாலும் சுவர் பக்கமாகவே பார்த்துக்கிட்டிருந்தா.''

''சரி, ஜாக்கிரதையாக இருந்துகொள். ஏதோ ஒன்று நடக்கப் போகிறது. இந்தக் கமலும் ஏதோ திட்டம் போடுகிறான். இந்தப் பெண்ணும் ஏதோ திட்டம் போடுகிறாள். கமல் மதுரைக்கு வரும்போது அங்கே அவர் கூட யாரும் இருக்கக் கூடாது என்று யாரோ விரும்புகிறார்கள். அப்படி விரும்புகிறவர்களின் கையாளாக இந்தப் பெண் இருக்கலாம். அவர் யார், எதற்காக மதுரைக்குக் கமல் தனியாக வரவேண்டும் என்று நினைக்கிறார், அங்கே அவரை என்னசெய்யப் போகிறார்கள்—என்பதெல்லாம் தெரிய வேண்டும்''

நீலா சிலை மாதிரி கேட்டுக் கொண்டு நின்றாள். அதுதான் அவள் சுபாவம். துப்பறியும் ஆர்வம் அவளுக்குத் துளியும் கிடையாது. மகேஷ் எப்பொழுதாவது விஷயங்களை அவளை வைத்துக் கொண்டு அலசும்போது பேசாமல் கேட்டுக் கொண்டிருப்பது தான் அவள் வழக்கம்.

''இதில் இன்னொரு விஷயமும் இருக்கிறது. இன்று இரவு கமல்நாத் வீட்டில நான் தங்கப் போகிறேன். அப்போது அங்கும் ஏதேனும் நடக்கக் கூடும். அது என்ன — இந்தக் கேள்விக்கும் விடை தெரிய வேண்டும்.''

மகேஷ் ஒரு சிகரெட்டை எடுத்துத் தட்டி உதட்டில் வைத்துக் கொண்டான். நீலா 'லைட்'டரைக் 'கிளிக்' செய்து பற்ற வைத்தாள்.

ஒரு உறி உறிஞ்சிவிட்டு ''தாங்க்ஸ் நீலா. யூ ஆர் ஸோ ஹெல்ப்ஃபுல்'' என்றான். அவள் தோளில் தட்டிக் கொடுத்தான். ''இந்த ஆள் கமல்நாத் பற்றி என்ன நினைக்கிறே?'' என்றான்.

''ஒண்ணும் நினைக்கலே.''

''தப்புத் தண்டா பண்ற ஆள் மாதிரியா தோணுது?''

''தோணலே.''

''இவன் கூட நான் போவதைப் பற்றி என்ன நினைக்கிறாய்?''

''ஒண்ணும் நினைக்கலே.''

மகேஷ் அவளை இரக்கமாகப் பார்த்தான். ''நீ நினைக்கிறதையே விட்டு ரொம்ப நாளா யிடுச்சு போலிருக்கு நீலா. இட் இஸ் டூ பாட். நீ கலகலப்பாகவே இப்போதெல்லாம் இல்லே''.

''நீங்க ஜாக்கிரதையா இருக்கணும், பாஸ்.''

''என்னைப் பற்றிக் கவலைப் படாதே. நான் எத்தனையோ கொம்பேறி மூக்கன்களை எல்லாம் பார்த்தாகி விட்டது. சிங்கப்பூர் கண்ணனைவிட ஒரு மோசமான 'ரோக்' உண்டா?... எத்தனை கொலை செய்த ஆசாமி? அவனையே வளைக்கப் பிடிச்சு உள்ளே தள்ளிடலே... ஸ்காட்லாந்து யார்ட்லே டிரைன் ஆன ஆளம்மா நான்.''

நீலாவுக்குப் பெருமையாக இருந்தது. புன்னகை செய்தாள்.

மகேஷ் உறுதியான குரலில் சொல்லிக் கொண்டான். ''இந்தக் 'கேஸை' எடுத்துக் கொள்வதாக முடிவு செய்து விட்டேன். இந்தக் 'கமல்நாத் கூடப் போகப் போகிறேன். என்ன நடக்கிறது என்றுதான் பார்ப்போமே—''

மகேஷ் கதவைத் திறந்தான். வெளியேறி நின்று திரும்பி, ''நான் மங்களைப் பார்த்துட்டு, அப்படியே ஸ்டேஷனுக்குப் போயிட்டு நாலு நாலரைக்கெல்லாம் வந்துடுவேன்... அதற்குள் அந்த உண்மை விளம்பி போன் செய்தால்...'' என்று இழுத்தான்.

''என்ன சொல்ல வேண்டும்?''



நீயா?

முன்கதைச் சுருக்கம்

நகரின் உயரமான கட்டிடத்தின் மூன்றாவது மாடி! மகேஷ் அண்ட் நடேஷ் பிரைவேட் டிடெக்டிவ்ஸ் கம்பெனியின் ஹால். சோபா கம்பெட்டில், டிப்டாபாகப் படுத்து ஏதோ நாவலைப் புரட்டிக் கொண்டிருக்கிறான் டிடெக்டிவ் மகேஷ்.

அவனைக் காதலித்து அவள் தன்னுடன் படித்த மஞ்சுளாவை மணந்து கொண்டதால் ஏமாற்றமடைந்த டைப்பிஸ்ட் நீலா அவனைப் பார்த்துப் பெருமூச்செறிந்து கொண்டிருக்கிறாள்.

டெலிபோன் ஒலிக்கிறது. ஆஸ்பத்திரியில் அழகான பிள்ளையைப் பக்கத்தில் படுக்க வைத்துக் கொண்டு, மஞ்சு டெலிபோனில் மகேஷைக் கூப்பிட்டுத் தனக்கு வந்த ஒரு விபரீத சொப்பனத்தைக் கூறுகிறாள். கருப்பாக குள்ளமாக, பெரிய மீசையுடன் ஒரு ஆள் வந்து மகேஷை அழைத்துப் போவதாகவும், அவனைக் கட்டி வைத்து எரிப்பதாகவும் கூறுகிறாள். அதே சமயம், கதவைத் திறந்து கொண்டு அதே மாதிரி ஆள் ஒருவர் வந்து தன் பெயர் கமல்நாத் என்றும், தன்னுடன் பாதுகாப்பாக மதுரைக்கு வர வேண்டும் என்றும் கோருகிறார்.

அப்போது இன்னொரு பெண் குரல், டெலிபோனில் வந்திருப்பவன் அன்றிரவு தன் மனைவியைக் கொலை செய்யப் போகிறவன் என்றும், அவனுடன் போக வேண்டாம் என்றும் எச்சரிக்கிறது. அதையும் மீறி மகேஷ் போவதற்கு முடிவு செய்கிறான்.

போகும்போது கமல்நாத் நீலாவின் அழகுக்கு ஆபத்து நேரிடலாம் என்றதும் மகேஷ் அவள் ஒரு தைரியசாலி என்று எடுத்துரைக்கிறான். மேலே கதையைத் தொடருங்கள்.

''நான் கமலுடன் மதுரைக்குப் போகலை என்று சொல்லிவிடு.''

''எஸ் பாஸ்'' என்றாள் நீலா.

மகேஷ் போனதும் உள்ளே வந்தாள். ஹால் வெறுமையாக, பயப்படும்படியாகச் சிரித்தது. சோபாவில் மகேஷ் படுத்திருந்த இடத்தில் போய்க் கவிழ்ந்து படுத்தாள். 'பாஸ்-' என்று உதடு துடிக்க முத்தினாள். அழுதாள்.

சரியாக இருபது நிமிடம் கழித்து ஒரு டெலிபோன் 'கால்' அவளை இந்த உலகத்துக்கு இழுத்து வந்தது. நடேஷ் டேபிள் போனில் யாரோ அழைத்தார்கள்.

''ஹலோ — மகேஷ் அண்ட் நடேஷ் கம்பெனி?''

கரகரத்த ஒரு குரல் பேசியது. ஆண் குரல். புதுக் குரல். ''மகேஷ் சார் இருக்கிறாரா... ரொம்ப அவசரம்.''

''அஸ்பிடலுக்குப் போயிருக்கார். நீங்கள் யார்?''

''நானு?'' குரல் ஒரு கணம் தயங்கியது. ''நான் அவன் ஓல்ட் கிளிக் — கூடப் படிச்சவன். டெல்லியிலேருந்து வந்திருக்கிறேன். எப்ப வருவான்?''

''நாலு மணிக்கு... நீங்க ஸ்டே பண்ணியிருக்கிற அட்ரஸ் சொன்னால் வந்ததும்—''

''அவசியமில்லை. அந்த பிளடியை நானே வந்து நாலரைக்குப் பார்க்கிறேன்'' வைத்து விட்டான்.

நீலா—முகம் சிவந்தாள். உறுமினாள். 'ராஸ்கல்! பிளடியா பிளடி... நீ என்ன 'கிளிக்'காக இருந்தால் என்னடா.. என் டார்லிங்டா, அவர். அவரையா பிளடி என்னே—

மனசுக்குக் கஷ்டமாக இருந்தது. மேஜை டிராயரைக் கோபமாகத் திறந்தாள். சின்ன டிபன் பாக்ஸ் விழித்துப் பார்த்தது. எடுத்து மேஜை மேல் வைத்தாள். வாட்டர் பாட்டிலைக் கொண்டு வந்து சாவகாசமாகத் திறந்து கண்ணாடி டம்ளரில் ஊற்றினாள். ஒரு வாய் 'சிப்' பண்ணிவிட்டு டிபன் பாக்ஸைத் திறந்தாள்.

மேலாக இரண்டு போளிகளும் வடையும் இருந்தன. கீழே எலுமிச்சம் பழச் சாதம் மணத்தது — மஞ்சளாக.

'இன்னிக்கு உனக்கு பர்த்டேடீ' என்று காலையில் அம்மா—சொன்னது நினைவு வந்தது. 'இனிமே எனக்கு எத்தனை பர்த்டே வந்தா என்ன? என் மகேஷை முழுக்க வேறு ஒருத்திகிட்ட நான் இழந்துட்டேனே—' கண்ணீர் வழிந்தது.

சாப்பிடப் பிடிக்கவில்லை. டிபன் பாக்ஸைத் திரும்ப மூடினாள். ஒரு மெமோ ஷீட்டை எடுத்து அதில், ''என் அன்புக்குரியவருக்கு— என் பர்த்டே ஸ்வீட்'' என்று எழுதினாள்.

'கடைசி ஸ்வீட்ஸ்' என்று எழுதி வைத்து விட்டுத் தூக்க மாத்திரைகளைப் போட்டுக் கொண்டுவிடலாமா என்று நினைத்தாள். 'சீ! நான் பிராக்டிகல் கேர்ள் — என் மகேஷ் கூடவே 'டே-டைம்' முழுக்க இருக்கேனே அது போதும்' என்று தீர்மானித்தாள்.

டிபன் பாக்ஸையும் லெட்டரையும் எடுத்துக்கொண்டு போய் மகேஷின் டேபிள் மீது வைத்தாள். திரும்பி வந்ததும் பார்ப்பார்— சர்ப்ரைஸா இருக்கட்டும்' என்று நினைத்த படி வெளியே வந்து இன்னொரு வாய் தண்ணீர் குடித்தாள்.

வெளியே ஜன்னலுக்கு அப்பால் பம்பாய் போகிற விமானம் ஊர்ந்து கொண்டிருந்தது. மெதுவாகக் கோடு கிழிப்பதை முழுமையாகப் பார்த்துக் கொண்டு நின்றாள். விமானம் மறைந்தது. டெலிபோன் ஒலித்தது. இது மகேஷ் டெலிபோன். — ஓடிப்போய் எடுத்தாள்.

''நீலா வெரி அர்ஜன்ட்; மகேஷ் ஸ்பீக்கிங். கம் நியர் அட் ஒன்ஸ்'' என்றது குரல் தணிவாக. பரபரப்பாக. கரகரப்பாக. யாருக்கோ தெரியக் கூடாது என்று ரகசியமாகப் பேசுவது போலிருந்தது.

''பாஸ் — எங்கே இருந்து பேசறீங்க?''

''20, நாச்சிமுத்து தெரு, கே. கே. நகர். டோன்ட் ஆஸ்க் கொஸ்டின்ஸ். கம் இமீடியட்லி. ஆபீஸைப் பூட்டிவிட்டு, ஒரு ஆட்டோ பிடிச்சுக்கிட்டு உடனே வந்துடு—'' டக்கென்று போனை வைத்து விட்டான்.

நீலா பிரமித்தாள். உடம்பெல்லாம் பதறியது. நாச்சிமுத்து தெரு எங்கே இருக்கிறது? பாஸ் அங்கே ஏன் போனார்? ஏதாவது



ஸ்ரீ சீதளாயை நம :

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தாலூகா

மஹாராஜபுரம் ஸ்ரீ மாரியம்மன் கோவில்

மஹா கும்பாபிஷேகம்

ஸ்ரீ காமாக்ஷி சமேத ஸ்ரீ கைலாஸநாதர், ஸ்ரீ பூதேவி ஸமேத ஸ்ரீ வரதராஜர், ஸ்ரீ விஷ்ணு துர்கை எழுந்தருளியிருக்கும் **மஹாராஜபுரம்** கிராமத்தின் வெளி வீதியில் அமைந்துள்ளதும் பாபரோக ஔஷதமாயுலகிற்கு ஒரே தெய்வமாய் விளங்கும் ஸ்ரீ சீதளாதேவியாகிய ஸ்ரீ மாரியம்மனின் ஆலயத் திருப்பணி செய்யப்பட்டு நிகழும் ஸ்ரீ துன்மதி வருஷம் ஆனி மாதம் 29ந் தேதி (13-7-1981) திங்கள்கிழமை, காலை 10-10க்கு ஸிம்ஹ லக்னத்தில் **ஸ்ரீ மஹா கும்பாபிஷேகம்** நடைபெறுவதால் அன்பர்கள் யாவரும் வருகை தந்து மஹா கும்பாபிஷேகத்தை தரிசித்து ஸ்ரீ சீதளாதேவியின் அனுக்கிரஹத்தை பெறவும் பொருள் உதவி செய்யவும் வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

மஹாராஜபுரம் - பாஸ்கரராஜபுரம் கிராமவாசிகள்

நன்கொடை அனுப்பும் விலாசம் : **G. ராமச்சந்திரன், பாஸ்கரராஜபுரம்**
திருவாலங்காடு - 609 810 மாயூரம் R.M.S.

ஆபத்தில் மாட்டிக் கொண்டு விட்டிருக்கிறாரோ—?

இந்த இரண்டு வருஷ சர்வீஸில் மகேஷ் இந்த மாதிரி போன் செய்து அவளை வரவழைத்தது இல்லை. 'டிடக்டிவ் விஷயங்களுக்குள் அவளை இழுத்ததே கிடையாது. உதவிக்கு ஆள் தேவை என்றால் நடேசனைத் தான் கூப்பிட்டுக் கொள்வான்.

கே. கே. நகரா? — வியர்த்தாள். அதிக ஆள் நடமாட்டமில்லாத பகல் பொழுதில் எல்லோரும் ஆபீஸ் போய்விடுகிற காலனி அது. கொலை செய்தால் கூட ஏன் என்று கேட்க ஆள் இராது.

தனியாகப் போக அஞ்சினாள். கூட ஒரு போலீஸ்காரரை அழைத்துப் போகலாமா என்று ஒரு விநாடி யோசித்தாள். அடுத்த கணம் அதைக் கைவிட்டாள். மகேஷுக்குப் போலீஸைக் கண்டாலே பிடிக்காது. 'அப்படி என்ன பயம்? போய்த்தான் பார்ப்போமே' என்று முடிவு செய்தாள்.

ஆபீஸைப் பூட்டினாள். அந்த ஆபீசுக்கு மூன்று சாவிகள். ஒன்று மகேஷிடம்; ஒன்று நடேசனிடம்; ஒன்று நீலாவிடம். யார் வேண்டுமானாலும் பூட்டிக் கொண்டு போவார்கள்; திறந்து கொண்டு வருவார்கள்.

மெதுவாகக் கீழே இறங்கி வீதிக்கு வந்தாள். ஒரு ஆட்டோ காலியாக நின்று கொண்டிருந்தது. கூப்பிட்டு ஏறிக்கொண்டாள்.

கோடம்பாக்கம் பிரிட்ஜைத் தாண்டும் போது முப்பாத்தம்மனை நினைத்து 'அடுத்த ஜென்மத்திலாவது என்னை மகேஷுக்கு மனைவியாக்கு' என்றுவேண்டிக் கொண்டாள்.

சற்றுத் தூரம் போனதும், ஒரு பெட்டிக் கடையில், பெரிய போஸ்டரில், ''நகரில் கோரக் கொலை. கொலைகாரர்கள் தப்பினர்' என்ற தலைப்பு கண்ணில் பட்டது. நீலாவின் மெய் நடுங்கியது. 'என்னைக்கூட யாராவது கொலை செய்து விடுவார்களோ' என்று காரணமே இல்லாமல் நினைத்தாள்.

அல்வாக் கடைகளைத் தாண்டி, பவர் ஹவுஸ், ஜவாஹர் பள்ளிகளைத் தாண்டி கே. கே. நகரில் நுழைந்தது ஆட்டோ.

''நாச்சிமுத்து தெரு நம்பர் 20'' என்றாள். வழியில் நிறுத்தி எதிர்ப்பட்ட ஒரு பையனிடம் வழி கேட்டுத்தெரிந்துகொண்டு, இரண்டு சந்துகள், ஒரு குப்பம் ஆகியவைகளைக் கடந்து ஒரு 'புதர்' ஓரம் நின்றது ஆட்டோ.

பீடி குடித்துக்கொண்டு சோம்பேறியாக அங்கே நின்ற ஒரு ஆள் '''அ'தா — அந்த வாராவதியைத் தாண்டிக்கினு அப்பாலே போ'' என்றான்.

கூப்பிடு தூரம் கூட இல்லை. ரகசியமாக அவளை வரச்சொன்னதை நினைத்து ஆட்டோவை அங்கேயே 'கட்' செய்துவிட்டு, இறங்கி, சாக்கடை வாராவதியின் கல் பாலத்தில் நடந்து சென்றாள்.

நாச்சிமுத்து தெருவின் கோடியில் இருந்தது 20ம் நம்பர்.

நீலா முகத்தில் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு படியேறிக் கதவைத் தட்டினாள். காத்திருந்தது போல் கதவு திறந்தது.



நர்ஸ்: டாக்டர், ஆபரேஷன் ஆகி நேத்து டிஸ்சார்ஜ் ஆன அந்த பேஷன்டுக்கு எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததிலே வயத்துல ஒரு ''கத்திரிக்கோல்'' இருக்கு!

டாக்டர்: பெரிய தப்புப் பண்ணிட்டேனே சிஸ்டர்! பில்லிலே கத்திரிக்கோல் கிரயம் பதினஞ்சு ரூபா கூட்டிப் போட்டிருக்கணுமே அவருக்கு! -வெ. சீதாராமன்

சாது மாதிரியான ஒரு ஆள் நின்று ''எஸ்'' என்றான்.

''மிஸ்டர் மகேஷ்—''

''ஓ!'' அவன் புருவங்கள் வியப்பாக உயர்ந்தன. 'உஸ்' என்று வாயில் விரல் வைத்து எச்சரித்தான். ''இருக்கிறார் — என் பின்னால் வா'' என்று முன்னால் நடந்தான்.

நீலா படபடக்கும் நெஞ்சுடன் பின்னால் சென்றாள்.

இரண்டடி நடந்ததும், அந்த ஆள் 'சட்'டென்று திரும்பி அவள்மீது பாய்ந்து ஒரு கர்ச்சீப்பை அவள் முகத்தில் வைத்து அழுத்தினான்.

'மகேஷ்' என்று வீரிட்ட நீலாவின் குரல் பாதியிலேயே மறைந்தது. மயங்கித் தடால் என்று தரையில் சாய்ந்து விட்டாள்.

அடுத்த நிமிஷம் அந்த வீட்டின் உள் அறையிலிருந்து ஒரு பெண் வெளிப்பட்டு வந்தாள். 'காரியம் முடிந்தது' என்கிற மாதிரி அந்த ஆள் சைகை செய்தான்.

இருவருமாகச் சேர்ந்து நீலாவைத் தூக்கிச் சென்று கட்டிலில் போட்டார்கள். அந்த ஆள் நீலாவின் கைகளை நேராகச் சேர்த்து விட்டுப் பையிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்தான்.

''லேசாக மயக்கம் தெளிந்ததும் தண்ணி கேட்பா — அதிலே கலந்து குடுத்துடு'' என்றான்.

''சரி'' என்றாள் அவள்.

ஆள் வாசற் கதவைத் திறந்து கொண்டு போனான்.

(தொடரும்)

அம்போலோ 555...!


பு ரொபஸர் பொன்னுத்துரை ஜன்னல் வழியே வெளியே பார்த்தார். தூரத்தே விண்ணளாவிக் கம்பீரமாய் நின்று கொண்டிருந்தது அம்போலோ 555! இன்னும் இரண்டே மணி நேரத்தில் அவரும் அவரது சகாக்களான டீக்கடை முனுசாமி, லாண்டிரி தங்கவேலு, கல்லூரி மாணவன் காமேஷ் சகிதம் மணிக்கு 30,000 மைல் வேகத்தில் அம்புலியை நோக்கி ராக்கெட்டில் போய்க் கொண்டிருப்பார். என்ன இதெல்லாம், புரபஸராவது, டீக்கடை, லாண்டிரிக் காரரோடு சந்திரனுக்குப் போவதாவது என்று மண்டையை உடைத்துக் கொள்ளாதீர்கள்... வருகிறேன்.

அமெரிக்கர்கள் அப்போலோவில் சந்திரனுக்குப் போனார்கள் அல்லவா? அப்போது ஒரு தகராறு ஏற்பட்டது எல்லோருக்கும் மறந்திருக்காது என்று நினைக்கிறேன்.

சந்திரனில் தங்கள் ஆராய்ச்சியை முடித்துக்கொண்டு மேலே கிளம்பியபோது தாய்க் கலத்தோடு சரியாக இணைய முடியாமல், சேய்க் கலம் அதன் பின்னாலேயே லோ... லோ என்று அலைந்தது அல்லவா... எனவே நம்மவர்கள் பெயரும் புதிதாக இருக்கட்டுமே என்று அம்போலோ என்று பெயர் சூட்டினார்கள். அதோடு திருப்தி அடையக் கூடாதோ?

இந்த அமெரிக்கர்கள் சந்திரனின் இருண்ட பகுதியில் என்ன இருக்கிறது என்பதை உலகுக்குச் சொல்லாமலே இருட்டடிக்கிறார்களே அங்கே போய் உண்மையைக் கண்டுகொண்டு வந்தால் என்ன என்று நமது நாட்டு அறிவுக் கருவூலங்கள் எண்ணின.

அவ்வளவுதான்! இந்த அகண்டபாரதகண்டத்தில் விஞ்ஞானிகள் தங்கள் இரு கைகளாலும் தங்கள் மூளைகளை இரவு பகலாய்ப் பிசைந்து கொண்டார்கள். அவர்கள் கைகளுக்குள் அடங்காத பெரிய மூளையை உடைய விஞ்ஞானிகளின் மூளைகளை அவர்களின் அஸிஸ்டெண்டுகள் கூடச் சென்று பிசைந்தார்கள்.



கேசி



ஹாஸ்ய பாவம்

மிகைபட நகைப்பதும், பிறர் நகைக்கச் செய்வதும், புருவங்கள் நெரிய விலாவைப் பிடித்துக் கொள்வதும். — சிலப்பதிகாரம்: அடியார்க்கு நல்லார் உரை

நம் நாட்டில் கண்டு பிடிக்க முடியாத ஒரு விஞ்ஞான ரகசியம் உண்டா என்ன? புதிதாய் மேற்கே என்னத்தைக் கண்டு பிடித்து விட்டார்கள்? எல்லாம் 'நம்ப' தஞ்சாவூர் சரஸ்வதி மகாலிலிருந்து அவர்கள் திருடிக் கொண்டு போனது தானே? உடனே பிடித்தது அனர்த்தம் தஞ்சாவூர் சரஸ்வதி மகாலுக்கு!

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் விஞ்ஞான நிபுணர்கள் சரஸ்வதி மகாலை முற்றுகை யிட்டார்கள். பழைய ஓலைச் சுவடிகளை எல்லோரும் பார்ட் பார்ட்டாய்க் கழற்றினார்கள். சுருங்கச் சொன்னால் ராஜ ராஜ சோழன் சிலைத் திறப்பு விழாவுக்கு எவ்வளவு ஆர்ப்பாட்டம் நடந்ததோ, அதற்கு மேல் ஒரு அரைப் பங்கு நடத்தி, ஊரையே ஒரு கலக்குக் கலக்கி விட்டார்கள். என்ன ஆச்சரியம்! பாற்கடலைக் கடைந்தபோது அமிர்தம் வெளிப்பட்டது போல், விஞ்ஞானிகள் சரஸ்வதி மகால் லைப்ரரியைக் கடைந்து அலசியபோது அம்போலோ வெளிப்பட்டது. அதாவது அதை உருவாக்கும் முறையைக் கண்டு பிடித்து விட்டார்கள்.

இரண்டே மாதம்! இப்பொழுது நம் ராக்கெட் தளமான தும்பாவுக்குப் பக்கத்





தில் சும்மா கிடந்த 'ஜிம்பக ஜிம்பா' என்ற பகுதியில் அம்போலோ ஜம்மென்று விண்ணை நோக்கித் தன் மகால் மூக்கோடு நின்றது. அதைச் சுற்றிப் பதினெட்டு யோசனை தூரத்துக்குக் கருட வியூகத்தில் காவல் துறை வீரர்கள் இரவு பகலாய், கண்களில் விளக்கெண்ணெய் கிடைக்காத காரணத்தால் ரேடியோ ஆயிலையோ, டிரான்ஸிஸ்டர் ஆயிலையோ விட்டுக் கொண்டு காவல் காத்தார்கள்!

அம்போலோவைக் கண்டு பிடித்தாலும் பிடித்தார்கள். நாட்டில் ஏக அமளி, புரட்சி, கூச்சல், கொந்தளிப்பு, குழப்பம். எலெக்ஷன் நடந்தால் என்ன ஒரு 'அமைதி' நிலவுமோ அப்படி இருந்தது இந்தப் பரத கண்டம். விஷயம் என்ன என்கிறீர்களா?

சந்திரனுக்குச் செல்ல மக்களிடையே போட்டா போட்டி.

இமயம் முதல் குமரி வரை நாடு கொந்தளித்த கொந்தளிப்பில் பிரதமரின் மனம் வெந்து, நொந்தது, கைகளைப் பிசைந்தார். நெற்றியைச் சுருக்கிக் கொண்டார். ஓயாத சிந்தனையில் ஈடுபட்டார். வேறு எதற்கு? நாட்டில் அமைதியை நிலைநாட்ட என்ன வழி என்று கண்டு பிடிக்கத்தான்!

இங்கேதான் நமது தென்னக எம். பி. ஒருவருக்கு அதி அற்புதமான யோசனை ஒன்று தோன்றியது. ராவோடு ராவாக டில்லிக்குப் பறந்து பிரதமரைச் சந்தித்துத் தான் சொல்லப் போகும் யோசனையால் நாட்டில் நிலவும் அமளியை ஒரு க்ஷணத்தில் அடக்கி விடலாம் என்றும், தனக்கு இன்ன போர்ட்ஃபோலியோவைக் கொடுத்து மந்திரியாக்கினால் அதைத் தெரிவிப்பதாகவும் கூறினார்.

பாவம், பிரதமர் என்ன செய்வார்? மறுநாளே மத்திய அமைச்சரவையில் ஒரு சிறு மாற்றம்! தென்னக எம். பி. மத்திய மந்திரியானார்! விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டதும் பிரதம மந்திரி உட்பட அவர் தமது யோசனையைக் கூறப் போகிறார் என்று ஆவலுடன் காத்திருந்தார்கள். ஆனால் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்ட நிகழ்ச்சிக்குப் பிறகு அவரைத் திடீரென்று காணவில்லை!



டில்லியே திடுக்கிட்டது. நாட்டில் அமைதி நிலவப்படுவதை விரும்பாத பிற்போக்குச் சக்திகள், நக்ஸலைட்டுகள், குடுமுருட்டிக் குண்டர்கள் யாரோ அந்தப் புதிய மந்திரியைக் கடத்திச் சென்று விட்டார்கள் என்ற வதந்தி குடிசைத் தீயாய்ப் பரவியது.

இந்த நேரத்தில் சென்னை செல்லும் விமானத்தில் அவரைக் கண்டதாகச்



செய்திகள் வந்தன. மாலை 6 மணி சுமாருக்கு அந்தக் காணாமற் போன மந்திரியே தம் நண்பர்கள் புடைசூழப் பிரதம மந்திரியைக் காண மலர்மாலைகளுடன் வந்திருந்தார்! மந்திரியானவுடன் சென்னையில் அவரது தலைவரின் சமாதிக்குப் பறந்து சென்று மலர் வளையம் சாத்தி அன்னாருடைய ஆசியுடன் பிரதமரைக் காண வந்துள்ளார்! எப்படி?


பார்லிமெண்ட் ஹவுஸே ஆவலாய் நிற்க, ஒரே வார்த்தையில் தமது யோசனையை வெளியிட்டார் புதிய மந்திரி.

புதிய மந்திரி அந்த அற்புத யோசனையை உரைத்ததும் அந்த மண்டபமே இடிந்து விழுந்து விடும்போல் கரகோஷ ஒலி கிளம்பிற்று. விண்ணை முட்டிற்று. அவரைத் தூக்கித் தோள் மேல் வைத்துக் கொண்டார்கள்.

அப்படி அதியற்புதமாய் அவர் சொன்ன யோசனைதான் என்ன? எல்லாம் நமக்குத் தெரிந்ததுதான்.

''லாட்டரி!''

''ஆமாம்! லாட்டரிதான். அம்போலோ 555 லாட்டரி! நான்கு முதற் பரிசுகள்! நான்கு பேர்களுக்குப் பரலோக யாத்திரை (தயவு செய்து வேறு மாதிரி யாரும் எண்ண வேண்டாம். சந்திரன் நமக்குப் பிற லோகம்தானே... பிற என்ற சொல் தமிழ் இலக்கணப்படி மருவியோ, உருவியோ பர என்றாகி விட்டது!) சந்திரனுக்குச் சென்று



நீங்கள் செஸ் ஆடத்தெரிந்தவரா? அப்படியானால் இந்தப் புதிரை விடுவிக்கப் பாருங்கள், உங்களிடம் எட்டு ராணிகள் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒன்றையொன்று வெட்ட இயலாதபடி வைக்கவேண்டும்.
-கே. பத்மநாபன்

[விடை அடுத்த பக்கம்]

திரும்பியதும் (?) தலைக்கு நான்கு லட்ச ரூபாயும் இம்பாலா காரும்!

எப்படி ஐடியா?

சந்திரனுக்குச் செல்ல லாட்டரி மூலம் ஆட்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து மேலே அனுப்பத் தீர்மானித்ததும், மத்திய சர்க்காரில் லாட்டரி அடிக்க என்று... ஒரு தனி இலாகா ஏற்படுத்தப்பட்டது. லாட்டரி டிக்கெட்டுகள் நிறம், அதன் எண்ணிக்கை, விற்பனை, கமிஷன், விளம்பரம் ஆகியவற்றைக் 'கவனிக்க' அன்றே 53 கமிட்டிகளும் 96 உப கமிட்டிகளும் நியமிக்கப்பட்டன.

லாட்டரி டிக்கெட்டுகள் வெளியான இரண்டே வாரங்களில் 100 கோடி டிக்கெட்டுகள் காலி!

ஒரு சுபயோக சுப தினத்தில் ராஷ்டிரபதி பவனில் குலுக்கல் விழா நடந்தது.

நான்கு பெயர்களுக்கு அதிர்ஷ்டம் அடித்தது. அவர்கள் யார் யார் தெரியுமா? மண்ணடியில் டீக்கடை வைத்திருந்த முனுசாமி, குஜராத்தில் லாண்டரி வைத்திருந்த தங்கவேலு. டில்லியில் புரொபஸராயிருந்த பொன்னுதுரை, அவரிடமே படித்துக் கொண்டிருந்த காமேஷ்!

ஆறு மாத காலம் அவர்களுக்குப்பயிற்சி அளிக்கப்பட்டு இன்று மேலே போக இருக்கிறார்கள். இந்தக் கட்டடத்தில்தான் புரொபஸர் ஜன்னலுக்கு வெளியே அம்போலோவைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

லாண்டரி தங்கவேலுவும், வெளியே பார்த்துக் கொண்டிருந்தார். வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. எங்கே பயணம் தடைப்பட்டு விடுமோ என்று அவருக்குப் பயம். லாண்டிரியை விட்டு வந்த பிறகும் இன்னும் அவரை மழை பயம் விட்டபாடில்லை!

டீக்கடை முனுசாமி — பாவம் பூமியின் ஆகர்ஷண சக்திக்குச் சவால் விட்டு மேலும் கீழுமாய் சைடு வாக்கில் டீ ஆற்றி ரொம்ப நாளாயிற்று!

சரியான குளிகையில் அம்போலோ 555 சீறிக்கொண்டு ககன வெளியில் பாய்ந்தது. அகண்ட இந்தப் பரத கண்டமெங்கும் குதூகலம்... கோலாகலம்...

மேலே காமேஷையும் லாண்டரிக்காரரையும் தாய்க் கலத்தில் சுற்ற விட்டு விட்டு புரொபஸரும் டீக்கடையாரும் சந்திரனின் பின்புறம் தங்கள் நட்டுவாக்கிளி வண்டியில் (அப்போலோவின் பூச்சி வண்டி போன்றது) போய் இறங்கினார்கள்.

சந்திரனின் பின் பகுதி மிக மிக அழகாய் இருந்தது. சீரான காற்று எங்கிருந்தோ வீசி ஏர் கண்டிஷன் செய்த இடம் போல் ஒரு பிரமையைத் தோற்றுவித்தது.

''வருக! வருக! உங்கள் வரவு நல்வரவு ஆகுக!'' என்ற தமிழ்க் குரல் கேட்டு இருவரும் திடுக்கிட்டார்கள்.

திரும்பிப் பார்த்தால் சர்க்கஸ் குள்ளன் போல் ஒருவன் அவர்களைப் பார்த்துப் புன்னகைத்தபடி நின்று கொண்டு இருந்தான். தன் கையால் அவர்களைப் பயப்பட வேண்டாம் என்று கூறியவன் அவர்களைத் தன்னைப் பின்பற்றுமாறு கூறினான். இருவரும் கனவில் நடப்பது போல் அவனைப் பின்பற்றினார்கள்.

பிறகுதான் அவர்களுக்குப் பல விஷயங்கள் புரிந்தன. அவர்களை அழைத்துச் சென்ற குள்ளன் அண்டங்களில் இருக்கும் பல நாடுகளின் மொழி அறிந்தவனாம். அவர்களின் அம்போலோ பூமியிலிருந்து புறப்பட்டது முதல் சந்திரனின் பின் பகுதியில் வந்து இறங்கியது வரை எல்லாவற்றையுமே 'மூனவிஷனில்' பார்த்து விட்டார்களாம். இப்போது மூனலியா நாட்டுப் பிரசிடெண்டும் (அதுதான் அவர்கள் நாட்டுப் பெயராம்) பார்லிமெண்டும் பூமியிலிருந்து வந்துள்ள விருந்தினர்களைச் சந்திக்கப் பார்லிமெண்ட் ஹவுஸில் காத்திருக்கிறார்களாம்.

பிரும்மாண்டமான கட்டிடத்தின் வாயிலில் அந்தக் குள்ளன் போய் நின்றதும் அதன் கதவுகள் டக்கென்று திறந்துகொண்டன. அதனுள் நுழைந்த புரொபஸருக்கும் டீக்கடையாருக்கும் முதலில் ஒன்றுமே புரிய



''உங்கள் வீட்டுச் சமையல்அறையில் ஜன்னல் கண்ணாடி உடைந்திருக்கிறதே?''

''அது என் கணவரால் வந்த வினை. நான் நேற்று ஒரு கரண்டியை வீசிய போது அவர் 'டக்'கென்று குனிந்து கொண்டுவிட்டார்!''
- ஏ. வி. தேவன்

தாமதமேன், தருணமே
கண்டுகொள்வீர் தரத்தில்
உயர்த்தியான காலமைன்.





புதிய லக்மே காலமைன்

மூவகைச் சரும நிறங்களில் வருவது
லக்மே காலமைன் ஒன்றுதான்.

லகுவாக சருமத்தோடு இழைந்திடும்
லக்மே காலமைன்

மென்மணம் கமழ்கிறது லக்மே காலமைன்.
உயர்த்தியிலும் உயர்த்தியானதே
உகந்தது உமக்கு லக்மே காலமைன்.

- உயர் வண்ணச் சாயல்கள்.
- உயர்த்தியான நறுமணம்.
- உயர்த்தியான பரவல் திறம்

எழிலோடு மருந்திழையும்
முழு நாள் முலாம்.

Lakmé

daCunha/L·C/125/Tam.

மலர்ந்து மணம் பரப்பும் தருணம்

யூனிட்டுகளின் ஜூலை விசேஷ விலை ரூ 11·50 மட்டுமே.



இப்பொழுது யூனிட்டுகள் மிகக் குறைந்த விலையான ரூ 11.50க்கு கிடைக்கிறது. இதுவே இவ்வாண்டின் மிகக் குறைந்த விலையாகும். எனவே மற்ற நேரங்களைவிட ஜூலையில் உங்கள் பணத்திற்கு அதிகமான யூனிட்டுகள் கிடைக்கும்.

யூனிட்டுகள் எதிர்பார்ப்புக்கும் மேலான நன்மைகள் பல கொண்டது

உங்கள் முதலீடு பாதுகாப்பாக இருக்கும். உங்கள் முதலீட்டுக்கு நிரந்தரமான நல்ல வருமானம் கிடைக்கும். எப்பொழுது வேண்டுமானாலும் யூனிட்டுகளை எங்களிடம் பணமாக்கிக் கொள்ளலாம். அனைத்துக்கும் மேலாக யூனிட்டுகள் பிரத்யேக வரிச் சலுகைகளையும் அளிக்கிறது.

வளரும் யூனிட் குடும்பத்தில் இப்பொழுதே சேர்ந்திடுங்கள்

10 லட்சத்துக்கும் மேலான மக்கள் ரூ. 520 கோடிக்கும் அதிகமான தொகையை யூனிட்டில் முதலீடு செய்துள்ளார்கள். யூனிட்டுகளை எங்களிடம் நேரடியாகவோ, முக்கிய வங்கிகள், தலைமை தபால் நிலையங்கள் அல்லது எங்கள் முக்கிய பிரதிநிதிகள் மற்றும் ஏஜெண்டுகள் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

யூனிட் ட்ரஸ்ட் ஆப் இந்தியா

தலைமை செயலகம்: பம்பாய்-400 020.
(பொதுவுடமை நிதி நிறுவனம்)
ரெஜிஞ மான்ஷன்,
46, செகண்ட் லைன் பீச்,
சென்னை-600 001. போன்: 27433

UTI-194-81 Tam

எங்கள் தலைமை பிரதிநிதிகள்: ஏ. தனபால், 10 டே. ஷெரீப் ரோடு, கோயம்புத்தூர் 641 018, போன்: 34776 (கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களுக்காக) எம். ராமமூர்த்தி, 30, எல்.ஐ.சி.காலனி, மதுரை-625 002 (மதுரை மாவட்டத்துக்காக) கே. முத்துஸ்வாமி, 52-ஏ, வ.உ.சி. நகர், தஞ்சாவூர்-613 007. போன்: 1224 (தஞ்சாவூர் மாவட்டத்துக்காக)

உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாக இருக்கட்டும்.

வில்லை. அவர்கள் உள்ளே நுழைந்ததும் அந்த மண்டபமே இடிந்து விழுந்து விடும்போல் கரகோஷம். மூனுலியா பிரசிடெண்ட் ஏறத் தாழ நம் ஏர் இண்டியா மகாராஜாவைப் போல் இருந்தார். எழுந்து அவர் பூமியிலிருந்து வந்த விருந்தினர்களை வரவேற்று ஐந்து நிமிஷம் ஏதோ பேசினார். பின்பு குள்ளன் புரொபஸரைப் பார்த்து அவரைப் பேசுமாறு கூறினான். புரொபஸருக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. முதல் நாள் மூன்று மணி நேரம் நோட்ஸ் எடுத்து வைத்துக் கொள்ளாமல் அவரால் அரை மணி நேரம் கூடப் பேச முடியாது. இப்போது திடுதிப்பென்று பேசச்சொன்னால்? கைகளைப் பிசைந்தார் புரொபஸர். டீக்கடையாருக்குப் பொறுக்கவில்லை. ''என்னங்க, நீங்க... ஒரு நாட்டுப் பிரசிடெண்ட் இன்னொரு நாட்டுக்குப் போனா இன்னா பேசுவாரு உங்களுக்குத் தெரியாதா சர்த்தான்... தந்தியே படிக்கிறதில்லே போல இருக்கு...'' என்றவாறு திடீரென்று மைக்கின் முன்னால் போய் நின்று பேச ஆரம்பித்து விட்டார். தனக்குத் திடீரென்று இப்படி ஒரு 'சிங்கிள்' சான்ஸ் கிடைத்தது பற்றி டீக்கடையாருக்குப் படு குஷி!

புரொபஸரையும் டீக்கடையாரையும் மூனுலியா நாட்டவர்கள் கட்டாயப்படுத்தி அவர்கள் விருந்தினராய் ஒரு மாதத்துக்கு மேல் அங்கேயே தங்க வைத்து விட்டார்கள்.


மேலே தாய்க் கலத்தில் சுற்றிக் கொண்டிருந்த காமேஷும் லாண்டரி தங்கவேலும் துடித்தார்கள். கீழே போனவர்கள் என்ன ஆனார்கள், ஏதானார்கள் என்பது பற்றி ஒரு விவரமும் தெரியவில்லை. சுற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டு புரொபஸருக்கும் டீக்கடைக்கும் இரு டம்ளர் ஜலமும் எள்ளும் வார்த்து விட்டு அவர்கள் பூமியைப் பார்க்கத் தங்கள் கலத்தில் வருத்தத்தோடு திரும்பிப் போய் விட்டார்கள்.

'மூனுலியா' நாட்டு விஞ்ஞானிகளைக் கண்டு புரொபஸர் வியந்தார். 'விடிகுடிப்பிடிவோடாமி' எனர்ஜி (நமது அட்டாமிக் எனர்ஜிக்கு முப்பாட்டன்களுக்கும் முப்பது பாட்டன்கள் போன்றது) என்பதன் உதவியால் அவர்கள் எதை எதையெல்லாமோ சாதித்து வைத்திருந்தனர்.

நாம் ஓர் அறையை ஏர் கண்டிஷன் செய்திருப்பது போல் அவர்கள் தங்கள் நாட்டையே ஏர் கண்டிஷன் செய்து வைத்திருந்தார்கள். ஒரு குழாய் மாத்திரையை (காப்ஸ்யூல்) போட்டுக் கொண்டால் இரண்டு ஆண்டுகளுக்குப் பசிக்காது! இப்படிப் பலப்பல அதிசயங்கள்.

கடைசியில் புரொபஸரையும் டீக்கடைக்காரரையும் பிரியாவிடை கொடுத்துத் தங்கள் நாட்டு விண்வெளிக் கப்பலான மூனுலோவில் அனுப்பினார்கள். தங்கள் நாட்டு விண்வெளிவீரர்கள் இருவரையும் துணைக்குப் பூமிக்கு அனுப்பி வைத்தார்கள்.

மூனுலோவின் வேகம் படு பயங்கரமாக இருந்தது. கிளம்பிய 20 மணி நேரத்துக்குள் பூமிக்கு வந்து சேர்ந்து விட்டார்கள். இப்போது இரவு மணி மூன்று இருக்கலாம்.



புரபஸர் என்ன வற்புறுத்தியும் மூனுலியா நாட்டு விண்வெளி வீரர்கள் பூமிக்கு இறங்கி வர மறுத்து விட்டார்கள். புரபஸரையும் டீக்கடையாரையும்பத்திரமாய்ச் சென்னைக்கு அருகே பாராசூட்டில் இறக்கிவிட்டுப் போய் விட்டார்கள்.

பாராசூட் மெல்லமெல்ல இறங்கிக்கொண்டிருந்தது. காற்று வேகமாக அடிக்கவே டீக்கடையார் ஒரு புறமும், புரபஸர் வேறு புறமுமாய்ப் பிரிய, புரபஸர் பாராசூட்டில் ஒரு பெரிய தோட்டத்தின் மத்தியிலிருந்த ஓர் அகன்ற கிணற்றின் மேலே நேரே வந்து இறங்கினார். என்ன கையைக் காலை உதறியும் நேராய்க் கிணற்றுக்குள் இறங்கி விட்டது பாராசூட். கிணற்றில் அப்படி ஒன்றும் தண்ணீர் இல்லை. முழங்கால் அளவுக்குத்தான் இருந்தது. எப்படியோ தட்டுத் தடுமாறிச் சரிவு படிகளில் ஏறி மேலே வந்தார் புரபஸர். உடனே—

காதைப் பிளக்கும் போலீஸ் விசில். திமுதிமுவென்று போலீஸ் பட்டாளம் ஒன்று ஓடிவந்து கிணற்றைச் சூழ்ந்து கொண்டு மேலே ஏறிவரும் புரபஸரைப் பிடித்துக் கொண்டது. அவருக்கு ஒன்றும் புரியவில்லை. தான் டில்லியில் ஒரு புரொபஸர், அம்போலோ 555ல் சந்திரனுக்குப் போய்விட்டுத் திரும்பி வருவதாய்ச் சொன்னதை அவர்களில் எவரும் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை!

''பூ! படா ஷோக்கா ரீல் வுடுறியே வாத்யாரே... வா... டேசன்ல வந்து நம்ப இனிசிபெட்டர் அய்யா கையுல வந்து உன் பிலானையெல்லாம் உடு. சந்திரனுக்குப் போயிட்டு வராராமே....'' என்று அவரை வலுக் கட்டாயமாய் போலீஸ் ஜீப்பில் ஏற்றி உட்கார வைத்து ஸ்டேஷனுக்குச் சென்று விட்டனர்!

பாவம் புரொபஸர்! தமிழ் நாட்டில் கொடிய தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு நிலைமை கட்டுக்கடங்காமல் போய் அரசாங்கம் சடாரென்று தமிழ் நாட்டிலிருந்த அத்தனை (வீட்டுக்) கிணறுகளையும் அரசாங்க உடைமையாக்கி, அக்கிணற்றிலிருந்துஇரவில் திருட்டுத்தனமாய்த் தண்ணீர் எடுப்பவர்களைக் கைது செய்யக் கிணற்றுக்குப் பத்து பேராய் போலீஸ் காவல் போட்டிருக்கிறது என்று அவருக்கு எப்படித் தெரியும்?



31. மலைநாடு நோக்கி....

அவன் பாண்டிச்சேரியில் நிற்க வேண்டியவன். மோகன் கேட்டுக் கொண்டதால் விட்டுக்கொடுத்தான். மேட்டூரில் நின்றிருக்கலாம். மோகன் தடுத்துவிட்டார். அவ்வளவு பெரிய வெள்ளத்தில் அவனுக்கு எந்தப் பங்குமில்லை.

அவன் வயலை உழுவான்; நாற்று நடுவான்; அறுவடையை மட்டும் மற்றவர்கள் நடத்திக் கொள்வார்கள்.

நினைத்துப் பார்த்தால் அவனுக்குச் சம்பந்தமே இல்லாத வேலையை நீண்ட நாட்களாகச் செய்து வந்திருக்கிறான்.

இந்திய ஜனநாயகத்தில் எல்லா வேலைகளும் செய்யத் தெரிந்தவன் மட்டுமே அரசியலில் ஈடுபடலாம். அரசியலில் ஈடுபட்டும் பணம் சேர்க்கத் தெரியாவிட்டால், அவனைவிட மடையன் வேறு எவனுமே கிடையாது.

நூற்றுக்குப் பத்துப் பேர் யோக்கியர்களும் இருக்கிறார்கள். மற்ற அரசியல்வாதிகளால் அவர்கள் கோமாளிகளாகவே மதிக்கப்படுகிறார்கள்.

நேற்றுவரையில் அவன் பார்த்த அரசியல், அயோக்கியர்களின் புகலிடமே!

இப்படி அவன் சொல்லும்போது அவன் தாயார் சொல்லுவார்கள், "நீ முட்டாள்! மற்றவர்களை ஏன் குறை சொல்லுகிறாய்?" என்று.

நல்லது. பதவியோ, பணமோ கிட்டவில்லை என்றாலும் அனுபவம் கிட்டிவிட்டதே! முட்டாள்களுக்குத்தானே நீண்ட வரலாறு கிடைக்கும்!

ஊரெல்லாம் ஜெயிக்கயிலே நமக்கு மட்டும் இடமில்லையே என்ற ஆதங்கம் அவனுக்கு இருக்கத்தான் செய்தது. அவனுக்கு மட்டுமா சி. எஸ். ஸுக்கும் அது இருக்கத்தான் செய்தது.

ஆனால் அவருக்குக் கவலை என்ன?

மேலிடத் தலைவர்களுக்கு எது கிடைக்காது!

தீர்த்தகிரி கவுண்டரை ராஜிநாமா செய்யச் சொல்லி, கிருஷ்ணகிரி தொகுதியில் நின்றுவிட்டார். எந்தக் கட்சியும் போட்டியிடவில்லை. சுயேச்சைகள் தேனில் விழுந்த ஈயானார்கள். ஒரே ஒரு சுயேச்சை அகப்படவில்லை. தேர்தல் நடந்தே தீரவேண்டி இருந்தது.

அவனும் கிருஷ்ணகிரிக்குப்போயிருந்தான். அங்கே பேசுவதற்கு என்ன இருக்கிறது?

சி. எஸ். நிச்சயமாக ஜெயிக்கப் போகிறார். அவரை மனதார வாழ்த்திவிட்டுத் திரும்பிவிட்டான்.

பாவம், எம். ஜி. ஆர். பகலும் இரவும் சுற்றுப் பயணம் நடத்தினார்!

முடிவு எதிர்பார்த்த மாதிரியே! அடுத்த கட்டம் சி. எஸ். நினைத்த மாதிரியே!

ஆம்; சி. எஸ். மந்திரியாகி விட்டார்!

தமிழக இந்திராகாங்கிரஸ் என்பது என்ன? அதில் அவன் பங்கு என்ன? சூன்யத்தில் ஒரு சர்க்கஸ்; அவ்வளவுதான்!

அவனது வேலை கெட்டது மிச்சம். உடனே ரோஷமும் பொத்துக்கொண்டுவந்தது. ஏராளமான கவிதைகள் எழுதினான். எல்லாவற்றையும் 'குமுதம்' பிரசுரித்தது. குமுதத்தில் வந்த கவிதைகளே ஒரு தொகுதியாயின.

அந்தக் காலத்து உடல் வலிமை அசாதாரணமானது. அதனால் பழக்க வழக்கங்களும் அதிகமாயின.

அவனிடமிருந்து சில வார்த்தைகளைக் கேட்க மாட்டோமா என்று ஆசைப் பட்டவர்கள்; அவன் ஒரு பாட்டுப் பாட மாட்டானா என்று ஆவலோடு நின்றவர்கள் அனைவரையும் அவன் சந்தித்தான்.

அவன் சொன்னதெல்லாம் பொன் மொழியாயிற்று. போட்ட கோடெல்லாம் கவிதையாயிற்று.

மீண்டும் மீண்டும் அரசியலில் விவஸ்தை இல்லாமல் தொடர்பு வைத்துக் கொண்டான்.

கருணாநிதியின் பிறந்த நாள். அவன் தலைமையில் கவியரங்கம். ஹிருதயத்துக்குச் சம்பந்தமில்லாத கவிதைகள். கவியரங்கத்தில் பாடியவர்களோ, நாகரிகமே இல்லாதவர்கள். பாடிய கவிதைகளோ அபத்தம்.



மத்தியானத்தில் குடித்துப் பழகியதன் விளைவு, எதையும் எடை போடத் தெரியாமல் மளமளவென்று விழுவதிலே முடிந்தது.

அந்த அரசியலில் பயனில்லை என்றும் சொல்லிவிட முடியாது. எந்த விஷயத்தைக் கருணாநிதியிடம் சொன்னாலும் உடனடியாக அதை அக்கறையோடு கவனிப்பார். நிர்வாகத்தில் அவரைவிடத் துரிதமானவர்கள், கெட்டிக்காரர்கள் கிடையாது. காலை ஏழரை மணியிலிருந்து வருகிறவர்கள் எல்லோரையும் சந்திப்பார். அடுத்து எல்லா இலாகாக்களிலும் புகுந்து காரியமாற்றுவார். மாலையில் கூட்டங்களுக்கும் போவார். பிறகு வேடிக்கை விளையாட்டுக்களுக்கும் நேரம் ஒதுக்கிக் கொள்வார்.

அதிகம் வேலை உள்ளவனே, அதிகம் ஓய்வுள்ளவன் என்பது, இவர் வரையில் சரியே!

கருணாநிதி, அவனது மகனுக்குப் பல் மருத்துவப் படிப்பில் இடம் கொடுத்தார். பத்துப் பேருக்குமேல் அவனது சொந்தக்காரர்களுக்கு நண்பர்களுக்கு இடமளித்தார். ஆனாலும் அவரது பிறந்த நாளில் தலைமை வகிக்கும் அவனை அவரது கட்சிக்காரன் என்பவன் அவமானப் படுத்தினால், அதை வேடிக்கை பார்த்தார்.

இது அவரது சுபாவமல்ல, அரசியல் சுபாவம்!

1971ம் ஆண்டு அவன் வாழ்வில் அற்புதமான ஆண்டு. படித்தவர்களாலும், பாமரர்களாலும், பாவலர்களாலும், பாவையராலும் அவன் புகழப்பட்ட ஆண்டு அது.

அர்த்தமுள்ள இந்து மதம் அளவுக்குமேல் விற்ற ஆண்டு அது. அந்த ஆண்டில்தான் மலேஷிய நாட்டில் சுற்றுப் பயணம் செய்யும்போது, அன்றைய 'தமிழ் நேசன்' ஆசிரியர் திரு முருகு சுப்பிரமணியம் அவனுக்கொரு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

உலகத்திலேயே அவன் பார்க்க விரும்பிய நாடுகள் மலேஷியா, சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தோனேஷியா, ஹாங்காங், ஜப்பான், கம்போடியா ஆகியவையே.

அழைப்புக் கிடைத்ததும் அவன் ஏராளமான நாடுகளுக்கு டிக்கெட் எடுத்துக்கொண்டான். கூடவே அரசு நாச்சியப்பனுக்கும் டிக்கெட் எடுத்தான்.

எந்த ஊருக்குப் போவதென்றாலும் ஒரு ஆள் துணையில்லாமல் அவன் போக முடியாது.

எல்லா ஊர்களுக்கும் விமானத்தில் முதல் வகுப்பு. மலேஷியாவில் போய் இறங்கிய போது காலநிலை மிகச் சுகமாக இருந்தது.

கடவுள் மலேஷியாவுக்கு அளித்த வரம் பன்னிரண்டு மாதமும் அங்கு சீஸன் ஒரே மாதிரி இருக்கும்.

ஒரு மணி நேரம் கடுமையான வெயிலடித்தால், அடுத்த ஒருமணி நேரம் மழைபெய்யும். மாதம் மும்மாரி என்பது அந்த நாட்டுக்குத் தான் பொருந்தும்.

நீண்ட காலமாகவே தமிழர்களுக்கு அங்கு நெருங்கிய தொடர்புண்டு. மலேஷிய மகாராணியின் பெயரே ஒரு தமிழ்ப் பெயர். 'மலேயா' என்ற பெயரே 'மலையகம்' என்பதிலிருந்து மருவியிருக்க வேண்டும். மலேஷிய மொழிக்குச் சொந்த லிபி கிடையாது.: ரோமன் லிபிதான். வார்த்தைகளில் பல தமிழ் வார்த்தைகள்.

மலேஷிய மண்ணை மிதித்ததும் விவரிக்க முடியாத ஒரு ஆனந்த உணர்வு ஏற்பட்டது. விமான நிலையத்துக்கு முருகு சுப்பிரமணியம், சித. கணபதி, கோலாலம்பூர் நகரத்தார்கள் ஆகியோரோடு அவனது மருமகனும் வந்திருந்தார்.

இந்தியாவைத் தவிர பிற நாடுகளில் சுங்கச் சாவடி என்பது மிகச் சுலபமானது. ஐந்து நிமிஷத்துக்குள்ளேயே சடங்குகளை முடித்து விடுகிறது. எல்லாவற்றையும் விட மலேஷியா வேகம். அங்கே கடுமையான குற்றத்துக்குரிய பொருள், கஞ்சா போன்ற மயக்கப் பொருள்கள் மட்டுமே. வேறு எது இருந்தாலும் அவர்கள் கவலைப்படுவதில்லை.

அற்புதமான விமான நிலையத்தின் வெளிப்புறத்துக்கு வந்தபோது அந்தக் குளிர்ந்த காற்று மெய்மறக்கச் செய்தது.

ஒரு இந்தியன் உலகத்தின் எந்த நாட்டுக்குப் போனாலும், இந்தியாவின் மீதுமோசமான அபிப்பிராயம் தோன்றிவிடுகிறதே, அது சரிதானா? மற்ற எல்லா நாடுகளும் இந்தியாவைவிட நன்றாக இருக்கின்றனவா?

(வளரும்)




ராஜராஜன் கிணற்றில் என்ன இருக்கிறது?

''கிணற்றின் தண்ணீர் நோட்டு அச்சடிக்க உபயோகமாகும் வகையில் சிறப்பான ரசாயனத் தன்மை பெற்றுள்ளது'' என்று பொருள்படச்சரியான விடையை எழுதியவர்கள் ஏழு பேர். ரூ. 500 பரிசைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

1. என். ராஜலக்ஷ்மி, மதுரை-10
2. வி. பஞ்சாபகேசன், திருச்சி - 620030
3. ஏ. வி. சுந்தரம், பொள்ளாச்சி
4. ஆர். பூமா, டெவிபோன்ஸ், பொள்ளாச்சி
5. வி. சந்தானம், பொள்ளாச்சி
6. வி. சரோஜா, பொள்ளாச்சி
7. ஸ்ரீ. சேஷன், சென்னை-18.

போட்டி முடிவு



''அந்தி நேரத்து உதயங்கள்'' — பெயரே வித்தியாசமாகத் தெரிகிறதே! கதையும் வித்தியாசமாகத்தான் இருக்கும்.

சந்திரநாத் எழுதும் டிடெக்டிவ் ஸ்டோரி த்ரில்லிங்காக இருக்கிறது. ஜெயராஜின் அட்டைப் படம் அபாரம்.

நெய்வேலி —வானதி

முதல் அத்தியாயத்திலேயே ஒரு நான்கு இடங்களிலாவது பச்சையும் கொச்சையுமாய் எழுதாவிட்டால் மர்மத் தொடர்கதை(!) சுவைக்காது என்று சந்திரநாத் முடிவுக்கு வந்துவிட்டாரா என்ன!

கரைம்பட்டி சி. செல்வராஜ்

''மொளகாய்ச் சாத்து'' போன்ற கதைகளை வெளியிடும் உங்களைப் போன்ற 'அக்ரஹார' மண்டைகளைத் திருத்துவதற்குத் தந்தை பெரியார் போன்று பலபேர் பிறக்க வேண்டும்.

கிழக்குமரேசபுரம் இலால்குடி நாகராசன்

''மொளகாய் சாத்து'' சிறுகதை ராஜேஷ்குமாரின் கற்பனையாக இருக்கலாம். ஆனால், இது போன்ற நிகழ்ச்சிகள் உண்மையிலேயே நிகழ்ந்திருக்கின்றன. எங்களது வயலில் ஒவ்வொரு வருடமும் அறுவடையாகி வரும் நெல்லில் ஒரு படியை அரிசியாக்கி, பேச்சி அம்மனுக்குப் பொங்கல் படைப்போம். ஒரு வருடம் அவ்வாறு செய்ய மறந்தோம். விளைவு... அரிசி வைத்திருந்த சாக்கில், அரிசியுடன் குங்குமம் கலந்திருந்தது! பிறகு தவறு உணர்ந்து பொங்கல் படைத்தோம். என்ன ஆச்சரியம்! மறுநாளே அரிசியில் கலந்திருந்த குங்குமம் மறைந்துவிட்டிருந்தது!

மதுரை என். கண்ணன்

நியூஸ் ஜூஸ் பகுதியில் ரயில்வே அமைச்சரை நன்கு வாரிவிட்டீர்கள்! 'காற்றில் அம்மி பறந்தது' என்பது போன்ற கதைகளை ரயில்வே அமைச்சர் காதில் பூ சுற்றியவர்களிடம் போய்ச் சொல்லட்டும்!

கண்ணம்பாளையம் ஷீபா

நியூஸ் ஜூஸ் என்கிற தலைப்பில் ஈராக் அணு நிலையத்தை இஸ்ரேல் தாக்கியதைக் குறை கூறி எழுதப்பட்டுள்ளது. இதை எதிர்க்கிறேன். ஒரு சிறு நாட்டை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று அரபு நாடுகளும் முஸ்லிம் நாடுகளும் ஒருமுகமாக முயற்சி செய்வது எந்த விதத்தில் நியாயம்? எனவே தன்னைப் பாதுகாத்துக்கொள்ள இஸ்ரேல் இராக் அணுநிலையத்தைத் தாக்கியதில் என்ன தவறு?

விஜயவாடா கா. சுப்பிரமணியன்

இந்தியாவுக்கும் பிரஸ்ஸல்ஸிற்கும் விமானப் போக்குவரத்து ஆரம்பித்த நேரத்தில் 'ஏர் இந்தியா' மகாராஜாவின் தலைமேல் நேரடியாகவே ஜூலியன் சிறுநீர் கழிப்பது போல் விளம்பரப்படுத்த, ''இது நம் மகாராஜாவின் மதிப்பைக் குறைப்பது போலிருக்கிறது'' என்று பாராளு மன்ற உறுப்பினர்கள் ஆட்சேபணை தெரிவிக்கவே, பின்னர் மகாராஜா குடை பிடித்துக் கொண்டிருப்பது போல் விளம்பரத்தை மாற்றி அமைத்ததைத் தாங்கள் குறிப்பிடவில்லையே!

பெங்களூர்-5 அ. குமார்

'ரயில் பயணங்களில்' பட விமரிசனத்தில் வசனம், நடிப்பு, இசை, டைரக்ஷன் ஆகியவைகளுக்கு ரூ. 1—90. கொடுத்தது 2—90. தண்டம் ரூ. 1—00 என்று இருந்தது. அது தண்டமல்ல. தமாஷா வரி!

சென்னை-75. ''ரம்யா''

சினிமா விமர்சனத்துக்கு	0—25
சிறுகதைகளுக்கு	0—25
துணுக்குச் செய்திகளுக்கு	0—10
சிரிப்புகளுக்கு (அறுவைக்கு)	0—05
கடுகு பதில்களுக்கு	0—15
கவிதைக்கு	0—15
வட்டமேஜைக்கு	0—10
மற்றவைகளுக்கு	0—15
ஆகக்கூடி கல்கியின் விலை	1—20

பெங்களூர் பாரதி

சினிமா பாட்டில் Bottle பீறூட்டி Full போங்கள்!

திருவல்லிக்கேணி ''எம்பிரான்''

தில்லு முல்லுன்னு என்ன என்பது ஒரு கேள்வியா? இதற்குச் சிறந்த கேள்விக்கான பரிசா? என்ன சார் இது! ஒரே தில்லுமுல்லா இருக்கே!

திருவனந்தபுரம் எஸ்.எஸ். மணி

சபாஷ் கடுகு சார்! குடும்பப் பெண்களை ஏன் குத்துவிளக்கு என்கிறோம் என்பதற்கு அருமையான 'விளக்க'த்தை அளித்துவிட்டீர்கள். கைகுலுக்க விரும்புகிறேன். எங்கே அங்கிருந்துகொண்டே நீட்டுங்கள் பார்க்கலாம்.

களமருதூர் இணைவை ரமணி

'சுபா' எழுதிய 'அவஸ்தையின் ஆரம்பம்' கதை படித்தேன். இலக்கிய பூர்வமான பண்பு நலன்களையும் வாசகர் ரசிக்கும் புதிய பாத்திரங்களையும் அமைத்து ஒரு சிறப்பான சிறுகதையினைப் படைத்து விட்டார்.

திம்மராஜபுரம் என். ராமகிருஷ்ணன்

மன்னார்குடி விசுவநாதன் எழுதிய 'பரிசு' இவ்வார கல்கி இதழ் தந்த பரிசு.

தென்கரை பி.டி. சிதம்பரசூரிய நாராயணன்



(GOLDEN RENDEZVOUS) ஒரு கப்பல் சில கொலைகள்

பரபரப்பூட்டும் சாகஸங்கள் நிரம்பிய படம் என்றால் போதும், ''அலிஸ்டேர் மக்லீனின் மற்றுமொரு நாவல் திரைப்படமாகியுள்ளது'' என்று சொல்லிவிடுவீர்கள்! கதைச் சம்பவங்கள் சூதாட்டத்துக்கு எல்லையே இல்லாதிருக்கும் கரீபியன் ஸ்டார் என்ற கப்பலில் நிகழ்கின்றன. அது நாகரிகத்தின் உச்சியில் இருக்கும் பல பணக்காரர்களைத் தாங்கிச் செல்கிறது. பயணிகளில் ஒருசிலர் மர்மமான முறையில் கொலை செய்யப்படும்போது கப்பலின் முதல் அதிகாரி கார்ட்டருக்கு (ரிச்சர்ட் ஹாரிஸ்) சந்தேகம் தட்டுகிறது. இடையில் வந்து சேரும் ஓர் அழகிய இளம் பெண்ணின் உதவியுடன் மர்மத்தை விடுவிக்கிறான். நடுக்கடலில். வேறு ஒரு கப்பலை மடக்கி அதில் உள்ள தங்கப் பாளங்களைக் கொள்ளை அடிப்பது திட்டம். இதற்கென கரீபியன் ஸ்டாரில் அணுகுண்டு தாங்கிய ஏவுகணையையே பதுக்கியிருக்கிறார்கள். அதை இயக்க ஒரு விஞ்ஞானியும் இருக்கிறார். ஏவுகணையை இயக்கப்போவதாகப் பயமுறுத்தியே தங்கப் பாளங்களை அபகரித்துவிடுகிற சூழ்ச்சியைக் கடைசி விநாடியில் முறியடித்துவிடுகிறான் கார்ட்டர்!

-டி. எம். ஆர்.



காஷியர் ரகுவுக்குப் பணத்தாசை. வில்லன் ராஜாவுக்குப் பணமுடை. ஐந்து லட்ச டெபாசிட்டில் ரகு மூன்று லட்சத்தைக் கையாடுகிறான். மீதி இரண்டு லட்சத்தை ராஜா கொள்ளையடிக்கிறான். ஆனால் ஐந்து லட்சம் கொள்ளை போன தாய்ச் செய்தி அறிவிப்பு. திகைப்படைந்த வில்லன் ரகுவைத் துரத்த... நீண்ட நேரம் இருவரும் கண்ணாமூச்சி ஆடி.. .கொலை அது இது என்று போய் சப்பென்று முடிகிறது படம்.

ஒட்டுமீசை, லெதர் ஜெர்கின், ஹோண்டா பைக், நைலான் கயிறு, ரிவால்வர், எப்பவும் படம் எடுத்துக் கொண்டிருக்கும் செல்ல நாகப் பாம்புகள், புறாக்கள் என்ற இத்தகைய பரிவாரங்கள் இருந்தும் பாவம் வில்லன், யு.கே.ஜி. போல் இருக்கிறார் — நடிப்பும்தான்!

சொந்தமாய்ப் புதுக் காரும், தனி அபார்ட்மெண்டும் வைத்திருக்கும் 'ஏழை' காஷியர் பிரதாப் வெளுத்துவாங்குகிறார். 'நே விழிப்புதான் இன்னும் மூலதனம். இதுவரை செய்த கோணல் சிங்காரங்கள் போதும் என்பதை உடன் உணர்ந்து வழிமாற வேண்டியது இவருக்கு அவசியமாகிறது. கேட்பாரா? கமலதாவும், அஞ்சலியும் வந்து ....போகிறார்கள்.

பெரும்பாலும் இண்டோர் காட்சிகள். மிதமான லைட்டிங்கில் திவாரி அற்புதம் செய்கிறார். மார்ச்சுவரி, சுடுகாடு காட்சிகளில் பளிச்சிட சங்கர் — கணேஷுக்கும் எடிட்டர் வெள்ளைச்சாமிக்கும் வாய்த்திருக்கிறது.

இரண்டு பாடல்கள் டெம்போவைக் குறைத்த புண்ணியம் சேர்க்கின்றன. கண்ணாடியில் மனச் சாட்சி தோன்றுவது ஹைதர் கால டெக்னிக் என்பது சில இடங்களில் மின்னும் ராஜ்பரத்துக்கு எப்படித் தெரியாமல் போனது?

ஆங்கிலப் படம் பார்ப்பது போன்ற உணர்வுவரும். காரணம் நிறைய இடங்களில் வசனம் சுத்தமாய்ப் புரிவதில்லை. - சிந்து ஜீவா

பாரதியின் பெருந்தன்மை

பாரதி தேசிய கீதங்களைப் பாடி மக்களிடையே தேசாபிமானத்தை வளர்த்தான். கண்ணன் பாட்டுப் போன்ற தெய்வ கீதங்களைப் புனைந்தளித்துத் தெய்வ பக்தியை வளர்த்தான். ஒரே உலக உணர்வு கொண்டு சாதி — மதம் — தேசம் ஆகிய வரம்புகளையெல்லாம் கடந்து நின்று பெல்ஜியத்தையும் சோவியத் ருஷ்யாவையும் பாடி மனிதாபிமானத்தை வளர்த்தான்.

இன்னும் ஒரு படி மேலே போய், யோனி பேதங்களை யெல்லாம் மறந்து, ''காக்கை குருவி எங்கள் சாதி'' என்று பாடி ஜீவாபிமானத்தையும் போதித்தான்! இதிலே அவனுக்கிணை அவனே தான்!

தமிழுக்கு இத்தனை சிறப்புக்களை அளித்த பாரதியார், தமிழ் மொழியிடத்திலும் தமிழ் இனத்தவரிடத்தும் குறைகள் இருக்கின்றன என்றும் கருதினார். தமது கருத்தை வெளிப்படையாகவும் எழுதினார்; பேசினார். தமிழ் எழுத்துக்களில் க ச ட த ப என்னும் ஐந்தெழுத்துக்களுக்கு வட மொழியிலும் பிற மாநில மொழிகளிலும் உள்ளது போன்ற வர்க்க எழுத்துக்கள் இல்லாததைத் தமிழ் எழுத்து முறையில் உள்ள ஒரு குறைபாடாகக் கருதினார்.

அதனால், க ச ட த ப என்னும் ஐந்தெழுத்துக்களுடன் ஏதேனுமொரு முறையில் குறியீடுகளைச் சேர்த்து வர்க்க எழுத்துகளைப் படைக்க வேண்டும் என்று சொன்னார். இந்த ஆலோசனையைத் தம்முடைய தோழர் சுப்பிரமணிய சிவா நடத்திய ''ஞான பானு'' என்னும் மாதப் பத்திரிகையில் வெளியிட்டார்.

பாரதியாரின் பெரு மதிப்புக்குரியவரான தேச பக்தர் சிதம்பரனார் இதை எதிர்த்தார். அவரும் பாரதியின் கருத்தை ஏற்க முடியாததற்குக் காரணங்கள் காட்டி, சிவாவின் ''ஞான பானு''விலேயே நீண்டதொரு கட்டுரை எழுதினார். அதில் பாரதியாரின் கருத்தை வ. உ. சி. கொஞ்சம் கடுமையாகவே வாதித்தார். அதன் பிறகு தம்முடைய கருத்து தமிழிடத்தில் பற்றுடையவர்களின் மனத்தைப் புண்படுத்தியிருப்பதாகத் தெரிவதால், அதைத் தாம் கைவிட்டு—விடுவதாக ''ஞான பானு''வில் பாரதியார் எழுதினார்.

பாரதியார், ஆங்கிலச் சொற்கள் பலவற்றுக்குத் தமிழ் சொற்கள் கண்டுபிடித்து அவற்றை வழக்குக்குக் கொண்டு வந்தார்.

அவர் வாழ்ந்த காலத்திலே, கம்யூனிசம் என்னும் புரட்சிகரமான பொருளாதாரக் கொள்கை ஐரோப்பாவில் வெற்றி நடை போட்டது. ஜார் ருஷ்யா கம்யூனிச நாடாக மாறியது. அந்தப் புதிய ரஷ்யாவை வரவேற்றுப் பாடிய பாரதி, கம்யூனிசம் என்பதற்குப் ''பொது உடைமை'' என்னும் தமிழ்ச் சொல்லைப் படைத்தார்.

பாரதப் பெரு நாடு முழுவதுமே முப்பது கோடி மக்களின் பொதுவுடைமை என்று பாடினார். தனிவுடைமை, பொதுவுடைமை என்னும் சித்தாந்தங்களைத் தமிழில் மிகவும் எளிதாகவும், சுவையாகவும் கவிதை நடையிலும் உரை நடையிலும் விமர்சித்தார்.

(மயிலை இலக்கிய வட்டம் பாரதீய வித்யாபவனச் சொற்பொழிவிலிருந்து)

ம.பொ.சி



மனைவி செல்லம்மாளுடன் பாரதி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor : K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka